நன்றி - நூலகத்திட்டம்


SARINIHAR

சரிநிகர்

සරිනිහර්

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் - 185 நவ. 25 - டிசெ. 08 1999 விலை ரூபா 10. 00



# ஜனாதிபதித் தேர்தல்:
# சட்ட விரோதம்?




# அன்று நவாலி

# இன்று மடு!

# நிரந்தர யுத்தம்?
# நிரந்தர சமாதானம்?





நன்றி - நூலகத்திட்டம்



# சொல்லாதே யாரும் கேட்டால் !

வரணியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை உதயகுமார் என்ற 27 வயதுடைய, முடிதிருத்தும் தொழிலாளி கடந்த நவ.12ம் திகதியன்று தனது சலூனைப் பூட்டி விட்டு வரும் வேளையில், சுட்டி-புரத்தில் வைத்துச் சாதாரண உடையில் நின்ற இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார். பின்னர் இவரது சேர்ட்டைக் கழற்றிக் கண்களைக் கட்டிய இராணுவத்தினர் அடர்ந்த புதர்கள் நிரம்பிய பகுதிக்கு இவரை அழைத்துச் சென்று, இவரைத் தள்ளி வீழ்த்தி விட்டுப் பின்னர் முகாமுக்குக் கொண்டு சென்று அங்கு இவரது கைகளைப் பின்புறம் கட்டி விட்டு சம்பத் என்ற இராணுவ அதிகாரி அருகிலுள்ள கடைக்காரர்களின் விபரங்களையும், அவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்களா என்றும் கேட்டாராம். இவர் தெரியாது என்று சொன்னதும் பொல்லுகள், தடிகளால் தாக்கிச் சிகரெட்டால் சுட்டுச் சித்திரவதை செய்துள்ளனர். பின்னர், கொடித்துவக்கு என்ற இராணுவ அதிகாரி வந்து இவரைத் தாக்க வேண்டாமென்று சொன்னதும், கைகள், கண்கள் என்பன கட்டப்பட்ட நிலையிலேயே இவரைப் படுக்க அனுமதித்துள்ளனர்.

நவ.14 அன்று இவரை விடுதலை செய்த இராணுவத்தினர், இவரைக் கைது செய்தது பற்றி எவருக்கும் சொல்ல வேண்டாமெனவும், யாழ்ப்பாணத்தில் உறவினர் வீட்டில் நின்றுவிட்டு வந்ததாகச் சொல்லுமாறும் மிரட்டியுள்ளனர். அத்துடன் மருத்துவ சிகிச்சை செய்யக் கூடாது எனவும் மிரட்டியுள்ளனர். பின்னர் யாழ். மனித உரிமை ஆணைக் குழு சம்பவத்தை அறிந்து வரணிக்குச் சென்று, இவரை அழைத்து வந்து யாழ். மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளது.

# சீவல் தொழிலாளிக்கு நடந்த "சிகிச்சை"!

கடந்த ஒகஸ்ட் மாதம் சண்டிலிப்பாயைச் சேர்ந்த சீவல் தொழிலாளி ஒருவர் கள் சீவுவதற்காகப் பனையில் ஏறியபோது சறுக்கி விழுந்து, இடுப்பு எலும்பு முறிந்த நிலையில் யாழ். மருத்துவ மனையில் சிகிச்கைக்காக அனுமதிக்கப்பட்டார். இவர் மேலதிக சிகிச்கைக்காக ஒகஸ்ட் 12ம் திகதியன்று கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டார். கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இவருக்கு எதுவித சிகிச்சையும் அளிக்கப்படவில்லை. இந்த நிலையில் 24 நாட்கள் கழிந்து விட்டது. இவரை யாழ்ப்பாணம் அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. இவரை யாழ்ப்பாணத்திற்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்புவதற்கான அனுமதிப் பத்திரமும் வழங்கப்பட்டது.


அதற்கு அந்த நோயாளி யாழ்ப்பாணத்திற்கு அம்புலன்ஸில் போக முடியாது, கப்பலில் தான் போகலாம் என்றார். அதற்கு டொக்டர்கள், நீர் இங்கே இருக்கின்றீர், அங்கே பாதை எல்லாம் திறந்தாயிற்று. ரீ.வியில் காட்டினார்கள் என்று கூறி அம்புலன்ஸ் மூலம் அனுராதபுரத்திற்கு அனுப்பி வைத்தனர்.

செப்ரெம்பர் 25ம் திகதி அனுராதபுரத்திலிருந்து, அம்புலன்ஸ் மூலம் வவுனியாவுக்கு அனுப்பப்பட்டார். சாப்பாட்டிற்கே வழியின்றி வவுனியாவில் 25 நாட்களைக் கழித்த பின்னர், ஒருவாறு செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொண்டு, அவர்களின் உதவியுடன் திருமலை சென்று, நோயாளிகள் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளார். இவ்வளவு துூரம் அலைக் கழிந்தும், இவருக்கு எதுவித சிகிச்சையும் நடைபெறவில்லை, நோயும் மாறவில்லை.

# திட்டவட்டமான தீர்வு யாரிடமும் இல்லை!

40,000 இராணுவத்தினர் சேர்ந்து, 33 மாதங்களாகப் போர் நடத்திக் கைப்பற்றிய வன்னிப் பிரதேசத்தை, பிரபாகரன் 72 மணித்தியாலயத்தில் மீளக் கைப்பற்றிய பின்னரும், இனப் பிரச்சினையின் தீர்வு பற்றிய அவசியத்தை இன்னும் அரசு உணர்ந்ததாய் இல்லை. ஆட்சி நடத்தும் பொதுசன ஐக்கிய முன்னணி மட்டுமல்ல, ஏனைய எந்த அரசியல் கட்சியிடமும் இனப் பிரச்சினையின் தீர்வுக்கான திட்டவட்டமான யோசனை எதுவும் இல்லையென்றே கூறவேண்டும்.

வட கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள், சுயமாகத் தமது அலுவல்களை மேற்கொள்வதற்கான ஆட்சி அமைப்பை ஏற்படுத்தி விட்டால் மட்டும் பிரச்சினை தீர்ந்துவிடப் போவது இல்லை. இனப் பிரச்சினை உரிய முறையில் திட்டமிடப்பட்டுச் சிறப்பாகத் தீர்க்கப்பட்டாலும் இரண்டு விதமான பிரச்சினைகளுக்கு அரசு முகங்கொடுக்க வேண்டும் என்பது தெளிவு.



அங்கவீனமுற்ற படையினரின் அணிவகுப்பு — இராணுவத்தின் 50வது ஆண்டு நிறைவு விழாவில்

முதலாவது, இனப் பிரச்சினை தீரும் பட்சத்தில் பிரபாகரனும், அவரின் கீழ் இயங்கும் இராணுவக் கட்டமைப்பைச் சேர்ந்தவர்களும் எந்த விதத்தில் உள்வாங்கப்படுவர் ? அடுத்தது போரையே நம்பித் தமது ஜீவனோபாயத்தை ஓட்டும் குடும்பங்களின் கதி என்னாகும் ? என்பது. ஒரு இலட்சத்துக்கும் மேலான படையினர் - குறிப்பாக இவர்களில் அநேகர் கிராம மட்டத்தில் இருந்து வந்தவர்கள் - தமது வாழ்க்கையைப் போரை நம்பி ஓட்டுபவர்களாய் உள்ளனர்.

இன்றைய சிங்களக் கிராமங்களில் வாழும் மக்களின் வருவாய் பெருமளவில் இரண்டு வழிகளில் பெறப்படுகின்றன. ஒன்று, மத்திய கிழக்கிற்கு உழைப்புத் தேடிச் செல்லும் ஆண் - பெண் ஆகியோர் மூலம் வருவது. அடுத்தது, போரைக் குறியாக வைத்து இராணுவத்தில் சேர்ந்தவர்கள் மூலமாக வரும் வருவாயாகும். இன்று இராணுவத்தில் சேர்ந்து கொள்ளுவோரிடமும் எந்த வித கல்வியறிவும் எதிர்ப்பார்க்கப்படுவதில்லை. அவர்களுக்குள்ள உடல் சக்தியும், ஆரோக்கியமுமே முதலாவதாகக் கொள்ளப்படுகின்றது. இதற்காக அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளம், சிறப்பான கல்வித் தகைமைகளோடு, கௌரவமான அரச தொழில் பார்க்கும் ஒருவருக்குக் கூடக் கிடைப்பதில்லை. மேலும் அவருக்கு உடுப்பு, உணவு போன்றவையும் இராணுவத்தில் இலவசமாகவே வழங்கப்படுவதோடு, அவர் இறந்தாலும் அவர் வீட்டுக்குத்

- 20

மெல்லத்தமிழினி

## யாருக்கு அக்கறை?

நடக்கப் போகிற தேர்தலை ஜனநாயகபூர்வமானதாகவும் சுமூகமாகவும் நடக்க உதவி செய்ய வேண்டும் என்று பொதுமக்களை நோக்கி அனைத்து வேட்பாளர்களும் வேட்புமனுத் தாக்குதல் செய்யப்பட்ட தினத்தன்று கோரிக்கை விடுத்ததாக பத்திரிகைச் செய்திகள் கூறின.

நாட்டிலே தேர்தல் நியாயமான முறையிலும் நீதியான முறையிலும் நடப்பதற்குத் தடையாக இருப்பவர்கள் பொதுமக்கள் தான் என்பது போல அமைந்த இந்தக் கோரிக்கையை பத்திரிகையில் படிக்கையில் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

தேர்தல் ஒழுங்காக நடப்பதைக் கண்காணிப்பது தொடர்பான கருத்துக்களைக் கேட்டறியவென்று தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் தேர்தலில் நிற்பவர்களின் இரு பிரதிநிதிகளை அழைத்து நடைபெற்ற ஒரு கலந்துரையாடலின் போது இந்தத் தேர்தல் நேர்மையாக நடப்பதற்கு தடை யார் என்பது தெளிவாகத் தெரிந்தது.

தேர்தலைக் கண்காணிப்பதற்காக வெளிநாட்டு உள்நாட்டுத் தேர்தல் கண்காணிப்புக் குழுக்களை அழைப்பதை அம்மையாரின் பிரதிநிதிகள் எதிர்த்தனர். அதுமட்டுமல்லாமல் இலங்கையின் தேர்தல் சட்ட விதிகளின்படி சுவரொட்டிகள் ஒட்டுவதைத் தடைசெய்கின்ற விதிகளை இறுக்கமாகக் கடைப் பிடிக்குமாறு ஏனைய கட்சிகள் கோரிய கோரிக்கைகளையும் அரசாங்க சார்பு பிரதிநிதிகள் மறுத்துள்ளனர்.

மாறாக, அவர்கள் தெரிவித்ததெல்லாம் இலத்திரனியல் தொடர்பு சாதனங்களில் தேர்தல் பிரச்சாரம் செய்வதற்கான கால எல்லையைக் கட்டுப்படுத்துவது அவசியம் என்பது தான்.

தேர்தல் ஒழுங்காக நடப்பதில் அக்கறை யாருக்கு என்பது புரிகிறது.

விஜயபால மென்டிஸ், நந்தா மத்தியூ போன்ற புகழ்பெற்ற கேடிகளையும், கட்சிக்குள் எடுத்த பின்னும், தேர்தலைக் கண்காணிக்க ஆட்களை நியமிப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது என்கிறார் எமது நண்பர் ஒருவர்.

எப்படியோ, வடமேல் மாகாண சபை அடிதடி நாடு பூராவும் நடக்கப் போகிறதுக்கு நல்ல சமிக்ஞைகள் தோன்றிவிட்டன என்கிறார் ஒரு சக பத்திரிகையாளர்.

வாழ்க பொ.ஐ.மு. தேர்தல் ஜனநயாகம்!

## "Time to pass away"

மின்னேரியாவில் பயிற்சிபெற்ற 64 இராணுவத்தினருக்கு பயிற்சி முடிந்த பின் வழங்கப்படும் பயிற்சியில் சித்தியெய்தியதற்கான அணிவகுப்பு விழாவும், அவர்கள் பரீட்சையில் சித்தியெய்திய சான்றிதழ் வழங்கல் நடவடிக்கைகளும் நடக்கவில்லை. பரீட்சையில் சித்தியெய்தி ஊருக்குப் போய் வரக் கூட அவகாசம் கிடைக்கவில்லை.

வீட்டுக்குக் கடிதம் எழுதக் கூடிய அவகாசம் மட்டும் கொடுக்கப்பட்டது.

அவசர அவசரமாக ரக்குகளில் ஏற்றி வவுனியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

அவர்களது சான்றிதழ் வழங்கும் அணிவகுப்பு காலவரையறை இன்றிப் பின் போடப்பட்டு விட்டது.

அவர்கள் இப்போது யுத்த களத்தில் நிற்கிறார்கள்.

- இது சண்டே ரைம்ஸில் வெளியான தணிக்கை செய்யப்பட்ட ஒரு செய்தி.

No time even to pass out என்று அதற்கு தலைப்பிட்டிருந்தது சண்டே ரைம்ஸ். "Time to pass away" என்று நினைக்கிறது போலும் இந்த அரசாங்கம் என்று சீறுகிறார் ஒரு சக பத்திரிகையாளர்.

போர் முனையில் நிறுத்த அரைகுறைப் பயிற்சிகளுடன் ஆட்களை அனுப்பிவிட்டு வெற்றி கிடைக்கும் என்று யாரை ஏமாற்ற இந்த அரசாங்கம் முனைகிறது என்பது அவரது கேள்வி.

அவரது மட்டுமல்ல எல்லோரினதும் கேள்வியும் அது தான் இல்லையா?

## அதிரடி ஐயாத்துரை சொல்லாத ரகசியம்

ஈ. பி. டி. பி. எம். பியும், தினமுரசு ஆசிரியருமான அற்புதராஜா நடராஜா வானில்(Van) இருந்து குதித்துப் பையுடன் ஓடிக் கொண்டிருக்கும் போதும், T - 56 ஆல் சுட்டு வீழ்த்தப்பட்ட விதமும், சுட்டவர்கள் அடையாளம் தெரியாமல் மர்மமாக மறைந்து போனதும், இன்று வரையும் அது தொடர்பாக யாரும் சந்தேகிக்கப்படவோ, கைது செய்யப்படவோ இல்லை என்பதுவும் ஒரு நியாயமான கேள்வியை யாருக்கும் எழுப்பக் கூடும்.

அதுதான் இந்தக் கொலைக்கும், அரசாங்கத்துக்கும் அல்லது இராணுவத்திற்கும் அல்லது ஈ. பி. டி. பிக்கும் அல்லது பாதாள உலகக் கோஷ்டிக்கும் ஏதாவது தொடர்பு இருக்கக் கூடுமோ என்பது.

ஆச்சரியப்படத்தக்க விதத்தில் இந்தக் கொலைக்குப் புலிகளை யாரும் குற்றம் சாட்டவில்லை - ஈ. பி. டி. பி. கூடப் புலிகளைக் குற்றம் சாட்டவில்லை.

தினமுரசு ஊழியர்கள் மட்டும் " உள்ளிருந்தே கொல்லும் வியாதி " பற்றிப் பிரஸ்தாபித்திருந்தார்கள்.

அப்படியானால், இந்தக் கொலைக்கான பழியை ஈ. பி. டி. பியினரே அதன் மீது போடுகின்றார்கள் என்று கொள்ளலாமா ?

தலைவர் டக்ளசுக்கும், ரமேஷுக்கும் இடையில் ஒரு முறுகல் நிலை நீண்ட காலமாக இருந்து வந்தது " அதிரடி ஐயாத்துரை " சொல்லாவிட்டாலும், பலருக்கும் தெரிந்த இரகசியம்.

ஆயினும் முறுகலுக்கு " இராணுவத் தீர்வை " அவர்கள் பயன்படுத்த யோசித்திருப்பார்கள் என்று நம்ப முடியவில்லை. ஆனால், இராணுவத் தீர்வைப் பயன்படுத்துவது தான் என்று முடிவு எடுக்கும் " வீரம் " குறைந்தவர்களல்ல டக்ளசும், ரமேஷும் என்று பேசிக்கொள்கின்றார்கள். அவர்கள், அப்படி ஒரு முடிவை எடுத்திருந்தார்களா என்பது தெரியவில்லை. அப்படி எடுத்திருந்தால், யுத்தத்தில் முதலில் குதிப்பவனுக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் என்பதும் அவர்களுக்குத் தெரியாமல் இருந்திருக்க நியாயமில்லை.

இந்தத் தர்க்கத்தை இதற்கு மேல் தொடர்வது சரியல்ல.

வாசகர்கள், விசார்ணை முடிவுகள் வெளிவரும் வரை சுதந்திரமாகத் தமது முடிவுகளை வைத்திருக்கலாம் !.

நன்றி - நூலகத்திட்டம்



# மட்டக்களப்பு: வாயைத் திறந்தால் இது தான் கெதி!

மட்டக்களப்பில் இராணுவத்தினரின் பாதகச் செயல்கள் நாளுக்கு நாள் நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. தங்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகப் பொதுமக்களை பதராகவே நினைக்கின்றார்கள் இராணுவத்தினர். ஐம்பது இராணுவத்தினர் விடுமுறையில் செல்வதற்காக ஐநூறு இராணுவத்தினர் வீதிகளில் இறங்கி வீதிச்சோதனை என்ற பெயரில் பொதுமக்களை அணுவணுவாக ஆராய்வதும் வீட்டுக்கூரைகள், கடைகள், மொட்டைமாடி என்று ஒன்றுக்கு பத்துப்பேர் ஏறி சோதனை இடுவதும் வழமையாகிக் கொண்டு வருகின்றன. இந்த வேளைகளில் எல்லாம் இவர்கள் மனிதாபிமானம் அற்றவர்களாகவே மக்களுடன் நடந்து கொள்கின்றனர். இராணுவ வாகனத் தொடரணி வந்தால் அத்தொடரணி போய் முடியும் வரையும் வந்தவர்கள் வந்த வந்த மாதிரி அந்தந்த இடத்திலே நிற்க வேண்டும், அது யாராக இருந்தாலும் சரி.

கடந்த 06.11.99 அன்று செங்கலடியில் வீதிக்கடமையில் ஈடுபட்டிருந்த பொலீசார் வீதி ஓரத்தில் இருந்த வீட்டின் கூரையை கழற்றிப் பார்த்தார்களாம். பார்க்கப் போனால் இன்னமும் கொஞ்சக்காலத்தில் வாகனத் தொடரணி செல்லும் வீதிகளில் எந்தக் கட்டிடங்களும் இருக்கக்கூடாது, யாரும் அந்நேரத்தில் செல்லவும் கூடாது என்று சட்டம் கொண்டு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்தளவு நிலைமை மோசமாகி விட்டது. சென்ற வாரம் நகரில் தொடரணி வரப்போகிறது என்று எல்லோரையும் வந்த வந்தமாதிரி நிப்பாட்டி வைத்திருந்தார்கள். ஆனால் தொடரணி கண்ணுக்குத் தென்படாததால் ஒரு பெண்மணி வீதிக்கு ஒரு பக்கத்தில் இருந்து மறுபக்கத்துக்கு போக முனைந்தார். அருகிலிருந்த இராணுவ உடையணிந்தவரின் வாயில் இருந்து அப்பெண்ணை நோக்கி வீசப்பட்ட வார்த்தை வீசப்படும் ஒரு கிரனைட்டை விட மாசமானதாக ஒருகணம் எல்லோரையும் தலைகுனிய வைத்தது. இத்தனைக்கும் அந்தப் பெண் ஒரு அலுவலகத்தில் கடமை செய்பவர். ஏன் தான் எங்களை இப்படிக் கொல்லாமல் கொல்கிறார்கள் என்று அந்த பெண் முணுமுணுத்துக் கொண்டார்.

இது மட்டுமல்லாமல் திடீர்திடீரென இரவிலும், பகலிலும் அதிகாலையிலும் வீதி சோதனையில் ஈடுபடுபவர்களின் தொல்லைகள் வேறு. மட்டக்களப்பில் மர்மக் கொலைகளுக்கு பேர்போன 'சித்தா' மீண்டும் உலாவத் தொடங்கி விட்டதாகத் தகவல். இவரும் இந்த வீதிச் சோதனைகளில் ஈடுபட்டு தனக்கு 'கண்ணுக்குப் பிடித்தவர்'களின் பெயரையும் அடையாள அட்டையின் இலக்கத்தையும் குறித்துக் கொள்கின்றாராம். இது இவர் மட்டுமல்ல இவரைப் போல் இன்னுமும் சிலர் பைசிக்கிளில் திரிகின்றனர். இவர்களுக்கும் இதுதான் வேலை. ஆனால் இந்தப் பெயரும் அடையாள அட்டை இலக்கமும் ஒரு சில வாரங்களின் பின் ஏதாவது ஒரு சோதனைச் சாவடியில் உள்ள ஒரு பொலீசார் வைத்துக் கொண்டு சோதனையிடுவார். அந்த இலக்கமும் பெயரும் உள்ளவர்கள் வந்தால் அவர் அன்றைக்குப் புலிதான். இந்நிலைமை இளைஞர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றது. இவ்வாறாக பாதுகாப்புப் படையினர் தமிழ் இளைஞர்களை புலி என நியாயப்படுத்துவதற்கு பலவழிகளைக் கையாண்டு வருகின்றனர்.

இதே போன்றே கடந்த 6.11.99 சனிக்கிழமை ஸ்ரீலங்கா ரெலிக்கொம்மில் குண்டு வெடித்து கொல்லப்பட்ட ரெலிக்கொம் ஊழியரான முத்துவேல் நிஷாந்தனையும் (24) புலி எனப் படையினர் கூறுகின்றனர். குண்டு வெடிப்பின் போது நிஷாந்தனின் இரண்டு கைகளும், கண்களும் சேதங்களுக்கு உள்ளாகியிருந்தன.

இதை வைத்துக் கொண்டே நிஷாந்தன் குண்டு பொருத்தும் போதுதான் தவறுதலாக வெடித்துள்ளது. எனவே நிஷாந்தன் ரெலிக்கொம்முக்குள் குண்டு வைக்க வந்த புலி என்று படைத்தரப்பு கூறுகின்றது. உண்மையில்



இதற்கு அப்பாலுள்ள சில விஷயங்களையும் நாங்கள் பார்க்க வேண்டிய தேவை உள்ளது. சம்பவ தினமான 6.11.99 அன்று 11.50க்கே குண்டு வெடித்துள்ளது. அன்றய தினம் நிஷாந்தனின் வேலைப்பகுதியான பற்றுச்சீட்டு பகுதியில் நிஷாந்தன் உட்பட மூன்று பேரே கடமைக்குச் சென்றிருந்தனர். அதில் ஒருவர் அரை நேரத்துடன் சென்று விட்டார். மற்றையவர் ஒரு முஸ்லீம் பெண். அவர் குண்டு வெடிப்புக்கு 10 நிமிடங்களுக்கு முன் தான் சாப்பாட்டுக்குச் சென்றிருந்தார். அதன் பின்பே குண்டு வெடித்துள்ளது. ஆனால் அந்தப் பெண் சாப்பிடப் போகுமுன் பாதுகாப்பு கடமையில் ஈடுபடும் இருவர் (சிவிலில்) நிஷாந்தனின் மேசையில் இருந்த தொலைபேசியில் கதைத்து விட்டுச் சென்றிருக்கின்றார்கள்.அதன் பின்பே குண்டு வெடித்திருக்கின்றது. இதேவேளையில் குண்டு வெடிப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன் நிஷாந்தனும் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த ஒருவரும் மோட்டார் சைக்கிள் வேண்டி ஓடியதில் ஏற்பட்ட வாய்சண்டை கைகலப்பாக மாறியதாகவும் கூறப்படுகிறது. குண்டு வெடிப்பைப் பார்க்கும் போதும்கூட மேசைக்கு மேலிருந்து தான் குண்டு வெடித்திருக்கின்றது. ஏனென்றால் மேசை உட்பக்கமாக குழிவிழுந்து மேசையின் தகடு நிஷாந்தனின் தொடையை வெட்டியிருந்ததனை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. பாதுகாப்புப் படையினரின் கதையளப்பின்படி நிஷாந்தன் தான் குண்டு கொண்டு வந்து செற்பண்ணும் போது வெடித்தது என்று சொன்னால் நிஷாந்தன் அந்த வேலையை இரகசியமாகச் செய்திருக்க வேண்டும். ஆனால் குண்டு வெடிக்கும் போது நிஷாந்தனின் வலது பக்கத்தில் இருந்த யன்னல் திறந்திருந்தது. முன்பக்க கதவும் திறந்திருந்தது. யன்னலுக்குப் பக்கத்திலே பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுபவர்களும் இருக்கின்றார்கள். யன்னலுக்குள்ளால் கண்ணை விட்டால் அந்த அறையில் நடக்கும் முழுவதும் தெரியும். அப்படியிருக்கையில் நிஷாந்தன் குண்டு செற்பண்ணியது பாதுகாப்புப் படையினரின் கழுகுக் கண்களுக்குப் படவில்லையா? அல்லது பாதுகாப்புப் படையினரும் இதற்கு உடந்தையா என்பது தான் இன்று பலரது கேள்வியாக இருக்கின்றது. இதேவேளையில் வெடித்த குண்டு பாரியளவிலான ஒரு கட்டிடத்தையோ அல்லது பொருட்களையோ சேதப்படுத்தகூடிய பாரியசக்தி வாய்ந்த குண்டல்ல என்றும் இக்குண்டு வெடிப்பைப் பார்த்த பாதுகாப்பு தரப்பின் ஒருசிலர் கூறியதாகவும் தெரியவருகின்றது. இவ்வாறு இக்குண்டு வெடிப்பு தொடர்பாக பலரது மத்தியிலும் பல்வேறுபட்ட கேள்விகளும் ஐயங்களும் எழுந்துள்ளன. இத்தனைக்கும் இடையில் ரெலிக்கொம்மிற்கான பாதுகாப்பு என்பது மிகமிக இறுக்கமானது பாதுகாப்பு படையினருக்கு தெரியாமல் ஈ காகமும் கூட நுழைய முடியாது. அப்படியிருக்கையில் எப்படி இந்த இரும்புத் துண்டு கொண்டு செல்லப்பட்டது. படையினர் ஆண்கள் தொடக்கம் பெண்கள் வரை தொட்டு தடவித்தான் உள்ளெடுக்கின்றனர். இந்த நிலையில் இக்குண்டு வெடிப்பு மர்மமாகவே உள்ளது.

இச்சம்பவத்தின் பின் நிஷாந்தனின் சொந்த இடமான துறைநீலாவணையில் 08.11.99 அன்று சுற்றிவளைப்பில் ஈடுபட்ட விசேட அதிரடிப்படையினர் நிஷாந்தனின் வீட்டில் நின்ற ஒருசில இளைஞர்களை கடுமையாக தாக்கியதாகவும் அன்றய தினம் ரெலிகொம்முக்குக் கடமைக்குச் சென்ற ஊழியர்களின் சாப்பாட்டுப் பார்சலைகூட

-19

# ஜே.ஆர் வழியில் சந்திரிகா!

1994 நவம்பரில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது, காலஞ்சென்ற ஜயவர்த்தனவால் 1978ல் ஏற்படுத்தப்பட்ட அரசியல் யாப்பைப் பெரிதாகக் கண்டித்து, விமர்சிக்கப் பின்னிற்கவில்லை. ஆனால், இங்கே உள்ள முரண் நகை என்னவெனில், 1982ல் எவ்வாறு ஜயவர்த்தன அவர்கள், நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக இருந்து கொண்டு மீள் தேர்தலுக்கு ஆயத்தப்படுத்தினாரோ, அந்த நிலைக்கே இன்று சந்திரிகாவும் தள்ளப்பட்டுள்ளார். இத்தகைய இரண்டாம் முறையும், தனது ஆட்சி அதிகாரத்தை நீடிப்பதற்கான பிரசாரத்தை 1988ல் பிரேமதாசவோ அல்லது 1994ல் சந்திரிகாவோ போட்டியிட்ட போது கேட்டு நிற்கவில்லை.

இன்னும் வேடிக்கையானது என்னவெனில், காலஞ்சென்ற ஜயவர்த்தனவை எந்த அரசியல் யாப்பு 10 வருட காலம் ஆட்சியதிகாரத்திற்குள் இருக்க வைத்ததோ அந்த அரசியல் யாப்பை 1995 ஜூலை 15ல் இல்லாதொழிக்கப் போவதாகக் கூறிய சந்திரிகா அம்மையார், அதே யாப்பைக் கொண்டே தன்னை இப்போ தக்க வைக்க வேண்டிய நிலைக்குள் வீழ்ந்துள்ளார்.

ஆனால், இந்த நிகழ்ச்சிகள் ஒரே மாதிரியானவையாகத் தோற்றினாலும் ஒத்த தன்மையுடையவை அல்ல என்பதையும் கூறத் தான் வேண்டும். ஜயவர்த்தனவின் ஜனாதிபதிப் பதவி, தேர்தலில் போட்டியிட்டதன் மூலம் கிடைக்கப் பெற்றதல்ல. 1977ல் நடந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் தான் புதிதாகக் கொண்டு வந்த அரசியல் யாப்பை நிறைவேற்றியதன் மூலம் தன்னைத் தானே ஜனாதிபதியாக ஆக்கிக் கொண்டவர் ஜயவர்த்தன. ஆனால், 1994 ஜனாதிபதித் தேர்தலில், சந்திரிகா போட்டியிட்டபோது ஒரு 'புதிசு' ஆகவே போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

ஆனால், ஜயவர்த்தன- சந்திரிகா ஆகிய இருவரும் தமது ஜனாதிபதி அந்தஸ்து வழங்கிய அதிகாரத்தைப் பாவித்துத் தேர்தலுக்குரிய காலத்தை முன் கூட்டியே வைத்ததன் மூலம், எதிரணியினரை, தமக்கு எதிராக அணி திரள முடியாது சீர்குலைக்க வைத்ததில் ஒரே மாதிரியே இயங்கியுள்ளனர்.

இன்றிருக்கும் ஐ.தே.கவை விட அன்றிருந்த (1982) ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மிக மோசமான நிலையில் இருந்தது. அன்று சிறிமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமைகள் பறிக்கப்பட்டபோது, கட்சி இரண்டாகப் பிரிந்து, மைத்திரிபால சேனநாயக்கவின் தலைமையில் ஒன்றும், சிறிமா பண்டாரநாயக்கவுக்கு விசுவாசமுள்ள பகுதி ஒன்றாகவும் பிரிந்து இயங்கத் தலைப்பட்டன. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 'கை'ச் சின்னம் தொடர்பாகவும் சிக்கல்கள் ஏற்பட்டன. ஈற்றில் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் பிரிவுக்கே 'கை'ச் சின்னத்தைப் பாவிக்கும் உரிமை தேர்தல் ஆணையாளரால் வழங்கப்பட்ட போது, மைத்திரிபால சேனநாயக்கவும் தனது போட்டியைக் கைவிட்டார். பின்னர் நிகழ்ந்த ஜனாதிபதித் தேர்தலுக்குச் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் தெரிவில் மீண்டும் சிக்கல் ஏற்பட்டது. ஹெக்ரர் கொப்பேகடுவவை ஆதரித்து ஒரு பகுதியினரும், அனுர பண்டாரநாயக்கவை ஆதரித்து இன்னொரு பகுதியினருமாகக் கட்சி பிளவுற்றது. ஹெக்ரர் கொப்பேகடுவவை ஆதரித்த குழுவை ஹெக்ரர் - அக்ரர் (நடிகர் விஜய குமாரணதுங்க, இன்றைய ஜனாதிபதியின் கணவர், அக்ரர் எனக் குறிப்பிட்டார்) என்று அழைக்கப்பட்டது. ஈற்றில் அனுர ஒதுக்கப்பட்டார். இந்த உள் முரண்பாடுகளால் 'அக்ரரின்' மனைவி ஜனாதிபதி ஆகியுள்ளார் இன்று.

அன்று, ஜயவர்த்தனவின் சாணக்கியத்தால் எவ்வாறு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி துண்டாடப்பட்டதோ, அவ்வாறே இன்று சந்திரிகாவின் தந்திரோபாயங்களால் ஐ.தே.க. பிளவுற்றுள்ளது கண்கூடு.

அன்று, கொப்பேகடுவவுக்கும், ஜயவர்த்தனவுக்கும் இடையே போட்டி நிலவியபோது, ஒரு பொது வேட்பாளர் போட்டியிடாமையால், ஜே.வி.பி யே மூன்றாவது சக்தியாகத் திகழ்ந்தது. இதுவே வரப் போகும் தேர்தலிலும் நடைபெறவுள்ளது. மரபு ரீதியான மார்க்சியக் கட்சிகளின் வேட்பாளர்களாக அன்றைய தேர்தலின்போது, இலங்கையில், சோசலிஷத்தின் பிதாமகர்களில் ஒருவரான கொல்வின் ஆர். டீ சில்வா இருந்தார். இன்று அத்தகைய ஒருவர் இல்லாதபோதும், முன்னைய ஜனாதிபதித் தேர்தலின்போது போட்டியிட்ட, நவ சம சமாஜக் கட்சியின் முக்கியஸ்தராய் இருந்த





வாசுதேவ நாணயக்கார இந்த முறையும் போட்டியிடுகின்றார்.

கடந்த காலத் தேர்தலின்போது, அரசு மேற்கொள்ளவிருக்கும் பொருளாதாரப் போக்கும் முக்கிய ஒன்றாக இருந்தது. ஜயவர்த்தன வெற்றி பெறாவிட்டால் திறந்த பொருளாதாரக் கொள்கைக்குச் சாவுமணி அடிக்கப்படும் எனப் பிரச்சாரப்படுத்தப்பட்டது. அன்று, அதை எதிர்த்து நின்ற சுதந்திரக் கட்சி இன்று, ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமையில் திறந்த பொருளாதாரக் கொள்கையை ஐ.தே.கவின் தனிப்பட்ட ஒன்றாக மாற்ற முடியாதவாறு தானும் அதைத் தத்தெடுத்துள்ளது.

ஆனால், இன்றும் அன்றும் இரு கட்சிகளையும் பிரச்சினைப் படுத்துவது தேசிய இனப் பிரச்சினையாகும். 1982 தேர்தலின் போது, குமார் பொன்னம்பலம் தமிழர்கள் பிரச்சினை தொடர்பாக, அவர்களின் அடிப்படை உரிமைகள் புறந் தள்ளப்படுவதை எதிர்த்துப் போட்டியிட்டார். ஆனால், இந்த முறை அத்தகைய தமிழ் வேட்பாளர் எவரும் போட்டியிடுவதாய் இல்லை. இன்று தமிழர் பிரச்சினையை, இரு பகுதியினரும் பெரும்பான்மை இனத்தைப் பாதிக்காத வண்ணம் தீர்த்துக் கொள்ளவே முயல்கின்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் ஒன்றை நினைத்துக் கொள்ள வேண்டும். ஜயவர்த்தன அவர்களின், ஜனாதிபதி அதிகாரமே இன்றுள்ள பிரச்சினைகளுக்கும், பல அடக்கு முறைகளுக்கும் காரணமாய் உள்ளது என்பதை. இது மீளவும் இலங்கை அரசியலைப் பீடிக்காமல் இருக்க வேண்டும்.

நன்றி: சண்டே லீடர்

நன்றி - நூலகத்திட்டம்



# நிரந்தர சமாதானம்? நிரந்தர யுத்தம்?

1999 நவம்பர் 11ம் திகதி வியாழக்கிழமையுடன் ஜனாதிபதியாக ஐந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளார் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க. இற்றைக்கு ஐந்து வருடங்களுக்கு முன் 'கறைபடியாக் கரங்கள்' கொண்டவராகத் தன்னைக் காட்டி, 62 சதவீத வாக்குகளைப் பெற்று, ஸ்ரீலங்கா ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக ஆட்சிபீடமேறிய காலத்தில் 'கண்ணீர்த்துளி' வடிவ இலங்கைத் தீவிலே "சமாதானத் தேவதை" தோன்றி விட்டதாக எண்ணிய பலரும் 'விதியே விதியே என் செய்ய" என்று இன்று குமுறுகின்றளவுக்கு அரசியல் செல்நெறி வெளிப்பட்டு நிற்கிறது.


டிசம்பர் 21ம் திகதி ஜனாதிபதித் தேர்தலுக்கான நாளாகக் குறிக்கப்பட்டு தேர்தல் பரப்புரைகள் பரந்தளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஸ்ரீலங்காவின் ஐந்தாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக வரத்துடித்து சகல கட்சிகளும் முனைப்புடன் பிரசாரத்தை முடுக்கிவிட்டுள்ளதைக் காண முடிகின்றது. ஒவ்வொரு வேட்பாளரும் தம்மை "புனிதர்களாகத் திருநிலைப்படுத்திக்" காட்டுவதுடன் எதிர்த்தரப்பினரைக் காட்டமாக விமர்சிக்கவும் தவறாதவர்களாக செயற்படுவதையே தேர்தல் கருத்து மேடைகள் சொல்லி நிற்கின்றன.

தற்போதைய பதவிக்காலம் முடிவடைய சுமார் ஒன்றரை வருடங்களுக்கும் மேலான காலமிருக்கையிலே "நிறைவேற்றதிகாரம்" என்ற சர்வதிகாரத் தோற்றப்பாட்டை உபயோகித்து திடீர் ஜனாதிபதித் தேர்தலை கௌரவ ஜனாதிபதி அவர்கள் அறிவித்துள்ளார். எந்த நிறைவேற்றதிகாரத்தை ஒழிப்பதாக வாக்குக்கேட்டு ஜனநாயக சாதனை படைத்தாரோ, அதே அதிகாரத்தைப் பிரயோகித்து புத்தாயிரம் ஆண்டினை ஆட்சியிலிருந்தபடி "வரவேற்க" ஜனாதிபதி தலைப்பட்டுள்ளார் என்பது "ஸ்ரீலங்காவின் தேர்தல் அரசியலை களியாட்ட வேடிக்கை வினோத நிகழ்வு" ஆகவே தென்படச் செய்கிறதல்லவா?

பதினேழு வருட கால ஐ.தே.க. ஆட்சியில் ஆற்றொண்ணாத துன்ப துயரங்களால் துவண்டு போயிருந்த ஈழத்தமிழ்த் தேசிய இனம், பண்டாரநாயக்கா குடும்பத்து புதிய தலைமுறையை "சமாதான தேவதையாக" எண்ணி ஆட்சியேற்ற கணிசமான பங்களிப்புச் செய்திருந்தது. 1994 நல்லூர் திருவிழா கடைத்தெருக்களில் 'சந்திரிகா வளையல், சந்திரிகா சீப்பு..." எனக் களைகட்டுமளவு அன்று காட்சியளித்தவர் ஓராண்டுக்குள்ளேயே "யாழ்ப்பாண இடப்பெயர்வு" என்ற மாபெரும் வரலாற்றுப் பதிவுக்கு தன்னை காரணமாக்கியதுடன் "செம்மணி"யை உலக அரங்கில் உச்சரிக்கச் செய்து தனது நிஜ முகத்தைக் காட்டிய வரலாற்றை தமிழ் மக்கள் இத்தருணத்தில் மறந்து விட மாட்டார்கள்.

பதினேழு வருட காலமாகப் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினையைத் தீர்ப்பதாகக் கூறி ஐந்து வருட கால ஆட்சியில் வரலாறு காணாதளவு ஈழத்தமிழ் தேசிய இனத்தின் தாயக ஆள்புலமான வடக்கு கிழக்கு மாகாணத்தை ரணமாக்கியுள்ளது பொதுஜன ஐக்கிய முன்னணி. 'வெண்தாமரை' என்றும், 'புத்தகமும் செங்கலும்' என்றும் 'தொடர் நவீனங்'களை அரங்கேற்றி 'சமாதானத்திற்கான யுத்தம்' என்று யுத்த சன்னதங்கொண்டு தமிழ்த்தேசிய இனத்தின் ஆன்மாவில் ஆறாத ஆழமான வடுக்களை ஏற்படுத்தி விட்டது.

ஐந்துவருட ஆட்சியில் சாதிக்க முடியாத சமாதானத்தை இனி ஏற்படுத்துவார்கள் என்பதில் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல சர்வதேச அவதானிகளுக்கும் மாற்ற முடியாத நம்பிக்கையீனம் ஏற்பட்டு விட்டதையே அண்மையில் பி.பி.சி. இணையத்தில் நடத்தப்பட்ட "இலங்கையில் சமாதானம் பிறக்குமா?" எனும் வகையிலான கருத்துக்கணிப்பின் விகிதாசாரம் வெளிப்படுத்தி நிற்பதாக நோக்கர்கள் தெரிவித்துள்ளதும் சிந்திக்கத்தக்கது.





இந்நிலையில் அண்மைய தனது தேர்தல் பரப்புரையில் ஜனாதிபதி "மூன்றிலிரண்டு பெரும்பான்மை கொண்டு ஜனாதிபதியாக்கினால் மூன்று மாதங்களுள் சமாதானத்தை ஏற்படுத்துவேன்: முடியாது விட்டால் பதவியைத் துறந்து விடுவேன்" என்று கூறியிருப்பது அரசியல் விமர்சகர்களிடையே அவரது "நகைச்சுவை உணர்வின்" வெளிப்பாடாகவே கொள்ளப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இக்கட்டத்தில் பிரதான எதிரணி வேட்பாளரான ரணில் அவர்களும், தம்மிடம் தீர்வுத்திட்டம் தயாராக இருப்பதாகக் "காதில் பூ வைக்க" முயல்கிறார். அவர்களது ஆட்சியின் மகத்துவம் சொல்லித் தெரிய வேண்டிய சங்கதியல்ல. இதர சிங்கள வேட்பாளர்களும் ஈழத்தமிழ் தேசியப் பிரச்சினை தொடர்பான தெளிவான நிறைவான நீதியான தீர்வு நிலைப்பாட்டைக் கொண்டிராதவர்களாக இருப்பதும் கண்கூடு.

இத்தருணத்தில் "அரசியலில் நிரந்தர எதிரியும் இல்லை: நிரந்தர நண்பனும் இல்லை" என்பது மீளவுமொரு தடவை "கட்சித்தாவல்" மூலம் ஸ்ரீலங்கா பாராளுமன்ற அரசியலில் நடந்தேறியுள்ளது. வாய்திறந்தாலே இனவாதம் தவிர வேறொன்றும் "பேசாத" கடைந்தெடுத்த" சிங்களப் பேரினவாதிகள் பலரும் பொ.ஐ.முன்னணியை இனவாத நோக்கில் மேலும் பொதுமைப்படுத்த பொறுப்புகளுடன் குடிபுகுந்துள்ளதும், பொ.ஐ.மு.வின் "உப்புச்சப்பில்லாத" சமாதான முயற்சியை மேலும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. "தேர்தல் அரசியல்" என்ற நிலையை "ஈழத்தமிழர் இறைமை" கடந்து இருபத்திரெண்டு ஆண்டுகள் உருண்டோடி விட்டதைத் தமிழ் மக்கள் மறந்து விடக்கூடாது.

இவ்விடயத்தில் மீளவும் சில வரலாற்று விடயங்களை நினைவூட்டுவது தேவையாகிறது. 1981 மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் தந்த பாடத்தை தமிழ் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்றாலும், ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துவிட்டதாகக் கூறி "தேசிய அரசியல் நீரோட்டத்தில் அடிபட்டுச் செல்லும்" உதிரித் தமிழ்க் கட்சிகள் நினைவு படுத்துவது அவர்களது பிராயச்சித்தத்தின் அவசியத்தை வெளிப்படுத்தும் அல்லவா?

"எகிப்திய மன்னன் பாரோனிடம் "எனது மக்களைப் போக விடு" என்று தீர்க்கதரிசி மோசே உரைத்ததைப் போல, தேசிய அரசுப் பேரவையிலே வரவு செலவுத்திட்ட விவாதத்தின் போது 1976 நவம்பர் 26ம் நாள் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் செல்வநாயகம் அவர்கள் பழைய அரசியல் போக்கினை முற்றாக முறித்துக்கொண்டதன் பின்னர் தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கும் சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிப்பதற்கு முனைந்து நிற்கும் தமிழ்த் தேசிய இனம் தென் இலங்கையில் சிங்கள மக்களின் ஆட்சியாளர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல்களில் வாக்களிப்பது அவர்கள் உள்வீட்டு விவகாரங்களில் தலையிடுவதாகாதா?" என்று பிரபல பத்தி எழுத்தாளரான த. சா. ஆனந்தராசா அவர்கள் முன்னர் எழுப்பிய வினா இன்று கட்டாயம் சிந்திக்க வேண்டியதாகிறது.

தமிழரசுக்கட்சியின் அப்போதைய யாழ் நகர் பிரதிநிதியாக இருந்த சி.எஸ். மாட்டின் தெரிவித்த கருத்தையொட்டிய செல்வநாயகம் அவர்கள் எழுதிய கடிதத்தில் "சிங்களத் தலைவர்கள் வாக்குறுதிகளைத் தருவார்கள்: பின்னர் மக்கள் எதிர்க்கிறார்கள் என்று கையை விரிப்பார்கள்..." என்று கூறியிருப்பது இன்றைய தேர்தல் பரப்புரைகள் மத்தியில் தமிழ் மக்கள் செவிகளில் ஒலித்துக் கொண்டிருப்பது ஆற்றுப்படுத்த உதவும் உளவாம். "களத்திலே போரில் போர்த்துக்கேயரிடம் இழக்கப்பட்ட தமிழீழ அரசை மீள்வித்துப் புனரமைப்பது தான் செயல் மூச்சு" என்று உறுதி எடுத்து தமிழீழத் தனியரசை நிறுவுவதற்கான மக்களாணை இருபத்திரெண்டு ஆண்டுகளுக்கு முன்பே பெறப்பட்டு விட்டதை உணர முற்பட வேண்டும்.

கொழும்பு வாழ் தமிழ் மக்களுக்கு சட்டசபையில் பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதைத் தடுப்பதற்காக 1920களில் சிங்களத் தலைமை முன்வைத்த "இலங்கையில் உள்ள ஏனைய மக்களைப் போன்றே அவர்களும் ஒரு பெரும்பான்மையினரே" என்ற வாதத்தைத் தமிழ்த்தரப்பினர் புரிந்து கொண்டு வடக்கு கிழக்கு மாகாணத்தை ஆள்புலமாகக் கொண்ட தனித்துவமான தேசிய இனம் தாம் என்பதை தெளிவுற அறிந்து இன்றைய "தாழ்வு மனப்பான்மை அரசியல்" நிலையிலிருந்து தம்மை விடுவித்து "செய் அல்லது செத்து மடி" என்ற வைராக்கியத்தை வளர்த்துக் கொள்ள முற்படுவதே ஆரோக்கியத்தைத் தோற்றுவிக்கும்.

வருகிற ஜனாதிபதித் தேர்தலில் பலதரப்பட்டவர்களும் "வாக்கு வேட்டை"யில் இறங்கியுள்ள இத்தருணத்திலே உதட்டளவில் அவர்கள் கொள்கைகளாலும், சிந்தனைப் போக்காலும் மாறுபட்டவர்களாகத் தென்படினும் "சிங்கள பௌத்த பேரினவாத அரசியல் குட்டையில் ஊறிய ஒரே மட்டைகளே" என்பதே நோக்கர்களின் கருத்தாகிறது.

தேசிய அரசுப் பேரவையில் 1975/76ம் ஆண்டு வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது 'சிந்தனைச்சிற்பி' சி. கதிரவேலுப்பிள்ளை அவர்கள் "Racism in Ceylon destroys the identity of the Tamil People: Racism in South Africa destroys only the dignity of the colored People'

("தென்னாபிரிக்காவில் இனவாதம் மக்களுடைய கௌரவத்தை மட்டும் தான் அழிக்கிறது. ஆனால் இலங்கையிலே இனவாதம் தமிழ் மக்களுடைய தனித்துவத்தையே அழிக்கிறது.") என்று உரைத்தது தேர்தல் காலச்சிந்தனையாக எம் மனதிலே இருப்பதோடு, சிங்கள ஸ்ரீலங்கா அரசியலினதும், பௌத்த சிங்கள பேரினவாதத்தினதும் 'அர்த்தநாரீஸ்வரத்' தோற்றப்பாட்டைப் படம் பிடித்துக் காட்டி விடுகிறது.

எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் ஈழத் தமிழர்களைப் பொறுத்த மட்டில் "புத்தாயிரம் ஆண்டினை வரவேற்கும் வகையில் 'தேர்தல் கலாசார' நிகழ்வின் மாபெரும் நகைச்சுவை நாடகத்தின் அரங்கேற்றம்" ஆக அமைவதைத் தெளிவுற அறிந்து செயற்பட முனைய வேண்டும்.

"ஒட்டுண்ணிகள் ஒரு சிலர் இருக்கக்கூடும். ஆனால், மக்கள் ஒட்டுமொத்தமாக ஒட்டுண்ணிகளாக இருக்க முடியாது, ஒரு நாட்டை சுதந்திரத்தை, நேர்மையை ஒட்டுண்ணிகளால் பாதுகாக்க முடியாது. தேசாபிமானிகளாலும், புரட்சியாளர்களாலும், தைரியமான ஆண்களாலும் பெண்களாலும் தான் காக்க முடியும். தேசாபிமான, புரட்சிகர மக்களை எவராலும் வெல்ல முடியாது" என்ற ஃபிடல் காஸ்ட்ரோவினது வாக்கை மனதிலிருத்தி, துன்பம் மிகு வந்த போதும் துவண்டிடாது, முடியப் போகும் இன்னல்களின் முடிவின் தொடக்க மென இக்காலப்பகுதியில் தமிழ் மக்களின் பேரம் பேசும் சக்தியை (Bargain Power) பலப்படுத்துவதே நாளைய நிரந்தர கௌரவமான சமாதானத்தைக் கொண்டு வரும் என்பதே இன்று வரலாறு சொல்லும் பாடமாகிறது.

கோ. துரைகுமாரன்

நன்றி - நூலகத்திட்டம்



# புலிகளிடமிருந்து மக்களை 'விடுவிக்கப்' புதிய வழி?

"இராணுவம் மடுவை விட்டு வெளியேறுகின்றது."

தமிழீழ விடுதலைப் புலிகளின் படுகொலைகளையடுத்துச் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க உத்தரவு."

ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் வெளிவந்த முன் பக்கச் செய்தி இது. கொட்டை எழுத்துக்களில் எழுதப்பட்டு, வெளிவந்த இந்தச் செய்தியில் "இலங்கையின் மிகவும் புனிதமான தேவாலயங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்ற மடு மாதா கத்தோலிக்கத் தேவாலயம் மீதான தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல் மிகுந்த அதிர்ச்சியையும், வேதனையையும் அளிப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க, அங்கிருந்து இராணுவத்தை உடனடியாக வெளியேறுமாறு உத்தரவிட்டுள்ளார்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. "விடுதலைப் புலிகளால் திட்டமிடப்பட்ட முறையில், பேரழிவினை ஏற்படுத்தும் விதத்தில் நடாத்தப்பட்ட" ஒரு தாக்குதல் என்று அவரது அறிக்கை மேலும் கூறுவதாக அந்தச் செய்தி தெரிவிக்கின்றது.

இந்தத் தாக்குதலில் 42 "அப்பாவிப்" பொது மக்கள் கொல்லப்பட்டதாகவும், இவர்களுள் பெண்களும், குழந்தைகளும் அடங்குவதாகவும் அந்தச் செய்தி, அரசாங்க அறிக்கையை மேற்கோள் காட்டித் தெரிவிக்கின்றது.


இவ்வளவையும் எழுதிய பின் அந்தச் செய்தி, அதே அரசாங்க அறிக்கையை மேற்கோள்காட்டி இவ்வாறு கூறுகின்றது : "இப்போது நடந்து கொண்டிருக்கும் யுத்தம், அப்பாவித் தமிழ் மக்களைப் புலிகளின் பயங்கரவாதத்திலிருந்து மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்டே நடத்தப்படுகின்றது. ஆகவே இந்த யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போர் வீரர்கள் உற்சாகம் இழக்கும் விதத்தில் யாரும் செயற்படக் கூடாது, ஒவ்வொருவரும் இந்த யுத்தத்தினை ஆதரிக்க வேண்டும்."

இந்தச் செய்தியை வாசிக்கின்ற ஒருவர் ஜனாதிபதி மிகவும் நேர்மையாக நடந்து கொண்டிருப்பதாக நினைக்கக் கூடும். அதிலும் அவர் இலங்கை நிலவரங்கள் பற்றி எதுவுமே தெரியாத ஒருவராக இருந்து விட்டால் இலங்கையில், மக்களை அழித்தொழிக்கும் ஒரு பயங்கரவாதக் குழுவுக்கு எதிராக, அரசாங்கம் மிகவும் அக்கறைக்குரிய ஒரு பணியை ஆற்றி வருவதாகக் கூட நினைக்கக் கூடும்.


ஆனால், பரிதாபம் என்னவென்றால், அப்படி நினைப்பதற்கு மனச்சாட்சி உள்ள ஒருவர் கூட இந்த நாட்டில் இல்லை என்பது தான்.

இலங்கையில் இருந்து வருவது இனப் பிரச்சினை அல்ல, அது வெறும் பயங்கரவாதப் பிரச்சினையே என்று முன்னாள் ஜனாதிபதி டி. பீ. விஜேதுங்க கூறினார். அது பயங்கரவாதப் பிரச்சினை கூட இல்லை, வெறும் பயங்கரவாதிகளின் பிரச்சினையே என்று சொல்கின்றார் அம்மையார். புலிகளிடமிருந்து, தமிழ் மக்களை விடுவிப்பதற்காகத் தான் இன்றைய யுத்தம் நடந்து வருவதாக அவர் கூறுவதற்கு நேரடியான காரணம் இதுவன்றி வேறு எதுவாக இருக்க முடியும் ?

மடு தேவாலயம் மீதான குண்டுத் தாக்குதல் நடந்தது நடப்பதற்கு முன்பாக, உடனடியாக முந்திக் கொண்டு அதைச் செய்தவர்கள் புலிகளே! என்று அறிவித்தது மட்டுமல்லாமல், உயிரிழந்தோரின் இறுதிக் கடமைகட்கான உதவிகளும் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தேவாலய வளவை, யுத்த சூனியப் பகுதியாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தொடர்ந்து, மன்னார் மறை மாவட்ட ஆயர் உட்பட, கிறிஸ்தவ மத குருமார்கள் பலரும் கோரிய போதும், அது பற்றி எந்தச் சட்டையும் செய்யாமல் இருந்த அரசாங்கம், இராணுவம் வெளியேற வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்து, அங்கு தஞ்சம் கோரித் தங்கியிருந்த மக்களைப் புலிகள் என்றும், அவர்கள் முதலில் வெளியேற வேண்டும் என்று விடாப்பிடியாக நின்று, அவர்களை விரட்டிய அரசாங்கம், இப்போது திடீரென இவ்வளவு அக்கறையுடன், அங்கு தஞ்சம் புகுந்த மக்களை மக்களை "அப்பாவிப் பொது மக்கள்" என்று கூறிக் கொள்வதும், புலிகள் இனியும் அந்த மக்கள் மீது தாக்குதல் தொடுக்கக் கூடும் என்பதற்காகத் தமது படையினரை வெளியேற்றுவதாகச் சொல்வதும் ஏன் ?


மடுமாதா தேவாலயம்

1995 இல் யாழ்ப்பாணத்திலுள்ள, நவாலி புனித ஜேம்ஸ் தேவாலயத்தின் மீது இதே படையினர் குண்டு வீசித் தாக்குதல் செய்த போது, அங்கு அப்படி ஒரு தாக்குதலே நடக்கவில்லை என்று தான் இதே சந்திரிகா அரசாங்கம் சாதித்தது. அது மட்டுமல்ல, அங்கு கொல்லப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் சந்திரிகா, ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. ஏன் அண்மையில், முல்லைத்தீவிலுள்ள, புதுக்குடியிருப்பில், விமானக் குண்டு வீச்சால் கொல்லப்பட்ட மக்கள் பற்றி ஜனாதிபதியிடமிருந்து ஒரு அனுதாபச் செய்தி தானும் வெளிவரவில்லை. ஆனால், இப்போது மட்டும் மடு தேவாலயத்தில் நடந்த சம்பவத்தில் மட்டும் பாதிக்கப்பட்ட மக்கள் திடீரென "அப்பாவிப் பொது மக்களாகவும்" ஜனாதிபதியின் அனுதாபத்துக்குரியவர்களாகவும் போனது எப்படி ?


நவாலி தேவாலயம்

உண்மையில் ஜனாதிபதி, சந்திரிகாவுக்கு அப்படி ஒன்றும் புதிதாகத் தமிழ் "அப்பாவிப் பொது மக்கள்" மீது கரிசனை ஏற்பட்டு விடவில்லை. ஆனால் முன்னர் நடந்த சம்பவங்கள் இரண்டிலும் புலிகளைச் சம்பந்தப்படுத்தக் கூடிய சூழ்நிலை இருக்கவில்லை. ஏனென்றால், அந்த இரு தாக்குதல்களும் விமானக் குண்டு வீச்சினால் நடத்தப்பட்டவை.

எனவே, புலிகளை அதனுடன் சம்பந்தப்படுத்தி இருக்க முடியாது. ஆனால் மடு விடயத்தில் அப்படிச் சொல்வது மிகவும் சாதாரணம். ஏற்கெனவே புலிகளிடம் அடி வாங்கி, மடுவிலிருந்து ஓடிய இராணுவம், மடு தேவாலயப் பகுதியை விட்டுப் புலிகள் சென்ற பின், மீள அங்கு ஓடிச் சென்று "மடுவை மீளக் கைப்பற்றி விட்டோம்!" என்று அறிவித்த போதும், அந்தப் பகுதி சமர் நடக்கும் ஒரு பகுதியாக இருந்தது. எறிகணைகளை வீசும் ஆட்டிலறிகள் இரு தரப்பாரிடமும் இருந்தன. ஆக, ஷெல் அடித்தது புலிகளே என்று கூறுவதற்கு அரசுக்கு நிறைய வாய்ப்பு இருக்கின்றது.

அரசாங்கச் செய்திகளைத் தவிர வேறு எதையும் தணிக்கை இன்றி வெளியிட முடியாத நிலை. உண்மையான தகவல்களை மக்களால் அறிந்து கொள்ள முடியாது என்ற நம்பிக்கை. இவ்வளவும் போதாதா? புலிகள் தான் செய்தார்கள் என்று அறிவிக்க. புலிகள், இராணுவம் தான் தேவாலயத்தைத் தாக்கியது என்கின்றார்கள். உண்மை நிலைமை அறிந்த செய்தியாளர்களுக்கு, உண்மையைத் தெரிவிக்கும் உரிமை பிடுங்கப்பட்டுள்ளது. ஆனால் மக்கள் மத்தியில், செவி வழிச் செய்தியாகத் தாக்கியவர்கள் யார் என்ற தகவல்கள் பரவிக் கொண்டு தான் இருக்கின்றன.

செய்தித் தணிக்கையைத் தீவிரமாக அமுல்படுத்திக் கொண்டு, வெற்றுப் பொய்த் தகவல்களைத் தொடர்ந்தும் வெளியிட்டு வருகின்றது அரசு. ஆனால் மக்கள் மத்தியில் உண்மை பரவிக் கொண்டிருக்கின்றது. தேவாலய வளவைச் சுற்றி, அரச படைகளின் இராணுவத் தாங்கிகள் நிறுத்தப்பட்டிருந்ததும், யுத்த சூனியப் பிரதேசமாக அதைப் பேணுவதில் கொஞ்சமும் ஒத்துப் போகாத தன்மையை அந்தப் படைகள் வெளிப்படுத்தி வந்ததும், பொது மக்களைச் ஷெல் விழுந்த தேவாலயத்துள் போய் இருக்குமாறு இராணுவமே அனுப்பியது என்பதுவும் எல்லோரும் அறிந்த தகவல்கள். முழுப் பூசணிக் காயைச் சோற்றுக்குள் மறைக்க முயல்கின்ற அரசாங்கத்திற்கு இப்படி ஒரு கதையைச் சோடிப்பது ஒன்றும் கஷ்ரமல்ல என்பதை யாரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து, ஜனாதிபதி சந்திரிகாவின் பேச்சு, முன்னாள் இன வெறியாளர்கள் யாருக்கும் சளைத்ததல்ல என்பதை நினைவூட்டி வருகின்றன. ரணில் விக்ரமசிங்ஹ புலிகளுக்கு 02 வருட கால மாகாண சபை அதிகாரத்தை வழங்கப் போவதாகக் கூறியதாக வெளிவந்த செய்தி பற்றி அவர் நாடு பூராவும் - அதை ரணில் மறுத்த போதும் ஆற்றி வரும் பிரசாரங்கள் இதற்கு நல்ல சான்று.

தேர்தலில் வெற்றி வாய்ப்பைத் தரக் கூடியதாக, சிங்கள இனவாதமும், யுத்த வெற்றிச் செய்தியும் அமையும் என்ற நம்பிக்கையுடன் தேர்தலை அறிவித்த அம்மையாருக்கு, யுத்தத்தில் மிக அண்மைக் காலமாக நடந்த இராணுவ ரீதியான தோல்விகள் மிகவும் பலத்த அடியாகி விட்டுள்ளன. அந்த அடியின் நோவிலிருந்து விடுபட உள்ள ஒரே வழி, யுத்தம் பற்றிய செய்திகளை மூடி மறைப்பதும், இவ்வாறான சம்பவங்களைப் பிரச்சாரம் செய்வதும் தான் என்பது ஒன்றும் ஊகிக்க முடியாத விடயங்கள் அல்ல.

மடு தேவாலயச் ஷெல் அடி காரணமாகப் படையினரைப் பின் வாங்கச் சொன்னதாகக் கூறும் அம்மையார், அப்படி உத்தரவிட்ட கையோடு, "இராணுவத்தினர் உற்சாகம் இழக்கும் விதத்திலான நடவடிக்கையில் யாரும் ஈடுபடக் கூடாது" என்று ஏன் கூற வேண்டும் ?"

ஒரு வேளை, இராணுவம் பின்வாங்குவதற்கு - பின் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டதற்கு - நியாயம் கூற ஏதாவது காரணம் தேவைப் பட்டதோ அவருக்கு ?

இப்படிப் போனால், இன்னும் பல அகதி முகாம்களுக்குப் புலிகள் குண்டு வீசப் போகின்ற செய்தியை நாம் படிக்கவும், கேட்கவும் வேண்டி வரலாம்.

அண்மையில் இந்தப் பத்தியாளர் தற்செயலாக ஜனாதிபதி வேட்பாளர் வாசுதேவ நாணயக்காரவைச் சந்தித்த போது அவர் சொன்னார் :

" புலிகளுடன் சண்டை நடக்கும் பகுதியிலிருந்து வெளியேற விரும்புகின்ற மக்களைப் பலவந்தமாக, இராணுவம் பிடித்து, நிறுத்தி வைத்திருக்கின்றது. இதனால் பல பொது மக்கள் காயப் பட்டும் உள்ளார்கள். இதுதான் இன்றைய அரசாங்கத்தின், புலிகளிடமிருந்து மக்களை விடுவிக்கின்ற யுத்தம்" - ஆம், மக்களைப் புலிகளிடம் இருந்து விடுவிக்க, அதுவும் ஒரு நல்ல வழி தான் போலும் !

-நாசமறுப்பான்

நன்றி - நூலகத்திட்டம்



# கிழக்கு திமோர் நேற்றைய கதையல்ல!

நோம் சொம்ஸ்கி

கிழக்குத் திமோரின் எட்டரை லட்சம் சனத்தொகையில் கிட்டத்தட்ட ஒன்றரை லட்சம் பேர் பற்றிய கணக்கெடுப்பை அங்குள்ள ஐ.நா. படைக்கு தற்போது வழங்கக் கூடியதாக உள்ளது. அது தரும் தகவலின்படி 2லட்சத்து 60ஆயிரம் பேர், மேற்கு திமோரில் உள்ள இராணுவ துணைப் படைகளது கட்டுப்பாட்டின் கீழ் நடாத்தப்படும் மிகவும் மோசமான நிலையில் உள்ள அகதி முகாம்களில் இருக்கின்றனர். இன்றும் ஒரு லட்சம் பேர் அளவானோர் இந்தோனேஷியாவின் வேறு பகுதிகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர். ஏனையோர் மலைப் பாங்கான பகுதிகளில் ஒழிந்திருக்க வேண்டும். அங்குள்ள இடம்பெயர்ந்த மக்கள் உணவு மருத்துவம் போன்றவை போதியளவு அற்ற நிலையில் இருக்கின்றார்கள் என்று அவுஸ்திரேலிய கொமாண்டர் தெரிவித்துள்ளார். கிழக்கு மற்றும் மேற்குத் திமோர் அகதி முகாம்களை சுற்றிப் பார்வையிட்ட அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் ஹெரால்ட்கோ அங்குள்ள அகதிகள் 'பட்டினியாலும் பயங்கரவாதத்தாலும்' பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறியதுடன், காரணம் எதுவும் இன்றி 'காணாமல் போதல்' என்பது அங்கு மிகவும் சாதாரணமான நாளாந்த விவகாரமாகியுள்ளது என்றும் கூறியுள்ளார்.

உண்மையில் அங்குள்ள அனர்த்தத்தின் அளவை விளங்கிக் கொள்ள வேண்டுமானால், மக்களது உயிர்வாழ்தலுக்கு அவசியமாக இருந்த பௌதீக அடிப்படைகளை இந்தோனேசிய இராணுவமும் அதன் துணைப் படைகளும் சிதைத்துள்ளமை பற்றியும், கடந்த கால் நூற்றாண்டுகட்கு மேலாக அந்தப் பிராந்தியம் எவ்வளவு பயங்கரத்திற்கு உள்ளாகி உள்ளது என்பதையும், கூட்டாட்சியின் அரசாங்க காலத்தில் இராஜதந்திர மற்றும் இராணுவ உதவிகள் வழங்கப்பட்டு வந்த காலத்தில் கொல்லப்பட்ட லட்சக்கணக்கான மக்களைப் - பற்றியெல்லாம் மனதில் இருத்திக் கொள்வது அவசியமாகும்.

காட்டர் அரசாங்கத்தின் பின்வந்தவர்கள் 1990களில் இந்த விடயத்தில் எப்படி நடந்து கொண்டார்கள்? கொலையாளிகளுக்கு வழங்கும் ஆதரவை அவர்களும் மேலும் அதிகரித்தார்கள். ஜெனரல் சுகாட்டோ, ஐ.எம்.எப்பின் உத்தரவுகளை போதியளவு நடைமுறைப்படுத்தத் தவறியதாலும், நாட்டின் மீதான கட்டுப்பாட்டை இழந்ததாலும் கிளின்ரன் நிர்வாகத்தின் அன்பை இழப்பதற்கு முன் 'எங்களைப் போல ஒருவர்' என்று அவர்களால் புகழப்பட்டார். 1991ல் டிலியில் நடந்த படுகொலைகளின் பின் காங்கிரஸ் இந்தோனேசியாவுக்கான ஆயுத விற்பனையை கட்டுப்படுத்தியதுடன் இந்தோனேசிய இராணுவத்திற்கான பயிற்சி வழங்குதலைத் தடை செய்தது.

ஆயினும், கிளின்ரன் இதை மீறவும் வேறு வழிகளை வைத்திருந்தார். காங்கிரஸ் இராணுவப் பயிற்சிக்கு தடை விதித்ததை மீள உறுதி செய்து அறிவித்ததாக Far Eastern Economics மற்றும் பத்திரிகைகள் எழுதிய போதும் உண்மையில் அப்படி எதுவும் நடக்கவில்லை.

கிளின்ரனின் இவ்வாறான செயற் திட்டங்கள் பற்றிய விசாரணைகளை இராஜாங்கத் திணைக்களம் வழமை போலவே எதிர்கொண்டது. அமெரிக்க இராணுவப் பயிற்சியானது "வெளிநாட்டு இராணுவங்களை அமெரிக்காவின் பெறுமான அளவுக்கு வளர்க்கின்றது என்ற அடிப்படையில் ஒரு பயனுள்ள கடமையை ஆற்றுவதாக உள்ளது". இந்தப் பெறுமானங்கள் 1977லிருந்து கடந்த ஆண்டு வரையான அரசாங்கத்தின் இந்தோனேசியாவுக்கான இராணுவ உதவி மற்றும் அரசாங்க அனுமதி பெற்ற ஆயுத விற்பனைகள் கிட்டத்தட்ட ஐந்து மடங்காக அதிகரித்ததன் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த மாதம் (செப் -19) லண்டன் ஒப்சேவரின் சர்வதேச செய்திச் சேவையும் லண்டன் காடியன் வார இதழும் "கிழக்குத் திமோரில் அமெரிக்கப் பயிற்சி பெற்ற கொலைக் கும்பல்கள்" என்ற தலைப்பில் ஒரு செய்திக் கட்டுரையை வெளியிட்டிருந்தன. இரு மதிப்பிற்குரிய செய்தியாளர்களால் எழுதப்பட்ட இந்தக் கட்டுரையில் கிளின்ரனின் 'இரும்புச் சமநிலை' செயற்திட்டம் மூலமாக இந்தோனேசிய இராணுவத்திற்கு வழங்கப்பட்ட பயிற்சியானது 1998ல் இருந்து நடைமுறையில் இருந்து வரும் காங்கிரசின் தடையை மீறிய செயலாகும் என்று விபரிக்கப்பட்டுள்ளது. கொப்பாசங் பிரிவு என்று கூறப்படும் கொலைகாரத் தனம் மிக்க படைகள் துணைப் படைகளை வழி நடத்துவதில் சம்பந்தப்பட்டதுடன், அவர்களது வாஷிங்டன் நன்கு அறிந்திருந்த கொடுமைகள் அனைத்திலும் பங்குபற்றவும் செய்தன. அமெரிக்கப் பயிற்சிகளினால் நீண்டகாலப் பயன்பெற்றவர்கள் தமது கொடூரச் செயல்களுக்கு மிகவும் பேர் போனவர்களாக இருந்தார்கள் என்பது மட்டுமல்லாமல், கிழக்குத்திமோர்" எல்லாவிதமான கொடூரச் செயல்களுக்கும் முன்னோடியாகவும் இருந்து வந்துள்ளது". (பென் அன்டேர்சன்- இந்தோனேசியா தொடர்பான உலகப் புகழ்பெற்ற முன்னோடி நிபுணர்களில் ஒருவர்)




கிளின்ரனது இரும்புச் சமநிலைத் திட்டமானது இந்தப் படைகளுக்கு கிளர்ச்சியை அடக்கும் நடவடிக்கைகளிலும் மனோவியல் ரீதியாக தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய நடவடிக்கைகளிலும் ஒரே நேரத்தில் நிபுணத்துவம் பெறும் விதத்திலான மேலதிகப் பயிற்சிகளை வழங்கியது. செப்டம்பர் மாதத்தில் அவர்களும் அவர்களது கும்பல்களும் தலைநகரான 'டிலி'யை எரித்துக் கொண்டும் படுகொலைகள் கொள்ளைகளில் ஈடுபட்டுக் கொண்டும் இருக்கையில் பென்டகன் இவ்வாறு அறிவித்தது: "அமெரிக்க - இந்தோனேசிய பயிற்சி நடவடிக்கைகள் ஒகஸ்ட் 25ல் முடிவடைந்த மனிதாபிமானம் மற்றும் அழிவு நிவாரண செயற்பாடுகளில் கவனம் செலுத்தியிருந்தன" - இது வெளியிடப்பட்டது பெருங் குற்றச் செயல்கள் பரவுவதற்கு காரணமாக இருந்த சர்வசன வாக்கெடுப்பு நடப்பதற்கு ஐந்து நாட்களுக்கு முன்பாகும். வாஷிங்டனில் இருந்த அரசியல் தலைமைகள் தமது இரகசியத் தகவல் பிரிவினரின் அறிக்கைகளையாவது படித்திருந்தால், இப்படி ஒரு சம்பவம் நடக்கப் போகிறது என்பதை சரியாகவே எதிர்பார்த்திருக்க முடியும்.

இவையெல்லாம், கொடிய அடக்கு முறைகளுக்காக கடந்த ஆண்டு வழங்கப்பட்ட முக்கியமான அமெரிக்க ஆதரவு பற்றிய பதிவுகளைக் கொண்ட ஒரு ஞாபகச் சின்னமாக நிலைத்து விட வழிசெய்தன. உதாரணமாக, கிழக்குத் திமோரில் நடக்கும் இந்தோனேசிய இராணுவ நடவடிக்கைகளுடன் இந்தோனேசியாவுக்கான 'வேண்டிய கடன் அல்லது



பொருளாதார உதவிகளை' இணைப்பதற்காக கிளின்ரன் நிர்வாகத்திற்கு ஏகோபித்த ஆதரவை ஜுன் 30ஆம் திகதி அமெரிக்க செனற் சபை வழங்கியிருந்தது.

1999ன் பெரும்பாலான காலப் பகுதியில் மேற்கத்தைய புத்திஜீவிகள் கொசோவாவில் நடந்த பிரமாண்டமான நடவடிக்கைகளில் தமது சொந்தப் பிரலாபத்தை பேசும் நடவடிக்கைகளை வெளிப்படுத்தும் வரலாற்றின் மிகத் துணிச்சலான காரியத்தில் ஈடுபட்டிருந்தனர். இந்த மாபெரும் சாதனையின் பல்வேறு சம்பவங்களில், ஒன்று தான் குண்டுத் தாக்குதலை அடுத்து மிரட்டப்பட்ட பெருமளவிலான அகதிகளின் வெளியேற்றம் பற்றிய தகவல்கள் மிகக் குறைந்தளவு கவனத்தைப் பெற்றுக் கொண்டதாகும். வாஷிங்டன் ஐ.நா செயற்பாடுகளுக்காக ஒதுக்கும் பணத்தை வெட்டிக் குறைத்தமை இதற்கு காரணமாகக் கூறப்படுகிறது. 1998ல் அதன் ஊழியர் தொகை 15 வீதத்தினாலும், 1999இல் 20 வீதத்தினாலும் குறைக்கப்பட்டது. இப்போதும் அது ரொனி பிளேயரினால் அமெரிக்க - இங்கிலாந்துக் குண்டு வீச்சுக்களினால் ஏற்படக் கூடிய கோரத்தனமான பின்விளைவுகளின் காரணமாக "அதன் பிரச்சினைக்குரிய செயற்பாடுகளுக்காக பழித்துரைக்கப்படும் நிலையில் நீடிக்கிறது. எதிர்பார்த்தது போல சமூக மட்டத்தில் பரஸ்பர ஈடுபாடு காட்டப்படுகிற அதேவேளை கிழக்குத் திமோரில் அழித்தொழிப்பு வேலைகள் வளர்ச்சியடைந்துள்ளன. ஓகஸ்ட் சர்வசன வாக்கெடுப்புக்கு முன்பாகக் கூட 3500 பேரளவில் கொல்லப்பட்டுள்ளதாக நம்பிக்கையான தேவாலய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. நேட்டோ தகவல்களின்படி கொசோவோ குண்டுவீச்சுக்கு முன்பாக கிட்டத்தட்ட இரண்டு மடங்கானோர் கொல்லப்பட்டுள்ளார்கள். செம்டெம்பர் மாதத்தில் இந்த அழித்தொழிப்பு நடவடிக்கைகள் மிகவும் வேகமாகப் பரவிவரும் போதும் கிளின்ரன் இதை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தார். உள்நாட்டு மற்றும் சர்வதேச (பெருமளவுக்கு அவுஸ்திரேலிய) அழுத்தங்கள் வரும்வரை இந்த நிலையே நீடித்தது. இவையெல்லாம் இந்தோனேசியா ஜெனரல்களுக்கு உடனடியாக பின்னோக்கி செயற்படுவதற்கான கால அவகாசத்தைத் தந்தன. எந்த ஒரு சராசரி நபருக்கும் கூட இத்தகைய குற்றச் செயல்கள் குறித்து உடனடியான முடிவுக்கு வர முடியும்.

அவுஸ்திரேலியா தலைமையிலான ஐ.நா. தலையீட்டுப் படைக்கு அமெரிக்கா எந்த நிதியும் வழங்கவில்லை. (ஜப்பான், இந்தோனேசியாவின் நீண்ட கால ஆதரவாளராக இருந்தபோதும் 100 மில்லியன் டொலர் வழங்கியிருந்தது). ஆனால், இது ஆச்சரியமூட்டுகிற ஒரு விடயம் அல்ல. ஏனென்றால்., கொசோவோவில் கூட அது அங்குள்ள ஐ.நாவின் சிவிலியன் நடவடிக்கைகட்கு எந்தச் செலவுத் தொகையும் தர முடியாது என்று மறுத்ததுடன் ஐ.நாவை அதன் பல நடவடிக்கைகளைக் குறைக்குமாறும்- தன்னிடம் பணம் கேட்கக் கூடும் என்பதற்காக - கோரியிருந்தது. லட்சக்கணக்கான மக்கள் மலைப் பகுதிகளில் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கக் கூடும். ஆனால், சிவிலியன் இலக்குகள் மீது அச்சொட்டாக தாக்குதல் நடாத்துகிற விமானப் படைகள் உணவுப் பொதிகளை போடுவதற்கு உரிய சக்தி அற்றிருந்தன. அத்துடன் இத்தகைய ஒரு மிக அடிப்படையான மனிதாபிமான செயலை செய்யுமாறு கேட்கப்பட்ட கோரிக்கைக்கு கூட எந்தவிதமான காதுகொடுப்பும் வழங்கப்படவில்லை. இன்றும் இலட்சக்கணக்கானோர் இந்தோனேசியாவில் தமது தலைவிதியை எதிர்நோக்கிய வண்ணம் உள்ளனர். வாஷிங்டனில் இருந்து வரும் ஒரு சொல் கூட அவர்களது காயங்களை ஆற்றப் போதுமாக இருக்கும். ஆனால், ஒரு சொல் ஒரு அபிப்பிராயம் - ஒன்றுமே கிடையாது!

கொசோவோவில் யுத்தக் குற்றங்களுக்கான ஒத்திகைகள் மே மாதத்திலிருந்து நடந்து கொண்டிருந்தன. அமெரிக்க - இங்கிலாந்து முன்முயற்சியுடன்; இரகசிய தகவல்களுக்கான முன்னெப்போதும் இல்லாத தொடர்புகளுடன் இவை நடந்தன. கிழக்குத் திமோரில், புலனாய்வு விடயங்கள் மிகவும் அமைதியாக, இந்தோனேசியாவின் பங்குபற்றுதலுடன் இறுக்கமான காலவரையறையைப் போட்டுக் கொண்டு (டிசம்பர் 31) கலந்துரையாடப்பட்டு வருகின்றன. இது ஒரு சுத்தமான பேய்க்காட்டல். ஒரு பூசிமெழுகும் செயற்பாடு' என்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் ஐ.நா. அதிகாரிகளை மேற்கோள்காட்டி எழுதின. சர்வதேச மன்னிப்பு சபையின் பேச்சாளர் ஒருவர் இந்த விசாரணைகள் "கிழக்குத் திமோர் மக்கள் ஏற்கெனவே அனுபவித்துக் கொண்டிருக்கும் துன்பங்களை விட அதிகளவு துன்பத்தைத் தரக் கூடியவை' என்று தெரிவித்தார். உண்மையில் இது இன்றைய நிலையில் ஒரு அவமதிக்கும் செயலாகவே உள்ளது. இந்தோனேசிய ஜெனரல்கள் தமது கால்களில் நிற்பதாகத் தெரியவில்லை" என்று அவுஸ்திரேலிய பத்திரிகைகள் எழுதின. சில மோசமான தகவல்களுக்கான ஆதாரங்கள் வானலைகளிலிருந்து அமெரிக்க மற்றும் அவுஸ்திரேலிய இலத்திரனியல் உபகரணங்களால் இடைமறித்துப் பெறப்படுவதும், தமது பழைய நண்பர்கள் தம்மைக் கைவிடமாட்டார்கள் என்று ஜெனரல்கள் நம்புவதும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

அத்துடன் கிழக்குத் திமோரில் நடக்கும் கொடுமைகள் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்வதற்கான எந்த முயற்சிகளும் எடுக்கப்படவில்லை. ஆனால், கொசோவோவிலோ, அமரிக்காவிலிருந்தும் பிற நாடுகளில் இருந்தும் பொலிஸ் மற்றும் மருத்துவக் குழுக்கள் அங்கு நடந்த பெருமளவிலான கொடூரங்களை அறிந்து கொள்ளும் நோக்குடன் குவிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு தோண்டி எடுக்கப்படவுள்ள தகவல்கள் நேட்டோ குண்டுத் தாக்குதல்களை அவை மிலோசெவிக்கினால் தனிப்பட திட்டமிடப்பட்டவை என நியாயப்படுத்த உதவக் கூடும் என்ற நம்பிக்கையுடன் செய்யப்படுகின்றன. நேட்டோ கொமாண்டர் வெஸ்லி கிளாக் குண்டுத் தாக்குதல் நடந்த ஒரு மாதத்தின் பின் "இந்தத் திட்டங்கள் என்னுடன் கலந்துரையாப்படவில்லை' என்றும் நேட்டோ நடவடிக்கைகள் அரசியல் தலைமையால் சேர்பிய இனச் சுத்திகரிப்பை நோக்கமாகக் கொண்டு செய்யப்படவில்லை'' என்றும் தெரிவித்துள்ள போதும் இவை செய்யப்பட்டு வருகின்றன. வாஷிங்டன் இந்தக் குற்றச் செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக ஒரு விரலைக் கூட உயர்த்த மறுத்தது தொடர்பாக அவுஸ்திரேலிய இராஜதந்திரியான பட்லர் "சிரேஷ்ட அமெரிக்க ஆய்வாளர்களினால் எனக்கு மிகவும் தெளிவாக தெரிவிக்கப்பட்டதென்னவென்றால், கூட்டணிக்கான அடிப்படைகள் முக்கியமாக அமெரிக்காவின் நலன்களையும் நெருக்கடி மதிப்பீடுகளையும் பெருமளவுக்கு அடிப்படையாகக் கொண்டு வரையறை செய்யப்பட்டவையாக இருக்கும் என்பதுவும், இவ்விடயத்தில் அமெரிக்கா தனது எதிர்வினையை விகிதாசார அடிப்படையிலேயே செய்யும் என்பதுமாகும்" என்று தெரிவித்தார். இவரது இந்தக் கருத்துக்கள் அமெரிக்காவை விமர்சிப்பதற்காகச் சொல்லப்படவில்லை. மாறாக, தனது சக அவுஸ்திரேலியர்கள் மற்றவர்களும் சுமையை எதிர்கொள்ள வேண்டும். அதன் செலவீனங்களுக்கு முகம் கொடுக்க வேண்டும் என்ற உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே சொல்லப்பட்டன.

ஒரு சில ஆண்டுகட்கு அமெரிக்க நிறுவனங்கள் அவுஸ்திரேலிய நடவடிக்கைகளுடன் கருத்து வேறுபாடு கொண்டுள்ள இந்தோனேசியாவிலிருந்து சந்தோசமாக பொறுக்க வேண்டியவற்றை பொறுக்கி முடிக்குமானால் இது ஒரு பெரிய அதிர்ச்சியாக வரப் போவதில்லை. சுமக்க முடியாத பாரத்தை சுமப்பதான சில முறைப்பாடுகள் மட்டும் சிலவேளை வெளிப்படக் கூடும்.

இந்தச் சுய பிரலாப காட்டுக் கத்தல் தற்போது முழுதாக இல்லாவிட்டாலும் ஓரளவுக்கு ஓரங்கட்டப்பட்டுள்ளது. இந்த வெட்கம் கெட்ட செயற்பாடுகளை விட முக்கியமானது என்னவென்றால், ஒரேயடியாகவும் தீர்மானகரமாகவும் இந்த மோசமான நூற்றாண்டின் பயங்கரமான துன்பியல் நிகழ்வுகளிலிருந்து எஞ்சியிருப்போரையாவது பாதுகாப்பதற்காக செயற்படுவதில் இருந்து தவறுவது தான்!

தமிழில்:அருண்

நன்றி: www.lol.shareworld.com

நன்றி - நூலகத்திட்டம்



# சட்ட விரோத தேர்தல் இது!

**ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பது என்பது, சுதந்திரமானதும், சமத்துவமானதும், இரகசியமான முறையில் வாக்குச் சீட்டு மூலமாகச் செய்யப்படுவதுமாகும் என்று அரசியலமைப்புச் சட்டத்தின் 93வது சரத்துக் கூறுகிறது. ஆனால், 'சுதந்திரமான தேர்தல்' என்பது அவசர காலச் சட்டம் போன்ற சட்டபூர்வ காரணங்களாலும், யுத்தம், அமைதியின்மை அல்லது வாக்காளர் வாக்களிக்க முடியாத சூழ்நிலைகள் ஏதாவது நிலவுதல் போன்றவற்றினால் பாதிக்கப்படாததாக அமைய வேண்டும். ஆனால், வடக்குக் கிழக்கில் அவ்வாறான ஒரு நிலை தற்போது இல்லை. நாட்டின் எந்தப் பாகத்திலுள்ள வாக்காளர்களும், தேர்தலின் போது அவர்கள் எந்த இன, மத, அரசியல் அபிப்பிராயச் சார்பு உடையவர்களாயினும் சரி, சம வாய்ப்பு உள்ளவர்களாகச் செயற்பட வேண்டும். ஆனால், வடக்குக் கிழக்கில் அது சாத்தியமில்லை.**

டிசம்பர் 21ம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் சட்ட விரோதமானதும், உள் நோக்கங்கள் கொண்டதும், எழுந்தமானமான அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட ஒன்றாகவும் இருப்பதால் அது, அரசியலமைப்புச் சட்டத்தின் 12(1) ஷரத்து மற்றும், வாக்காளர் ஒருவருக்கு அச்சட்டம் வழங்கும் 14(1) (a) ஷரத்து மூலமான உரிமைகளை மறுப்பதாக அமைகின்றது என்பதாலும் இத்தேர்தலை நடாத்துவது செல்லுபடியற்றதாகும் எனத் தீர்ப்பளிக்குமாறு கோரி கொழும்பு உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சரிநிகர் பத்திரிகையின் ஆசிரியரும், சுதந்திர பத்திரிகையாளர் அமைப்பின் உறுப்பினருமான பாலசுப்பிரமணியம் வசந்தன் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு எதிர்வரும் வெள்ளியன்று (26/11/99) விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னமும் முழுதாக ஓராண்டு காலம் இருக்கும் போதே அவசர அவசரமாக ஜனாதிபதித் தேர்தலை முன்வைக்க ஜனாதிபதி முடிவு செய்துள்ளமை, அதிலும் வடக்குக் கிழக்கில் தேர்தல் நடாத்தக் கூடிய சூழல் இன்னமும் நிலவவில்லை என்ற போதும் தேர்தலை ஜனாதிபதி அவர்கள் அவசர அவசரமாக அறிவித்திருக்கிறார்.

தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குப் பலத்தைப் பெற்று அரசியலமைப்பைத் திருத்துவதற்கான அங்கீகாரத்தைப் பெறத் தான் ஜனாதிபதித் தேர்தலில் தான் குதித்துள்ளதாகக் கூறுகிறார். ஆனால், மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குப் பலம் தேவையானால் அவர் உடனடியாக வைத்திருக்க வேண்டிய தேர்தல் பாராளுமன்றத் தேர்தல் தான் எனவும் அதில் குறிப்பிடப் பட்டுள்ளது

சட்ட மா அதிபர், பதில் தேர்தல் ஆணையாளர்கள் எம். சீ. அருந்தவச்செல்வம், டீ.எம்.பீ.பீ. தசநாயக்க, தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க மற்றும் தேர்தல் வேட்பு மனுத் தாக்கல் செய்த வேட்பாளர்கள் ஆகியோரைப் பிரதிவாதிகளாகக் கொண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கில், இந்தத் தேர்தல் நடத்தப்படுவதைத் தடைசெய்யுமாறு கோரிப் பின்வரும் காரணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.



ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க அவர்கள் 10. 11. 1994ல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் மூலம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். 1994 நவம்பரிலிருந்து இன்று வரை ஜனாதிபதியாக இருந்து வரும் அவர் அரசியலமைப்புச் சட்டத்தின் 30(2)வது சரத்தின் பிரகாரம் 06 வருடங்களுக்கு, அதாவது நவம்பர் 2000ம் ஆண்டு வரை ஜனாதிபதியாக இருப்பதற்கான ஆணை அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், கடந்த ஒக்டோபர் 20ம் திகதியன்று வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தான் இன்னொரு ஆண்டு காலம் பதவியிலிருப்பதற்கான ஆணையை மக்களிடமிருந்து பெறுவதற்கு விரும்புவதாக அரசியலமைப்புச் சட்டத்தின் 31(3A)வது சரத்தைப் பயன்படுத்தி அவர் பிரகடனம் ஒன்றைச் செய்துள்ளார். இதைத் தொடர்ந்து, பதில் தேர்தல் ஆணையாளர் ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் வேட்பு மனுத் தாக்கல் செய்ய வேண்டிய திகதி, செய்யப்பட வேண்டிய இடம், தேர்தல் நாள் என்பனவற்றை அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் பிரகடனம் செய்த அதேவேளை, வேறு சில காரணங்களையும் அதற்குக் காரணமாகத் தெரிவித்துள்ளார். "ஜே. ஆர். ஜயவர்த்தனவின் இன்று நடைமுறையிலுள்ள உதவாக்கரை அரசியலமைப்புச் சட்டம் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தடைக்கல்லாக உள்ளது. அது கோரும் 2/3 பெரும்பான்மை காரணமாக எதுவும் செய்ய முடியவில்லை. எதிர்க் கட்சி 2/3 பெரும்பான்மையை உருவாக்க உதவ மறுப்பதால் அரசாங்கத்தின் சமாதானப் பொதியை நடைமுறைக்குக் கொண்டு வர முடியவில்லை. ஆகவே இந்த அரசியலமைப்புச் சட்டத்தைத் தூக்கி வீசவேண்டியுள்ளது" என்று அவர் தெரிவித்துள்ளார். ஆனால், இன்றைய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதிக்கு 2/3 பெரும்பான்மையைப் பாராளுமன்றத்தில் பெற்றுக் கொள்வதற்காக ஒரு பொதுத் தேர்தலை நடாத்த முடியும். அல்லது ஏதாவது பொதுசன முக்கியத்துவம் வாய்ந்த மசோதா அல்லது வேறேதாவதொன்று குறித்து ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடாத்த முடியும். ஆனால், அவர் அப்படியான எந்தச் சட்டபூர்வ வழிகளையும் கையாண்டு, இன்றைய அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தவோ, புதிய அரசியலமைப்புச் சட்டத்தைக் கொண்டு வரவோ முயலவில்லை.

ஜனாதிபதி, பதவி ஏற்கும் போது இந்த அரசியலமைப்புச் சட்டத்தின் கீழுள்ள, ஏழாவது நிரலின் கீழ் சத்தியப் பிரமாணம் செய்கையில், "சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க ஆகிய நான் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்கவும், உயர்த்திப் பிடிக்கவும் செய்வேன், என்று உறுதிப் பிரகடனம் செய்கிறேன்" என்று தெரிவித்தார். ஆனால், அவர் அரசியலமைப்புத் தொடர்பாக மேலே சொன்ன காரணங்கள் எல்லாம் அவரது சத்தியப் பிரமாணத்திற்கு முரணானவையாக அமைந்துள்ளன. அத்துடன் அவர் இப்படிக் கூறுவது, ஒழுக்க வழுவுரைப் பிரேரணை கொண்டு வரக் கூடியளவுக்குக் காத்திரமான குற்றம் என்று அரசியலமைப்பின் 38(2) சரத்துக் கூறுகிறது.

**வடக்கு - கிழக்குக்கு வெளியில் வாழும் பெரும்பான்மைச் சிங்கள - பௌத்தர்களால் தீர்மானிக்கப்படும் ஒரு தெரிவுக்கே இந்தத் தேர்தல் வழி வகுக்கும்.**

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பது என்பது, சுதந்திரமானதும், சமத்துவமானதும், இரகசியமான முறையில் வாக்குச் சீட்டு மூலமாகச் செய்யப்படுவதுமாகும் என்று அரசியலமைப்புச் சட்டத்தின் 93வது சரத்துக் கூறுகிறது. ஆனால், 'சுதந்திரமான தேர்தல்' என்பது அவசர காலச் சட்டம் போன்ற சட்டபூர்வ காரணங்களாலும், யுத்தம், அமைதியின்மை அல்லது வாக்காளர் வாக்களிக்க முடியாத சூழ்நிலைகள் ஏதாவது நிலவுதல் போன்றவற்றினால் பாதிக்கப்படாததாக அமைய வேண்டும். ஆனால், வடக்குக் கிழக்கில் அவ்வாறான ஒரு நிலை தற்போது இல்லை. நாட்டின் எந்தப் பாகத்திலுள்ள வாக்காளர்களும், தேர்தலின் போது அவர்கள் எந்த இன, மத, அரசியல் அபிப்பிராயச் சார்பு உடையவர்களாயினும் சரி, சம வாய்ப்பு உள்ளவர்களாகச் செயற்பட வேண்டும். ஆனால், வடக்குக் கிழக்கில் அது சாத்தியமில்லை.

முதலாவதாக, 1994ல் இருந்து 04.08.1998 வரை நாட்டின் சில பகுதிகளில் மட்டும் அவசர காலச் சட்டம் அமுலில் இருந்தது. ஆனால், அதன் பின் அவசர காலச் சட்டம் நாடுபூராவும் நடைமுறையில் இருக்கின்றது.

இரண்டாவதாக, விடுதலைப் புலிகள், அரசாங்கத்தின் தீர்வுப் பொதியை ஏற்றுக் கொள்ளவில்லை.

மூன்றாவதாக, வடக்கிலுள்ள பல முகாம்களை இன்று இராணுவம் இழக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இராணுவத் தாக்குதல்களில் புலிகள் ஈடுபட்டிருக்கின்றார்கள். தவிரவும், வன்னி இப்போது அவர்கள் கையில் வீழ்ந்திருக்கின்றது.

**இந்தத் தேர்தல் பிரகடனம் உள்நோக்கம் கொண்டதும், சட்ட விரோதமானதும், அரசியல் இலாபங்களுக்காகச் செய்யப்படும் ஒன்றாகவுமே அமைந்துள்ளது.**

நான்காவதாக, எல்லைப் புறக் கிராமங்களில் வாழும் வடக்கின் வாக்காள மக்கள், தங்களது வீடு, வாசல்க்ளை விட்டுப் பெருமளவில் இடம் பெயர்ந்துள்ளார்கள்.

ஆக, இத்தகைய ஒரு சூழலில் நடாத்தப்படும் ஒரு தேர்தல், அதுவும் குறிப்பிட்ட நாளுக்கு முன்பாகவே நடாத்தப்படும் ஒரு தேர்தல், பெரும்பாலும், வடக்கு - கிழக்குக்கு வெளியில் வாழும் பெரும்பான்மைச் சிங்கள - பௌத்தர்களால் தீர்மானிக்கப்படும் ஒரு தெரிவுக்கே வழி வகுக்கும்.

ஆகவே, இந்தத் தேர்தல் பிரகடனம் உள்நோக்கம் கொண்டதும், சட்ட விரோதமானதும், அரசியல் இலாபங்களுக்காகச் செய்யப்படும் ஒன்றாகவுமே அமைந்துள்ளது.

தவிரவும், ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுக்களைக் கோரும் உரிமை ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின் 119வது சரத்துப்படி, தேர்தல் ஆணையாளருக்கு மட்டுமே உரியது மட்டுமல்லாமல், அது வேறு யாருக்கும், அவரது பிரதிநிதியாகச் செயற்பட வழங்கப்பட முடியாததுமாகும். ஆகவே, இந்தத் தேர்தல் பிரகடனமும், தேர்தலை நடாத்துவதாகப் பதில் தேர்தல் ஆணையாளர் அறிவித்திருப்பதும் சட்டத்தை மீறிய நடவடிக்கைகளாகும்.

அத்துடன், பதில் தேர்தல் ஆணையாளர் தேர்தலை நடாத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அதேவேளை, இப்போது இரண்டாவது, பதில் தேர்தல் ஆணையாளரும் (மூன்றாம் பிரதிவாதி) நியமிக்கப்பட்டுள்ளார். இந்த மூன்றாம் பிரதிவாதியான டீ.எம்.பீ.பீ. தசநாயக்க தேர்தல் திணைக்களத்தின் ஒரு அதிகாரி அல்ல. எத்தனையோ அனுபவம் வாய்ந்த உப தேர்தல் ஆணையாளர்களும், எத்தனையோ உதவித் தேர்தல் ஆணையாளர்களும் இருக்கையில், இவர் நியமிக்கப்பட்டிருப்பது சந்தேகத்திற்குரிய ஒன்றாகவும், சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலுக்கு முரணானதாகவும் அமைந்துள்ளது.

இந்த மூன்றாம் பிரதிவாதியே, தேர்தல் வேட்பு மனுக்களைக் கடந்த 16ம் திகதியன்று ஏற்றுக் கொண்டிருக்கின்றார்.

இந்தக் காரணங்களுக்காகத் தேர்தலை வைக்க முயலும் இந்த நடவடிக்கையானது, சட்டவிரோதமானதும், உள்நோக்கம் கருதியதாகவும், எழுந்தமானச் செயற்பாடு உடையதாகவும் உள்ளது.

நன்றி - நூலகத்திட்டம்



# ஊடகங்களும் பண்டாரநாயக்கா—சேனநாயக்கா குடும்பங்களின் செல்வாக்கும்!

ஜனாதிபதித் தேர்தல் ஆயத்தங்கள் சூடு பறக்க 13 வேட்பாளர்களுமாக செய்துகொண்டிருக்க பிரச்சார நடவடிக்கைகளுக்கு ஆளும் வர்க்க குழுமங்கள் ஊடகங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும் அல்லது அவற்றை கைக்குள் போட்டுக்கொள்ளவுமாக முயற்சிகளைச் செய்து வருகின்றன. அரச ஊடகங்களான, ரூபவாஹினி, சுயாதீன தொலைக்காட்சி சேவை (ITN) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (SLBC) என்பவற்றை பொ.ஐ.மு.வும், டீ.என்.எல். (TNL) தொலைக்காட்சிச் சேவை மற்றும் ஒலிபரப்புச் சேவை (டீ.என்.எல். ரணிலின் சகோதரன் ஷான் விக்கிரமசிங்கவின் நிறுவனம் என்பது தெரிந்ததே.) என்பனவற்றை ஐ.தே.க.வும் தமது கைக்குள் போட்டுக்கொண்டுள்ளன. இந்த இரு பிரதான கட்சிகளும் இவ்வாறு இலத்திரனியல் ஊடகங்களை மட்டுமன்றி அச்சு ஊடகங்களையும் இவ்வாறு தமது கைக்குள் கொண்டு வருவதற்கான எத்தனிப்புகளை முனைப்பாக தற்போது செய்து வருகின்றன. (ஐ.தே.க. சண்டே லீடரையும் பொ.ஐ.மு லேக் ஹவுஸ் பத்திரிகைகளையும் ஏலவே தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்டன.)

ஐ.தே.க. இவ்வாறு ஆளுங்கட்சியை அம்பலப்படுத்த ஊடகங்களை பயன்படுத்துவது ஆளுங்கட்சிக்கு பெரும் தலையிடியாகிவிட்டிருக்கிற நிலையில் திடீரென தகவல் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர ஜனாதிபதித்தேர்தல் சட்டத்தின்படி அரச தொலைக்காட்சிச் சேவைகளில் மட்டும்தான் ஜனாதிபதி வேட்பாளர்கள் பிரச்சாரம் செய்யமுடியும் என்று கூறி அந்தச் சட்டங்களின் மூலம் எதிர்க்கட்சிகளின் பிரச்சாரங்களை நிறுத்தும் முயற்சியில் இறங்கவே, ஏனைய தனியார் தொலைக்காட்சி சேவைகள் மற்றும் தொடர்பூடகவியலாளர்கள் இதற்கு எதிராக கிளம்பியுள்ளனர். தொலைக்காட்சி சேவைகள் இலங்கைக்கு அறிமுகமாகுமுன் (அதாவது 1972இல்) கொண்டு வரப்பட்ட இந்தச் சட்டங்களைப் பயன்படுத்தி அரசு கருத்துச் சுதந்திரத்தை பறிக்க முயற்சிக்கிறது என்று குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அரச பயங்கரவாதத்தை பல்வேறு பரிமாணங்களில் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு வழிமுறைகளின் மூலம் மேற்கொள்வதை பொதுப்புத்தி மட்டத்தில் கூட எவராலும் அறிய முடியும். ஒரு அடக்குமுறை அரசு அப்படித்தான் செய்யும். செய்து வருகிறது. ஆனால் அதே வேளை இலங்கையில் தனியார் இலத்திரனியல் ஊடகங்கள் இலங்கையின் ஆதிக்க சித்தாந்த வெறியைப் பரப்புவதில் ஆற்றி வரும் பாத்திரத்தை எவரும் அறிவர்.

இலங்கையில் ஒரு புறம் தமிழ் மக்கள் மீது கடும் அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிற நிலையில் சிங்கள பௌத்த பேரினவாதத்தைப் பலப்படுத்துவதில் டீ.என்.எல். தொலைக்காட்சி சேவையின் பாத்திரம் முக்கியமானது.

## இலத்திரனியல் ஊடகங்களின் வருகை

இலங்கையின் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகத்தோடு அந்நிய ஏகாதிபத்திய பல்தேசியக் கம்பனிகள் இலங்கையில் கடைவிரிப்பதெனில் தமது நுகர்பொருள் கலாசார பிரச்சாரத்துக்காக இலங்கையில் இலத்திரனியல் ஊடகங்களின் வியாபகப்படுத்துவது முன்நிபந்தனையாகக் கருதின. போட்டிமிக்க திறந்த சந்தையில் இது அத்தியாவசியமான ஒன்றெனக் கருதிய முதலீட்டாளர்கள் இலங்கையில் தொலைக்காட்சி சேவையை ஆரம்பிப்பதில் எமது நாட்டுத் தலைவர்களை விட அதிக அக்கறை எடுத்துக்கொண்டது இதன் காரணமாகத் தான். 1978இல் ஜப்பான் அரசு இதற்கு அதிகளவு உதவியிருந்தது. இலங்கையில் முதலாவது தொலைக்காட்சி சேவையான ஐ.டீ.என். (சுயாதீன தொலைக்காட்சி சேவை 1979 ஏப்ரல் 14ஆம் திகதி முதலாவது ஒலிபரப்பை ஆரம்பித்தது.

இலங்கையியை அந்நிய சுரண்டலுக்கு திறந்து விட்ட அன்றைய ஜனாதிபதி ஜே.ஆரைப் பயன்படுத்தி, ஜே.ஆரின் உறவினரான ஷான் விக்கிரமசிங்கவும், அனில் விஜேவர்தனவும் கூட்டுச் சேர்ந்து இந்த தனியார் தொலைக்காட்சி சேவையை ஆரம்பித்தனர். அந்த ஷான் விக்கிரமசிங்க தான் இன்றைய டீ.என்.எல். நிறுவனத்தின் உரிமையாளரும் ரணில் விக்கிரமசிங்கவின் சகோதரனுமாவார். (இவரின் மகள் இஷினி விக்கிரமசிங்க இந்த டீ.என்.எல். சேவையின் செய்திப் பொறுப்பாளராக இருந்து புலிகள் குறித்த ஒரு செய்தியை வெளியிட்டார் என்று அரசினால் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டவரும், அதன் பின்னர் புகழ்பெற்ற நிகழ்ச்சியான ஓல்வேஸ் பிரேக் டவுன் நிகழ்ச்சியை தயாரித்து வழங்கி பின்னர் அதனை நிறுத்த தகப்பனார் செய்த முயற்சியின் விளைவாக அதிலிருந்து விலகி இன்று அரசாங்கத்துடன் இணைந்து கொழும்பு மேற்குக்கான பொ.ஐ.மு.-வின் அமைப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்)

1979 யூன் மாதம் 5ஆம் திகதி 39/5 இலக்கம்கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஜே.ஆர் அரசாங்கம் "வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி சேவை"யை (ITN) அரசுடமையாக்கியது. 1982ஆம் ஆண்டு பெப்ரவரி 15இலிருந்து ரூபவாஹினி தொலைக்காட்சி சேவையையும் ஆரம்பித்தது அரசாங்கம். அதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட தொலைக்காட்சி சேவைகள் பற்றி பார்க்க அட்டவணையில் பார்க்கவும்.

இவற்றில் இன்றும் இனவாதத்தைக் கக்குகின்ற நிகழ்ச்சிகளை வெளிப்படுத்தி வருகின்ற முக்கிய சேவை டீ.என்.எல். ஆகும். இச்சேவைக்கும் ரணிலுக்கும் தொடர்பில்லை என்று ரணிலே கூறி வருகின்ற போதும், அதன் மீதான மறைமுக கட்டுப்பாடு ஊரறிந்த இரகசியம். "ஓல்வேஸ் பிரேக் டவுன்" நிகழ்ச்சி ரணிலுக்கு பாதகமானது என்று கூறி அதனை நிறுத்துவதற்கு காரணமாக இருந்ததும் அதன் விளைவாக இஷனி வெளியேற நேரிட்டதும் ரணிலால் தான். அரசின் செய்திகளை மறுக்கின்ற சாராம்சத்தைக் கொண்டதும், அரசை அம்பலப்படுத்துகின்ற செய்திகளையும் வெளிப்படுத்துகின்ற வகையிலும் ஐ.தே.க.வின் பிரச்சாரங்களை கொண்டு செல்வதும் டீ.என்.எல்லின் வழமை. இந்த பொ.ஐ.மு. எதிர்ப்பு நிலை சில வேளைகளில் போர்முனைச் செய்திகளை புலிகளுக்கு சாதகமான வகையிலும் அமைந்து விடுவது உண்டு. ஐ.தே.க.வின் ஆதரவு பத்திரிகையான சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவை வைத்து ஆங்கிலத்திலும் சமுதித்தவை வைத்து சிங்களத்திலும் அரசை அம்பலப்படுத்தும் அரசியல் விவாதங்களை டீ.என்.எல். தொடர்ந்து நடத்தி வருகிறது. அரசைக் கடுமையாக அவ்வவ் காலகட்டங்களில் கண்டனம் செய்பவர்களைப் பிடித்து அவர்களுக்கு களமமைத்துத் கொடுப்பதற்கூடாக இது நடைபெறுகிறது.

அது போல கங்கொடவில சோம ஹிமியை ஊதிப்பெருப்பித்ததும், அவரைப்போலவே வேறும் பல இனவாதத் தரப்பினரை வைத்து இனவாதத்தை திட்டமிட்டு கக்கவைத்ததிலும் டீ.என்.எல். சேவைக்கு முக்கிய பங்குண்டு. சிங்கள வீரவிதானவின் நிகழ்ச்சிகளை அவர்களின் செயற்பாடுகள் என்பவற்றுக்குப் பெரும் பிரச்சாரத்தையும் டீ.என்.எல்லைத் தவிர வேறு எந்த தொலைக்காட்சி சேவையும் அதிகமாக வழங்கியது இல்லை. அதுவும் விளம்பரமின்றி தமது தயாரிப்பாகவே மணத்தியாலக்கணக்கில் அவ்வாறு ஒளிபரப்பப்பட்டுள்ளன.

பொ.ஐ.மு. அரசாங்கம், தமது கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்ற ஊடகங்களை ஆளுங்கட்சியின் நலன்களுக்குப் பயன்படுத்துவது கிடையாது என்று கூறுவது போலவே இந்த டீ.என்.எல் சேவைக்கும் தமக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்று ரணில் போன்றோர் கூறிவருகின்றனர்.

1990 ஒக்டோபர் 20ஆம் திகதி டெலிஷான் லிமிட்டட் நிறுவனம் தொலைக்காட்சி சேவை ஆரம்பிப்பதற்கான விண்ணப்பத்தை ஷான் விக்கிரமசிங்க செய்திருக்கிறார். அதனை அன்றைய கலாச்சார அலுவல்கள், தகவல் தொடர்பு அமைச்சராக இருந்த வி.ஜே.மு.-லொக்குபண்டாரவின் மூலம் அனுமதிக்கச் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கான மேற்படி திகதியிடப்பட்ட அந்தக் கடிதத்தில் அவர் தாம் அதற்கு முன்னர் "கம் உதாவ" மற்றும் படையினருக்கு ஆதரவான நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்கி வந்தவரென்றும் தான் தொடரப்போகும் தொலைக்காட்சி சேவைக்கு படையில் இருந்து அங்கவீனமுற்றிருப்போருக்கு அச்சேவையில் தொழில் முன்னுரிமை வழங்குவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். (இது குறித்த கடிதங்களின் பிரதிகளை சிங்கள வாராந்த பத்திரிகையான சிலுமின 18-07-99இல் வெளியாகியிருக்கிறது.) 1991-03-18 கூடிய அமைச்சரவையில் இதற்கான அனுமதி நிறைவேற்றப்பட்டுள்ளது. 1991-08-07 அன்று இதற்கான முழுமையான அங்கீகாரம் வழங்கப்பட்டது.

ஷான் விக்கிரமசிங்க தமது நிறுவனமான டெலிஷான் லிமிட்டட்டை, டெலிஷான் நெட்வோர்க் பிரைவேட் லிமிட்டட் என பெயர் மாற்றம் செய்வதாக தகவல் அமைச்சுக்கு அறிவிப்பதற்காக எழுதப்பட்ட 05-05-91 திகதியிடப்பட்ட கடிதத்தில் இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டு விலாசமான இல.115, 5வது ஒழுங்கை, கொழும்பு-07 எனும் விலாசமிடப்பட்டுள்ளது. இதே விலாசம் தான் இது தொடர்பான ஏனைய கடிதங்களுக்குமான விலாசமாகவும் பயன்படுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.


ஷான் விக்கிரமசிங்க
(ரணிலின் சகோதரன்)

இன்றைய உலகில் தகவல் தொழில்நுட்பம் வேகமான மாற்றத்துக்கான பாத்திரத்தை ஆற்றி வரும் நிலையில் கணிணி மற்றும் இணையத்தின் தொழிற்பாடு என்பவை மேலும் ஆழமாக நிலைநிறுத்தப்படும் வரை இந்தத் தொலைகாட்சி மற்றும் வானொலி போன்ற இலத்திரனியல் ஊடகங்கள் பாரிய பங்களிப்பை ஆற்றி வரவே செய்யும். இப்படிப்பட்ட நிலையில் இலங்கையின் இந்த தகவல் துறையை கைப்பற்றி தமது நலன்களை அடைய முயற்சி செய்யும் சக்திகள் ஏறாள்ம். பெருமுதலாளிகள், தரகுமுதலாளிகள், அவர்களின் கருவிகளான ஏனைய ஆதிக்க சக்திகள் மற்றும் அளும் குழுமங்கள் என பல்வேறு சக்திகள் உள்ளனர். இலங்கையைப் பொறுத்தவரை இலங்கையில் முக்கியமாக இரண்டு குடும்பத்தினரின் செல்வாக்கு தான் இலங்கையின் தொடர்பூடகத் துறையிலும் சரி அரசியல் துறையிலும் சரி போட்டிபோட்டு தமதாதிக்கத்தை நிலைநிறுத்தி வருகின்றனர். அவர்களின் இந்தப்போட்டிக்குப் பின்னால் வெறும் குடும்ப அந்தஸ்து மற்றும் சாதியம் என்பவை முக்கியமாக தொழிற்பட்டிருப்பதை கூர்மையாக அவதானித்தால் வெளிப்படும்.

சேனநாயக்க குடும்பம் மற்றும் பண்டாரநாயக்காவின் குடும்பம் என்பவற்றைச் சேர்ந்தவர்களின் இந்த மோதலை விளங்குவதென்றால் அதன் பின்புலத்தை சற்று விளங்குவது அவசியம்.

சேனநாயக்க குடும்பம் கொவிகம சாதிப் பின்னணியைக் கொண்டது. ஆனால் பண்டாரநாயக்காவின் குடும்பம் அளவுக்கு கொவிகம சாதியைப் பிரதிநிதித்துவப்படுத்திய நிலப்பிரபுத்துவ மேற்தட்டு பின்னணியைச் சேர்ந்தவர்கள் இல்லை. எவ்வாறிருந்த போதும் நவீன பொருளாதாரத் துறையில் அவர்கள் காலப்போக்கில் மூதலீடுகளைச் செய்தும், தரகுமுதலாளித்துவ பாத்திரத்தை வகித்ததாலும் அவர்களின் பொருளாதாரப் பின்னணி இலங்கையில் முக்கியத்துவமானது. (குடும்பப் பின்னணியை விளக்கும் மரவடிவிலான வரைபைப் பார்க்க)

இன்று இலங்கையின் அதிபேரினவாதத்தைக் கக்குகின்ற பத்திரிகைகளான த ஐலண்ட் மற்றும் திவய்ன ஆகிய அதிவிற்பனையையுடைய பத்திரிகைகளை வெளியிடும் "உபாலி நிறுவனம்" ரத்வத்தை குடும்பத்துக்கு சொந்தமானது என்பதும் (சீவலி ரத்வத்தை-இவர் இலங்கை பாதுகாப்பு படைக்கு தேவையான ஆயுத இறக்குமதி ஏஜென்டாக நெடுங்காலமாக இருந்து வருவதைப் பலர் அறிந்திருப்பர். அது போல திவய்னவின் பேரினவாதப் போக்குக்குக் காரணம் இந்த ஆயுத கொமிசனின் மூலம் கிடைக்கின்ற பெரும் லாபத்தை தக்கவைப்பதே. இனவெறியை அப்படியே தக்கவைப்பதும் அதனை கூர்மைப்படுத்துவதுமே போரை அதிகரிக்கச் செய்வதோடு ஆயுதத் தேவையும் அதிகப்படுத்தும் என்பதை இவர்கள் நன்றாக அறிந்து வைத்திருக்கிறார்கள்), இன்னுமொரு தினசரி பத்திரிகையான லங்காதீப மற்றும் சண்டே டைம்ஸ் ஆகியவற்றை வெளியிடும் விஜய வெளியீட்டு நிறுவனம் விஜயவர்தன குடும்பத்துக்கு சொந்தமானவை என்பதும் தெரிந்ததே. அது போல ரணிலின் சகோதரன் ஷான் விக்கிரமசிங்க டீ.என்.எல் தொலைக்காட்சி மற்றும் வானொலி சேவைகளை நடத்தும் டெலிஷான் நெட்வோர்க் பிரைவேட் லிமிட்டட்டுக்கு சொந்தக்காரர் என்பதும் முக்கியமானது.

இந்தக்குடும்பங்கள் தான் இன்றைய பேரினவாத, சாதிய ஆதிக்க, மற்றும் நுகர்பொருள் கலாசாரத்தைத் திணிக்கின்ற, அந்நிய முதலீட்டுத் துறைகளுக்கு பிரசாரம் செய்கின்ற, ஆணாதிக்க சித்தாந்தங்களை நிலைநிறுத்துகின்ற ஆளும் பிரதான கட்சிகள் இரண்டையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முக்கிய சக்திகளாக இருக்கின்றன என்பதை விளங்கிக் கொள்வோம். மேற்தோற்றத்தில் இவை அத்தனை பெரிய ஒன்றாக வெளித் தெரியாவிட்டாலும் இந்த சக்திகளின் வர்க்கப் பின்னணியானது இந்த அத்தனை ஆதிக்க சித்தாந்தங்களையும் தக்க வைப்பதன் மூலம் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வருகின்றன என்றால் அது மிகையில்லை. இப்படியான இன்னொரு கோணத்திலான பார்வை வேறு வெளிச்சங்களையும் எமக்கு வெளிப்படுத்தலாம்.


**-கோமதி**

## தொலைக்காட்சி சேவைகளின் ஆரம்பம்

| நிறுவனம் | தொலைக்காட்சி சேவையின் பெயர் | ஆரம்பம் | மொழி |
|---|---|---|---|
| ITN | ITN | 14 April 79 | Sin-Tam-Eng |
| Sri Lanka Rupavahini Corp. | Rupavahini | 15 Feb 82 | Sin-Tam-Eng |
| MTV Channel Pvt Ltd | MTV | 22 Dec-91 | Sin-eng |
| Teleshan Network Pvt Ltd. | TNL | June 1993 | Sin-Tam-Eng |
| Dyna Broadcasting Pvt Ltd | Dyna Vision | 29 Feb 1996 | Eng |
| Eap Edirisinghe Pvt Ltd | Etv-1, Etv-2 | Nov 1993 | Eng-Hindi |
| Eap | Swarnawahini | 17 Mar 1997 | Sinhala |
| Maharajah Organisation | Sirasa | Nov 1998 | Sinhala |
| Maharajah Organisation | Sakthi | Nov 1998 | Tamil |

### ஊடகங்களில் பண்டாரநாயக்க- சேனநாயக்க குடும்பச் செல்வாக்கு

### லங்காதீப-திவய்ன-ரீ.என்.எல்.



நன்றி: *janice jiggins*-Caste and family in the politics of the Sinhalese 1947-1976

நன்றி - நூலகத்திட்டம்



### டெறிக் வோல்கொற்றின் படைப்பாற்றலிற்கான கற்பனை

அடிமை முறைமையாலும், அடிமை ஒப்பந்தங்களாலும் சூறையாடப்பட்டு பொருள்வளக் கையறு நிலைக்கும், பறிகொடுத்த வதைப்புக்கும் உள்ளான கரீபியன் மக்கள் காலனித்துவச் சூழலுடன் மல்லாடியே அதனைக் கடந்து சிக்கலான பின்காலனித்துவச் சூழலுக்கு முன்நகர்கின்றனர். அடிமை வாழ்வினதும், காலனித்துவத்தினதும் விளைவான பொருள்வளக் கையறு நிலையையும் மற்றும் உளவியல் தாக்கத்தையும் எதிர்கொண்டு தப்பிப் பிழைத்தலுக்கான மூலவளமாகப் படைப்பாற்றலுக்கான கற்பனை விளங்கி வந்திருக்கின்றது. இந்தப் படைப்பாற்றலுக்கான கற்பனை தொழில்நுட்ப அறிஞராட்சி நிலவும் தொழில்நுட்ப யுகத்தினை எதிர்கொள்வதற்கும், நிலைத்து நிற்பதற்கும் அவர்களுக்குச் சாதனமாகியிருக்கின்றது.

இந்தப் படைப்பாற்றலுக்கான கற்பனை, ஈழத்தமிழரது சமூகத்தில் வலுவானதாக வளர்த்தெடுக்கப்படுவதற்கான பல்வேறு எத்தனங்களில் மொழிபெயர்ப்பு மூலமாக வெளியில் இருக்கின்ற அனுபவங்கள் தமிழுக்குக் கொண்டு வரப்படுவது மிகவும் அவசியமானதாகும். இந்த வகையிலேயே கரீபியன் கவிஞரான டெறிக் வோல்கொற் அவர்களுடைய அறிமுகமும், நேர்முகமும் தரப்படுகின்றது.

கரீபியன் கவிஞரும், நாடகாசிரியருமான டெறிக் வோல்கொற் 1930ல் புனித லூசியாவில் பிறந்தார். வெள்ளையரான பாட்டனாரதும், கறுப்பரான பாட்டியரதும் வழியில் வந்தவரான டெறிக் வோல்கொற், கறுப்பரதும் வெள்ளையரதும் உலகங்களில் இருந்து விலக்கி வைக்கப்பட்டிருக்கின்ற சிக்கல்கள் நிறைந்த திரிசங்கு உலகின் பிரதிநிதி. தனது கவிதைகளாலும், நாடகங்களாலும் இலக்கியப் பிரபஞ்சமொன்றை அவர் உருவாக்கி வைத்திருக்கின்றார். அது அவரது வேறுபட்ட பண்பாட்டுப் பின்னணிகளை பிரதிபலிக்கின்றது.

அவரது தலைமுறையில் ஆங்கிலத்தில் எழுதும் தலைசிறந்த படைப்பாளர்களுள் ஒருவராகக் கருதப்படும் டெறிக் வோல்கொற், புனித லூசியாவில் உள்ள புனித மரியாள் கல்லூரியில் கல்வி கற்றார். மேற்கிந்தியப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்ட டெறிக் வோல்கொற் இப்பல்கலைக்கழகத்திலேயே ஒப்பியல் இலக்கியத்தைக் கற்பித்தார்.

ரிறினிடாட்டில் புத்தக மதிப்பீட்டாளராக, கலை விமர்சகராக நாடக ஆசிரியராகத் தனது வாழ்க்கையை ஆரம்பித்த வோல்கொற், முதலாவது கவிதைத் தொகுதியான "இருபத்தைந்து கவிதைகள்"ஐ 1948ல் வெளியிட்டார். 1959ல் ரிறினிடாட் அரங்கப் பட்டறையை நிறுவினார். தொடர்ந்து இருபதுக்கும் மேலான கவிதைத் தொகுதிகளையும், நாடகத் தொகுதிகளையும் வெளியிட்டார். ஹாவாட், பொஸ்ரன் உட்பட்ட அமெரிக்காவின் பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் கற்பித்தார். 1992ஆம் ஆண்டின் இலக்கியத்திற்கான நோபல் பரிசு இவருக்குக் கிடைத்தது.

இவரது பிரசித்தமான படைப்புக்களான "ழஅநசழள" (இது ஹோமரது காவியமொன்றை கரீபியன் வாழ்க்கையின் வரலாற்றுக்கும் சமகால லயத்துக்கும் அமையப் படைக்கப்பட்டது.) 1990, "மற்றொரு வாழ்க்கை" (இது வோல்கொற்றினது சுயசரிதம்) 1973. "பணமலையின் கனவுகளும் ஏனைய நாடகங்களும்" - 1970, ஒன்பது கவிதைத் தொகுதிகளில் இருந்து தெரிவுகளும் சுயசரிதமும்: தொகுக்கப்பட்ட கவிதைகள் 1948 - 1986 (1986) என்பவற்றுடன் "ஆர்க்கன்ஸஸ் ஏற்பாடு" (1987), "அதிஸ்ரமுள்ள பயணி" (1981) என்பவையும் அடங்குகின்றன.

டெறிக் வேர்ல்கொற்றினது சில கவிதைகள் மற்றும் அவர் பற்றிய சிறிய கட்டுரைகள், குறிப்புகள் தமிழில் வந்திருக்கின்றன. இவரதும், இவரைப் போன்றவர்களதும் ஆளுமைகளையும் அத்தகைய ஆளுமை உருவாக்கங்களின் பின்னணிகளையும் முழுமையாக வெளிப்படுத்தக் கூடிய தொகுப்புக்களின் தேவை தமிழுக்கு அவசியமானதாகும். இவை ஆரோக்கியமான படைப்புந்தலுக்கும், அறிவுச் சூழலுக்கும் வழிதிறந்து விடுபவையாக இருக்கும். சமூகப் பிரக்ஞை கொண்ட படைப்பாற்றலுக்கான கற்பனையின் அடிப்படையாக இவை அமையுமென்பதும் நம்பிக்கை. அந்த ஒரு நோக்கைக் கருத்திற் கொண்டு, 1999 ஜனவரி 1ல் 'புறொன்றலைன்' சஞ்சிகையில் வெளிவந்த நேர்முகம் மொழிபெயர்த்துத் தரப்படுகின்றது.நேர் கண்டவர்: முஜிபுர் ரஹ்மான் ஆங்கிலத்திலிருந்து: தமிழில்: சி. ஜெய்சங்கர்

# தன்மயப்படுத்தலின் மொழியாகத் தலையில் கேட்கின்ற குரல்

## கரீபியன் படைப்பாளரும் நோபல் பரிசு பெற்றவருமான டெறிக் வோல்கொற்றுடன் நேர்முகம்

**1. கவிதை என்றால் என்ன?**

கவிதை பற்றிய விபரிப்பு எப்பொழுதும் கையகப்படுத்த முடியாத ஒன்றாகவே இருந்திருக்கின்றது. ஒவ்வொரு பண்பாட்டுக்கும் கவிதை பொதுவானது. மொழிபெயர்ப்பிலுங்கூட கவிதைக்கு எதிர்வினை காட்டலாம். கவிதை உணர்வென்பது, அது ஆபிரிக்காவினதோ அல்லது மோல்ற்றாவினதோ, வாசகர் என்ற வகையில், என்னில் என்ன செய்கின்றது என்பதுடன் தொடர்புடையது. அமைப்பு என்ற வகையில் கவிதையை விபரிப்பது மிகவும் கடினமானது. ஏனென்றால் அதனுள் பல விடயங்கள் அடங்குகின்றன. கவிதை பற்றி பல விபரிப்புகள் காணப்படுகின்றன. ஆனால், அவை போதுமானவையல்ல. அது வேட்ஸ்வேத்தினுடைய கவிதை அனுபவமான "மோன நிலையில் மீளக் கொணரப்பட்ட உணர்ச்சி" ("Emotion recollected in tranquilty") என்பதாக இருந்தாலென்ன "உன்னதமான ஒழுங்கில் அமைந்த உன்னதமான சொற்கள்" ("The best words in the best order") என்பதாக இருந்தாலென்ன எந்தவொரு கலைப்படைப்பையும் போல, எங்களை ஆட்படுத்தும் தகுதியுடையதாக குறிப்பாக மொழியின் அற்புதத்திலும் ஆச்சரியக் கூறிலும் உணர்வுகளின் நேர்த்தியிலும் அது இருக்கும்.

**2. சமூகத்தில் கவிஞருடைய பங்கு என்னவாக இருக்குமென்று கருதுகின்றீர்கள்?**

அது அந்தச் சமூகத்தில் தங்கியிருக்கின்றது. கவிஞரும் சமூகமும் தனியாக விடப்பட வேண்டுமென்றே நான் கருதுகின்றேன். ஏனென்றால் ஒரு கவிஞர் இயக்கங்களுக்குள் அகப்பட்டுக் கொள்ள விரும்புவதில்லை. அத்துடன் அரசியல் கட்சிகளுடனோ அல்லது அரசியல் நிகழ்ச்சித் திட்டங்களுடனோ சம்பந்தப்பட்டுக் கொள்வதில்லை. மன அழுத்தமான நேரங்களில் ஆத்மீக பலத்தைத் தேடி மக்கள் கவிதைகளுக்கு திரும்புகிறார்கள். சில சந்தர்ப்பங்களில் கவிஞரொருவர் சமூகத்தில் தனது பங்கைத் தெரிவு செய்து கொள்ளாமலேயே மன அழுத்தங் காரணமாக ஒரு மக்கள் கூட்டத்தின் அல்லது ஒரு தேசத்தின் பிரதிநிதியாகி விடுகின்றார்.

நான் சொல்லுவேன், இது ரஷ்யாவின் மன்டெல்ஸ்ராமுக்கோ அல்லது ஸ்பெயினின் லோகாவிற்கோ உண்மையாக இருக்கின்றது. அவர்கள் தங்களது சமூகத்தின் உண்மையைப் பிரதிபலித்தார்கள். தன்னுடைய மக்களின் பிரதிநிதியாக சில வேளைகளில் கவிஞரொருவர் வருகின்றார்.

தேசமொன்றின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தில் கவிஞரொருவரை நீங்கள் கண்டிருக்கலாம். ஆனால், அது அவர் போராட்டத்தின் மறுப்பக்கத்திற்காகவுங் கூட இலகுவாகப் போராடலாமென அவர் உணரவில்லை என்ற கருத்தாக இருக்காது. ஆனால், மறுபக்கத்தில் என்ன நடக்கின்றது என்பதைப் பார்க்க அனுமதிக்கப்பட மாட்டார். ஏனென்றால் இது ஒரு வகை மோசடி. நெறிகள் என்ற அர்த்தத்தில் கவிதை ஒரு வகை மோசடி. இதனால் தான் மன்டெல்ஸ்ராமிற்கு மரணதண்டனை விதித்தார் ஸ்ராலின். லோகா கொல்லப்பட்டார். முரண்பாட்டு வடிவத்திலுள்ள யதார்த்தம் இது. மக்கள் பக்கங்களைத் தெரிவு செய்ய முயலுகின்றார்கள்: கவிதையுடனான சிக்கல் என்னவென்றால், அதனால் பக்கங்களை தெரிவு செய்ய முடியாது.

**3. ஒரு எழுத்தாளருக்கான மிகப்பொருத்தமான மொழி எதுவென்று கருதுகின்றீர்கள்?**

விரிவாகப் பார்த்தால் மூன்று வகையான எழுத்தாளர் இருக்க முடியும். "நான் மக்களுடைய மொழியிலேயே எழுதுவேன் அது எவ்வளவு செம்மையற்றதாகவும் தெளிவற்றதாகவும் இருந்தாலும்" என்று ஒருவர் சொல்லுவார். மற்றவர் சொல்லுவார். "இதை எவருமே விளங்கிக் கொள்ள முடியாது" என்று. மூன்றாவது வகையினர் தங்கள் குலத்தினது மொழியை சுத்திகரிப்பதில் தம்மை அர்ப்பணித்திருப்பர். இந்த மூன்றாவது வகையினரே வெள்ளையராகத் தோறணை காட்டுபவரெனவும், விலாங்கு மீன் தன்மையுடவரெனவும் இரு பக்கம் இருந்தும் தாக்கப்படுவர். வெள்ளையரும் கறுப்பரும் கலந்த பாணியான இவர் துரோகியாக, தன் மயப்படுத்தப்பட்டவராகக் கருதப்படுவர்.

கரீபியன் எழுத்தாளர் ஒருவர் தன்னுள் தன்மயப்படுத்தப்பட்ட எழுத்தைத் தவிர்ந்த பிறிதொன்றில் எப்படி எழுத முடியுமென்று என்னால் சொல்ல இயலாது. அத்திலாந்திக்கும், அமெரிக்காவிற்கும் இடையேயான பாலமே கரீபியன். இது வரலாற்று ரீதியானது. புவியியல் ரீதியானது. அனுபவத்தில் பண்பாட்டு ரீதியானது. இந்தப் பண்பாட்டு அனுபவம் எல்லாவகையான மூலங்களிலிருந்தும் வருகின்றது. அது இந்தியாவிற்குரியது. ஆபிரிக்காவிற்குரியது. சீனாவிற்குரியது மற்றும் பலவற்றிற்கும் உரியது. தன்மயப்படுத்தலின் அர்த்தத்தில் மதிநுட்பம் விசாலிக்க அனுபவம் ஆழமாகின்றது. ஆகையால் தன்மயப்படுத்தலால் மட்டுமே அனுபவங்களின் சிறந்த கூறுகள் உள்வாங்கப்படுகின்றன. உதாரணமாக பண்பாட்டு ரீதியாக சீனப் பலசரக்கு வியாபாரி ஒருவர் சீனப் பெருங் கவிஞரொருவருடைய வாரிசாக இருக்கலாம். எங்கேயாவது இருக்கின்ற ஆபிரிக்கருக்கும், அல்லது ரிறினிடாட்டில் இருக்கின்ற இந்தியக் கூலிக்காரருக்கும் இது



உண்மையாக இருக்கும். எல்லாவற்றையும் இணைப்பது பற்றிப் பேசுவது மிகச்சரியான உண்மையல்ல. ஆனால், கரீபியனில் உள்ள எல்லா விடயங்களுக்கும் திறந்தவராக ஒருவர் இருக்க வேண்டும். அல்லது கரீபியன் பண்பாட்டின் ஒரு அம்சத்தை ஒருவர் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். இந்தத் தன்மயப்படுத்தில் அரசியல் ரீதியாக மட்டுப்படுத்தப்படினும் பண்பாட்டு ரீதியாகத் தவிர்க்க முடியாதது என்பதை கரீபியன் இசை உங்களுக்கு காட்டும். மொழி ஆங்கிலமோ, பிரெஞ்சோ இசையின் இணைவு கரீபியன் இலக்கியங்களை சுவாரசியமானதாக்குகின்றன. வேறுபட்டதாக்குகின்றன. முரண்பாடு கொண்டதாகவும் ஆக்குகின்றன.

**4. உங்களில் செல்வாக்குச் செலுத்திய எழுத்தாளர்கள் யாவர்?**

நான் பூரணமாகப் படித்த எல்லாமே என்னில் செல்வாக்குச் செலுத்தியிருப்பதாக நம்புகிறேன். ஆங்கிலமோ சக்ஸனுடைய இலக்கியங்களில் இருந்து ஜெகோபியன்ஸ், ஷேக்ஸ்பியர் காலத்திற்குரியவை, கற்கக்கூடியதாக இருக்கின்ற ஆங்கிலக் கவிஞர் எல்லோரிடமிருந்தும் கற்றுள்ளேன். ஒருவர் அதிஷ்டமுடையவராக இருந்தால் இளமைக் காலத்திலேயே எழுத ஆரம்பித்து விடுவார். நான் அதிர்ஷ்டகாரனாக இருந்தேன். இளமையிலேயே பயிற்சியை ஆரம்பித்து விட்டேன். அது பிறமொழிகளில் இருந்த கவிஞர்களையும் அடக்கியிருந்தது. சிலவற்றின் செல்வாக்கு எனது ஆரம்ப கால படைப்புக்களில் மிகவும் வெளிப்படையாகத் தெரிபவை. நான் வாசித்த பலருடைய எழுத்துக்கள் - எனது தலையில் கேட்கும் குரல்களின் தொகுதியின் அடிப்படையில் நான் சிந்திக்கின்றேன். - அவற்றிற்கே இது காணிக்கை. மக்கள் செல்வாக்குகளின் தடங்களைத் தேடுகின்றார்கள். நான் தற்புதுமைகளில் ஆர்வமுடையவனல்ல. அடையாளத்தின் தற்புதுமை என்பது மோசமான ஒருவகை மமதை.

**5. பின்பு ஏன் கவிதை எழுதுகின்றீர்கள்? அவ்வாறு செய்ய உங்களை உந்துவது எது?**

நான் எழுதுகின்றேன் ஏனென்றால், நான் அதைச் செய்ய வேண்டியிருக்கின்றது. அது எனது தலையில் இருக்கின்ற குரல். ஆரம்பத்தில் நான் எனக்காகவே எழுதினேன். மற்றவர்களைச் சீர்செய்வதற்காக நான் எழுதவில்லை. குறித்தவொரு சூழ்நிலையில் எனது இனத்தையோ, எனது தேசத்தையோ பிரதிநிதித்துப்படுத்த எழுதவில்லை. தொடர்செயல் முறையூடாக போய்க் கொண்டிருக்கின்றேன். இத்தொடர்செயல் முறையின் கட்டளையானது தன்னுடைய ஒரு சொற்றொடரோ அல்லது ஒரு வாக்கியமோ உருவாக உள்ளது என்பதை எனக்குச் சொல்லுகிறது. அங்கே நேரடி நோக்கம் இருக்காது. உரைநடையில் நேரடி நோக்கம் இருக்கிறது. ஒருவர் இடமிருந்து வலமாகவோ அல்லது மறுதலையாகவோ ஒரு எல்லையிலிருந்து ஆரம்பிக்க வேண்டியிருக்கின்றது. கவிதைகளில் நீங்கள் நினைப்பது ஒரு வேளை தொடக்கமாகவோ, நடுவாகவோ, முடிவாகவோ இருக்கலாம். உரைநடையில் இது நிகழ்வதில்லை. உரைநடையில் எதற்கு இட்டுச் செல்லுகிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். கவிதையில் திசையின் கட்டுப்பாடு உங்களிடம் இருக்காது.

**6. விமர்சனம் உங்களது கவிதைக்கு எந்தவகையில் பங்களிப்புச் செய்திருக்கிறது?**

விமர்சனங்கள் வேறுபட்ட கோணங்களில் இருந்து வருகின்றன. ஒரு புறத்தில் எனது பகுதியினரிடம் - கரீபியன்களிடம் - இருந்து வருகின்றன. அவர்கள் நான் பாரம்பரியத்தில் வேர்கொள்ளவில்லை என்கிறார்கள். மறுபுறத்தில் ஐக்கிய அமெரிக்கா அல்லது ஐக்கிய இராச்சியத்திலிருந்து வருகின்றன. அவர்கள் எனது மொழி அலங்காரப்படுத்தப்பட்டதென, மிகையானதெனப் பலர் கூறுகின்றனர். என்னுடைய பண்பாடு பற்றியும், களியாட்டம் பற்றியும் மொழி பற்றியும் அவர்கள் அதனையே சொல்கிறார்கள். இவற்றை நான் பொருட்படுத்தவில்லை. இசை, மொழி தொடர்பாக நியூயோர்க், லண்டன் போன்ற இடங்களில் இருந்து வரும் எழுச்சியுள்ள அறிமடமான, போலிப்பணிவான விமர்சனங்களையும் விட கரீபியப் பண்பாட்டுத் திசையில் வைத்து அடையாளம் காணப்படுவதை விரும்புகிறேன்.

**7. முன்பு காலனித்துவப்பட்டிருந்த நாடுகளின் இலக்கியங்கள் பற்றி...**

முன்னைய காலனித்துவ நாடுகளில் இருந்துவரும் இலக்கியங்களின் ஆழமான செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தன. ஆகையால் இப்புதிய இலக்கியங்கள் - முன்பு காலனித்துவப்பட்டிருந்த நாடுகளின் இலக்கியங்கள் - தாழ்ந்தவையாக வழிவந்தவையாக நோக்கப்படுகின்றன. இது பற்றி உங்களது அபிப்பிராயம் என்ன?


வரலாற்றுக்காக மக்கள் மீது குற்றம் காண்பது முட்டாள்தனமானது. எழுத்தாளர் தோற்றம் பெற்ற வரலாற்றுக்காக எழுத்தாளர் மீது குற்றம் சுமத்த முடியாது. உதாரணமாக கரீபியன் வரலாறும் துயரமானது. அடிமைத்தனம், கூலி, அடிமை ஒப்பந்தம், சுரண்டல், கொடூரமான செயல்கள் என்பவற்றினால் ஆனது. அது அனுபவத்தின் ஒரு பகுதி. இந்த அனுபவத்தை ஆங்கிலத்தில் அல்லது பிரெஞ்சில் வெளிப்படுத்துவதை விமர்சிப்பது ஏகாதிபத்திய மனோபாவத்தின் விரிவாக்கமே ஆகும். தாங்கள் மக்களை காப்பாற்றுவதாக சிலர் நினைக்கிறார்கள். எதனிடமிருந்து காப்பாற்றுகிறார்கள்? மொழியொன்றிடமிருந்து மொழியால் என்ன பாதிப்பு ஏற்படுகின்றது? என்னால் இதனைப் புரிந்து கொள்ள முடியவில்லை. நாவல் ஒன்றை எழுதப் போகின்றீர் என்றால் , அது ஆங்கிலத்திற்குப் பதிலாக ஜமேக்கனில், பிரெஞ்சுக்குப் பதிலாக கிறயோலில் - அது உங்களுடைய தெரிவு. நான் நினைக்கிறேன் என்ன நடக்கிறதென்றால் ஒரு எழுத்தாளர் தான் சிந்திக்கும் மொழியிலேயே எழுதுகிறார். ஆங்கிலத்தில் சிந்திக்கிறேன் என்பதை குற்றவுணர்வாக நான் உணரத் தேவையில்லை. என்ன பரிதாபம் கரீபியன் இலக்கியம் ஆங்கிலத்தில் அல்லது பிரெஞ்சில் தங்கியிருக்க வேண்டியிருக்கிறதே என்று சொல்ல விரும்புவாயானால் அக்கருத்தைப் பைத்தியக்காரத்தனத்தின் எல்லைக்கே கொண்டு செல்ல வேண்டும்.

**8. இளம் எழுத்தாளர்களுக்கு என்ன செய்தியை வழங்க விரும்புகின்றீர்கள்?**

நான் எங்கேயுள்ளேன் என்பதிலேயே இது தங்கியுள்ளது. மேற்கிந்திய இளம் எழுத்தாளர்களுக்குச் சொல்வேனேயானால் விடயங்கள் சற்று இலகுவாகும். இது பற்றிய புத்தகத்தைக் காண இனிமேல் கஸ்டப்படத் தேவையில்லை. ஆச்சரியப்படுவதற்கும் இடமில்லை. விடயங்கள் சற்று இலகுவாக உள்ளன. அதாவது இலகுவாக்கப்பட்டுள்ளன. ஆனால், எழுத்தாளர்கள் இனம், மதம், அரசியல் என்பவற்றுள் சிக்குண்டு போய்விடக் கூடாது. நீதி பற்றிய வாஞ்சை உடையவராக அவர் இருக்கலாம். கரீபியனில் மக்கள் தங்களை வெளிப்படுத்துவதற்கான ஒருவகை மார்க்கத்தை வற்புறுத்துகின்றார்கள். இது எதுபோலவெனில், சர்வாதிகாரத்தனமிக்க ஆபிரிக்க மார்க்கம் போலவும், வேறொருவகையான இந்திய வழிபோலவும் ஆகும். இனரீதியாக முத்திரைக்குத்தப்படுவதை தவிர்க்க வேண்டியிருக்கிறது.

நன்றி - நூலகத்திட்டம்





# சிங்கள சாதியமைப்பு: சில குறிப்புகள்

# போர்க்குணாம்சம் மிக்க கரையார் சமூகம்?

சிங்கள சாதியமைப்பு குறித்து ஆராய்ந்துள்ள ராயன் (Ryan 1993) மற்றும் ஜிகின்ஸ் (Jiggins) ஆகியோர் 14 சாதிகளைக் விசேடமாக குறிப்பிடுகின்றனர். அதன் படிநிலையொழுங்கு குறித்தும் அவர்கள் ஒன்றுபடுகின்றனர். இதனை முழுமையான ஒன்றாகக் கொள்ள முடியாவிட்டாலும் இந்தப் படிநிலையை முற்றாக ஒதுக்கி விடவும் முடியாது. (பார்க்க அட்டவணை)

இச்சாதிப் படிநிலையொழுங்கில் மேற்சாதி மற்றும் கடைச்சாதி ஆகிய சாதிகள் கட்டமைப்பாக திகழ்கின்ற போதும் இடைச்சாதிகள் எப்போதும் குழப்பகரமானதும் அவற்றுக்கிடையிலான சாதியப் பெருமிதச் சண்டைகள் (எச்சாதி உயர்வானது எனும் மோதல்) நிலைத்து வருவதாக காலிங்க டியுடர் சில்வா தனது "சாதியம், வர்க்கம் மற்றும் மாற்றமுற்றுவரும் இலங்கைச் சமூகம்" (சிங்களம்-1997) எனும் நூலில் குறிப்பிடுகிறார்.

மேலும் இலங்கையில் சிங்கள சமூகத்தினர் மத்தியில் நிலவுகின்ற சாதியமானது புவியியல் ரீதியில் அடையாளம் காணத்தக்க அளவு சேர்ந்து செறிந்து வாழும் தன்மையைக் கொண்டிருப்பதாக ( கரையோரச் சிங்களவர் மற்றும் மலைநாட்டுச் சிங்களவர் மத்தியில் இந்த வேறுபாட்டை இன்னும் தெளிவாக அவதானிக்கலாம் ) சாதியத்தை ஆராயும் பலர் குறிப்படுகின்ற போதும் இந்த நிலைமை தமிழ்ச் சூழலில் நிலவுகின்ற சாதிய கட்டமைப்புகளோடும் பொருந்துவதைக் கவனிக்கலாம்.

மேற்படி 14 சாதிகளுக்குள்ளும் பல கிளைச்சாதிகளும் அவற்றில் அடங்காத சாதிகளும் (மிகச் சிறிய தொகையினரைக் கொண்ட சாதிகள் காணப்படுகின்றன. மறைந்தும், இரகசியமாக இருந்து வரும் இந்த சாதிய கட்டமைப்பானது, குறிப்பாக திருமண விடயத்தில் அதாவது அக மணமுறையைப் பேணுவதிலும் கலப்பு முறையை தவிர்ப்பதிலும் மிகவும் உன்னிப்பாக இருந்து வருகின்றன. சமூக அந்தஸ்துகளின் வெவ்வேறு பரிமாணங்களையுடைய நவீன வடிவங்கள், சமூகத்தில் உள்ளிட்டு நிலைநிறுத்தப்பட்டு வருகின்ற போதும், சமூக அந்தஸ்தில் மேநிலையாக்கத்துக்கு ஆளாகி வந்தபோதும் சாதியத்தின் அகப் பண்பையும், அதன் கருத்தியலையும் அவை இழக்கச் செய்து விடாது.

சாதிய அடையாளங்களை மூடிமறைக்கும் முயற்சிகள் சாதிய கட்டமைப்பு இருக்கின்ற சகல சூழல்களிலும் இடம்பெறுவது வழக்கம் தான். அது போல எந்தவொரு அடக்கப்படும் பிரிவினரிலும் மத்தியதர வர்க்க குணாம்சங்களுக்குப் பலியாகி தம்மீதான அடக்குமுறையையோ அல்லது "பலவீனத்தை"யோ, அல்லது தமது "அந்தஸ்தையோ" சொல்லப்போனால் சமூகம் எதைக் குறைத்து எதிர்பார்க்கிறதோ அது அல்ல தாம் என்று சொல்லிக் கொள்ளும் வழக்கம் ஒன்றும் புதுமையானதல்ல. இவ்வகைப்பட்ட அடக்குமுறையிலிருந்து உடைத்தெறிந்து வெளிவரவேண்டும், ஏனையோரை விடுவிக்க வேண்டும் என்ற ஆதங்கத்துடனும் அந்த இயங்குவிதியை அடையாளம் கண்டு அதன் அரசியலை விளங்கிக் கொண்டோருமே சமூக மாற்றத்துக்கான பாத்திரத்திற்கு எஞ்சி விடுகின்றனர்.

சாதிய உரு மறைப்பும், அடையாளங்களை மூடிமறைக்கும் முயற்சிகளும், சாதியப் பெருமிதம் பேசி ஆதிக்க சாதிகளுடன் கலக்க விரும்புவதும் இவ்வகைப்பட்ட சரணடைவு தான். அந்த வகையில் சிங்கள சாதியமைப்பிலும் இதனைக் காண்பதென்பது ஆச்சரியப்படுவதற்கில்லை. இதற்கு அதிகளவில் பலியாபவர்கள் விளிம்பு நிலையிலுள்ள கடைச்சாதியினர். சாதியப் படிநிலை நிரலொழுங்கில் இருக்கின்ற இடைச்சாதியினர் மத்தியில் இந்தக் சரணடைவு குணாம்சம் மேலும் அதிகமென மானுடவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரு புறம் அடையாளங்களைப் பேணுவது என்பது ஆதிக்க சாதிகளின் கட்டாய பண்பாக இருக்கின்ற அதே வேளை சாதிய அடையாளங்களை இவ்வாறு மறைப்பது என்பது அடக்கப்படும் சாதியினரின் தப்பிப்பதற்கான வழியாகிவிடுகிறது. எனவே உயர்சாதியினர் மத்தியில் அடையாளங்களைப் பாதுகாப்பதற்கான நிறுவன வடிவம் நிலைபெறுகின்ற அதே வேளை ஒடுக்கப்படும் சாதியினரின் எதிர்த்து நிற்கும் பலம் பொருந்திய நிறுவன வடிவம் சாத்தியமற்றுப் போகின்றது. அடையாளங்களைத் தகர்ப்பதும், மறைப்பதும், ஒழிப்பதும், ஏனையோருடன் அமைதியாக கலந்து விடுவது தான் இதற்கான வழியென்று நாடுகின்ற போக்கே சமூகத்தில் நிலவி வருகின்றதே ஒழிய இதனை சித்தாந்த பலம் கொண்டு தாக்கியழிக்கும் அரசியலை கண்டுகொள்ளும் சக்திகள் இன்று காண்பது அரிது.



பிரேமதாச
சிங்கள பௌத்த ஹின்ன



ரோகண விஜேவீர
சிங்கள பௌத்த கராவ



பிரபாகரன்
கரையார்

சிங்கள சமூகத்தில் உயர் சாதியாக கருதப்படும் (வடகிழக்கு சார்ந்த தமிழ்ச் சூழலில் வெள்ளாளர், மலையக மக்கள் மத்தியில் உள்ள மொட்டை வெள்ளாளர், சிங்கள கொவிகம சாதியினர் பார்ப்பனர்களாக) கொவிகம சாதி பல கிளைச்சாதிகளைக் கொண்டது. இலங்கையில் எண்ணிக்கையில் அதிகமுள்ள சாதியினரான இவர்களின் ( ஜிகின்ஸ்ஸின் கணிப்பின்படி சிங்கள சனத்தொகையில் 50 வீதத்தினர்) மத்தியில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி மூன்று முக்கிய கிளைகளைக் குறிப்பிட முடியும். அவை ரதள, கொவி, பட்டி ஆகியவை. இவர்கள் தான் நாட்டின் கனவான்களாகவும், ஆதிக்க சக்திகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சக்தியாகவும் இருக்கின்றன. ரதள, பட்டி ஆகிய கொவிகமவின் கிளைச்சாதிகள் அதிகளவு மலைநாட்டில் வாழ்வதாக குறிப்பிடப்படுகிறது. ரதள மற்றும் கொவிகம ஆகிய சாதிகள் ஏனைய சாதிகளிடமிருந்து வேலை வாங்குவோராக பாரம்பரிய கருத்து நிலையுள்ளது. அதே வேளை விவசாயம் என்பது தனியொரு சாதியுடன் மட்டுப்பட்ட ஒரு தொழிலும் இல்லை.

மேற்படி அட்டவணையில் உள்ள சாதிகளின் படிநிலை நிரலொழுங்கின்படி 2,3,4,5வது போன்ற நிலைகள் முறையே கராவ சலாகம, துராவ, ஹானு ஆகியவற்றைச் சேர்ந்தவை. இந்த இடைச்சாதிகள் மேற்தோற்றத்தில் ஒரு ஆதிக்க சாதியைப் போல தெரிந்தாலும் அப்படியல்ல. இச்சாதியினர் சிங்கள சாதியமைப்பில் அடக்கப்படும் சாதிகளாகவே கணிக்கப்படுகிறது. இதில் கராவ (தமிழில் கரையார் எனும் மீன்பிடித் தொழிலைச் சார்ந்த சாதியினர்) சாதியினரைப் பற்றி விக்ரர் ஐவன் குறிப்பிடுகையில் இவர்கள் தான் இலங்கையில் போர்க்குணாம்சம் மிக்க குழுமத்தினர் என்றும், கரையோர மீன்பிடி வாழ்நிலை அவர்களுக்கு அந்த போர்க்குணாம்சத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும், இலங்கையில் வடபுலத்தில் நடக்கும் யுத்தத்தில் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனானுலும் சரி தென்னிலங்கையில் ஜே.வி.பி. இயக்கத்தின் தலைவராக இருந்த ரோகண விஜேவீரவானாலும் சரி இருவரும் கரையார்/கராவ சாதியினரைச் சேர்ந்தவர்கள் என்றும் குறிப்பிடுகிறார். அது போல புலிகளின் கடற்புலிகள் அமைப்பில் கரையார் சாதியினரின் பங்களிப்பு அதிகமெனவும், 71 புரட்சியில் ஈடுபட்ட ஜே.வி.பி. இயக்கத்தில் 12 பேரைக்கொண்ட மத்தியகுழு உறுப்பினர்களில் பெருமளவானோர் இவ்வாறு கரையார் சாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தனரென்றும் அவர் மேலும் தனது நூலில் குறிப்பிடுகிறார்.

ஜே.வி.பி.யில் 71 புரட்சியில் மாவட்டத்-தலைவர்களில் ஒருவராக இருந்த சுனந்த தேஷப்பிரிய (தற்போது மேர்ஜ் இயக்கத்தின் செயலாளர்) புரட்சியின் பின்னர் கைது செய்யப்பட்டு முகாம்களில் அடைபட்டோரில் பெருமளவானோர் சாதி ரீதியாகத் தான் வதை புரியப்பட்டனர் என்றும், அவர்கள் தான் உடமை, உயிர், உறவினர் என பலவற்றையும் அரச அடக்குமுறையால் இழக்க நேரிட்டது என்றும் குறிப்பிடுகிறார்.

இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை அண்டி வாழும் கரையார் சமூகத்தினர் காலனித்துவ காலகட்டத்தில் ஏற்பட்ட ஆக்கிரமிப்பின் காரணமாக கத்தோலிக்க மதச் செல்வாக்குக்கு அதிகம் உள்வாங்கப்பட்டவர்கள் என்றும், பெருமளவு கரையார் சாதியினர், இந்து கரையார், கத்தோலிக்க கரையார் என்றும் பெருமளவு கராவ சாதியினர் பௌத்த கராவ மற்றும் கத்தோலிக்க கராவ என்றும் இருப்பதைக் காணலாம். தென்மேற்கு மற்றும் வடமேற்கை நோக்கிய கரையோரப் பிரதேசங்களில் வாழும் கராவ/கரையார் சாதியினரின் மீது ஏற்படுத்தப்பட்ட காலனித்துவ செல்வாக்கானது காலப்போக்கில் அவர்களின் இனத்துவ பின்னணியைக் கூட மாற்றங்காணச் செய்தது. குறிப்பாக இப்பிரதேசங்களைச் சேர்ந்த முன்னாள் (மூன்று சந்ததியினருக்கு முன்னர்) தமிழ் மக்களை இன்று தமிழர்களாகக் காண முடியாது. அவர்கள் இன்று மதத்தால் மாறுப்பட்டிருக்கிறார்கள், இனத்தாலும் மாற்றமுற்று இருக்கிறார்கள் ஆனால் சாதியால் கராவ சாதிதான். "அது பிறப்பால் அல்லவா தீர்மானிக்கப்படுகிறது". இன்றைய இன நல்லிணக்க அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோ பிள்ளை இந்தப் பின்னணியைக் கொண்டவர். அவர் ஒரு போதும் தனது தமிழ் பின்னணியைக் காட்டிக்கொள்ள விரும்புவதில்லை. சிங்கள-கத்தோலிக்க-கராவ சாதியைச் சேர்ந்தவராகவே தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ள அவரின் பாராளுமன்ற அரசியல் வெற்றியின் பின்னால் கராவ சாதியினரின் பங்களிப்பு முக்கியமானது.

அது போல இன்றைய பிரதி நிதி அமைச்சரும், நீதி அமைச்சருமான ஜீ.எல்.பீரிஸ் சிங்கள-பௌத்த-கராவ சாதியைச் சேர்ந்தவராக இருக்கிறார்.

அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 2,3,4,5 ஆகிய சாதிகள் இலங்கையின் சிங்கள சனத்தொகையில் 10வீதத்தைக் கொண்டுள்ளனர். இந்த நான்கு சாதிகளும் காலனித்துவ காலத்தில் நிறைய மாற்றங்களுக்கு உள்ளான சாதிகளாக ஜிகின்ஸ் குறிப்பிடுகிறார்.

சிங்கள சாதியமைப்பில் கொல்லர், மற்றும் பொற்கொல்லர் போன்ற உலோகங்களோடு தொடர்புபட்ட உற்பத்தித் தொழிலை ஆசாரி எனப்படும் "நவந்தன்ன" சாதியினர் மேற்கொண்டு வந்திருக்கின்றனர். இவர்கள் கரையோரச் சிங்களவர்கள் மத்தியில் 5வது அல்லது ஆறாவது இடமாக படிநிலையொழுங்கில் காணப்பட்டாலும் மலைநாட்டுச் சிங்களவர்கள் மத்தியில் இவர்கள் கொவிகம சாதிக்கு இரண்டாவதாக காணப்படுவதாக கொள்ளப்படுகிறது. இச்சாதியினர் எண்ணிக்கையளவில் குறைவானர்களாக இருக்கின்ற போதும் அவர்கள் கூட செறிவாக அல்லாமல் நாடு முழுவதும் பரவிக் காணப்படுவதாக காலிங்க டியுடர் சில்வா குறிப்பிடுவார். இதற்குரிய காரணம் சகல பாகங்களிலும் இச்சாதியினரின் பங்களிப்பை நாடி நிற்பதே.

ஹேன (அல்லது ஹின்ன, அல்லது ரதா) கும்பல் மற்றும் நெக்கத்தி ஆகிய சாதியினர் எண்ணிக்கையில் சிறிய அளவினாக இருந்த-போதும் அவர்களும் சகல பாகங்களிலும் விரவி வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் இன்றும் தமது பாரம்பரியத் தொழிலாக சலவைத் தொழிலைச் செய்து வருகிறார்கள். இச்சாதியினர் மீதான ஏனைய உயர் சாதியினரின் அடக்குமுறை இலங்கையின் அரசியலிலும் கூட பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்பட்டிருப்பதைக் காணலாம். முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச இந்தச் சாதியைச் சேர்ந்தவராக இருந்ததால் (சிங்கள-பௌத்த-ஹின்ன) ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நீண்ட காலமாக அடிமட்டத் தொண்டராக இருந்து படிப்படியாகவே கடும் போராட்டத்தோடு தலைமைக்கு வரமுடிந்தது. அது வரைகாலம் கொவிகமவினரின் சொத்தாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிரேமதாச தலைமைக்கு வந்தமை கட்சிக்குள் தொடர்ச்சியான ஒரு கெடுபிடிப்போர் நிலவியமையை பல ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டி வந்துள்ளனர். எனவே தான் அவரது ஆட்சிக்காலத்தில் இந்த விளிம்பு நிலை மக்களின் சீர்திருத்த மற்றும் நலன்புரி விடயங்களில் அதிகளவு அக்கறை காட்டினார் எனலாம்.

அது போல 1992இல் பிரேமதாசவுக்கு எதிராக பாராளுமன்றத்தில் இரகசியமாக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையும் அப்பிரேரணைக்கு ஆதரவாக தனது கட்சியைச் சேர்ந்தவர்களே இருந்ததற்கும் இந்த சாதியப் பின்னணிகள் காரணமாக இருந்தன. இச்சம்பவங்களைத் தொடர்ந்து லலித் மற்றும் காமினி, பிரேமச்சந்திர ஆகியோர் வெளியேறி ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தொடங்கிய போது ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்த ஏனைய உயர் சாதியினரை நோக்கி அழைப்பு விடுத்து, பிரேமதாசவுக்கு எதிராக சாதிப் பிரச்சினை கிளப்பியதும் அப்போது பிரபல்யமான கதைகள்.

கின்னர மற்றும் ரொடி ஆகிய சாதிகள் சிங்கள சாதியமைப்பில் ஆகக் கடைசியில் இருக்கும் சாதிகள். இச்சாதிகள் மீது தான் சிங்கள சாதியமைப்பில் தீண்டாமையைக் காணலாம். இவர்களை ஏனைய சாதியினர் வீட்டுக்குள் அனுமதிப்பது கிடையாது. இவர்களை மிகவும் அசிங்கத்துக்கும், ஏளனத்துக்கும் உரியவர்களாக பார்க்கும் போக்கு சிங்கள சமூகத்தினர் மத்தியில் உள்ளது. அது போல பெருமளவில் பிச்சை வாங்கிப் பிழைக்கின்ற சாதியாக சிங்கள சாதியமைப்பில் கொள்ளப்படுகின்ற இந்தச் சாதியினரும், தாம் பிச்சை எடுப்பதை தமது உரிமையாகவும், இறைமையாகவும் காணும் போக்கு இருப்பதாக டியுடர் சில்வா குறிப்படுகிறார்.

வெளித்தெரியாமல் உள்ளுக்குள் புகைந்து கொண்டிருக்கும் சாதியம் சார்ந்த பிரச்சினைகள் இலங்கையின் வர்க்க, இனத்துவ, பால் மற்றும் பல்வேறு நிலைமைகளிலும் பாத்திரம் வகிப்பதை இன்றைய நிலையில் உணரக் கூடியதாக இருக்கிறது.

**என்.சரவணன்**

| சாதிய படிநிலை ஒழுங்கு | சாதிப்பெயர் | பாரம்பரியத் தொழில் | முழு சிங்கள ஜனத் தொகையில் வீதம் |
|---|---|---|---|
| 1 | கொவிகம | | |
| | 1. ரதல | நிலமுள்ள நிலப்பிரபுக்கள் | 0.001 |
| | 2. கொவிகம | -- | 49 |
| | 3.பட்டி | கால்நடை வளர்ப்பு | 0.001 |
| 2 | கராவ | மீன்பிடி | 5 |
| 3 | சலாகம | கருவா இடித்தல் | 3 |
| 4 | துராவ | கள் இறக்குதல் | 2 |
| 5 | ஹானு | சுன்னக்கல் தொழில் | 0.002 |
| 6 | ஆசாரி, நவந்தன்ன, கல்லது | பொற்கொல்லர், கொல்லர் | 1 |
| 7 | ஹேன, ரதா | சலவைத் தொழில் | 3 |
| 8 | வகும்புர, ஹக்குரா | கருப்பட்டி உற்பத்தி | 12.5 |
| 9 | கும்பல், படஹெல | மட்பாண்ட உற்பத்தி | 2.5 |
| 10 | பன்ன, துர | புல்வெட்டுவோர் | 0.3 |
| 11 | நெக்கத்தி, பெரவா | பறையடித்தல், நாட்டியம்... | 3 |
| 12 | பத்கம, பது | கூலிவேலை, வீட்டு வேலை | 18 |
| 13 | கின்னர | பாய் பின்னுதல் | 0.3 |
| 14 | ரொடி | பிச்சை எடுத்தல் | 0.001 |
| | | | 100 |

நன்றி - நூலகத்திட்டம்



# அரசியல் ஆண்களுக்குரியது மட்டுமல்ல பெண்களுக்கும் உரியது!

## ஜே. வி. பியின் மாகாண சபை உறுப்பினர் அஞ்ஞான் உம்மா

**அஞ்ஞான் உம்மா (42) இலங்கையில் நேரடி அரசியலில் பங்குபற்றும் முதலாவது முஸ்லிம் பெண். மேல் மாகாணசபை உறுப்பினராக கடந்த மாகாண சபைத் தேர்தலில் ஜே.வி.பி கட்சியின் சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்று தற்போது கம்பஹா தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டிருக்கிறார். பெண்கள் அரசியலில் ஈடுபடுவது பற்றி பரந்துபட்ட விவாதங்கள் முன்னெடுத்துச் செல்லப்படும் இச்சந்தர்ப்பத்தில், அஞ்ஞான் உம்மாவின் அரசியல் பிரவேசம் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியது. இவரது வருகை இறுக்கமான மூடிய கட்டமைப்பான இலங்கை முஸ்லிம் சமூகத்தில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதும் சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டியதே. அவருடனான நேர்காணல் இவற்றை தெளிவுபடுத்தும் எனலாம்.**



**உங்களது அரசியல் பிரவேசம் பற்றி கூறுங்களேன்?**

பெண்கள் என்றால் அரசியல் தேவையில்லை என்று ஒரு போதும் நாம் எண்ணக் கூடாது. சமூகத்திலும் அவ்வாறான கருத்து நிலவக் கூடாது. ஆண்களைப் போன்று சமத்துவமான முறையில் அரசியலில் ஈடுபட பெண்களாகிய எமக்கும் உரிமை உண்டு. பெண்கள் என்ற வகையில் நாம் அனுபவிக்கும் பிரத்தியேகமான பிரச்சினைகள் பெண்கள் அரசியலில் ஈடுபட வேண்டிய தேவையை வலியுறுத்தி நிற்கின்றன. அரசியல், பொருளாதார, கலாசார ரீதியாக எங்ஙனம் நோக்கினாலும் எத்தனையோ பிரச்சினைகள் பெண்களுக்கு உள்ளன. குறிப்பாக அரசியல் ரீதியிலும் அவ்வாறு தான். இதன்படி பெண்கள் தமது பிரச்சினைகளை அரசியல்மயப்படுத்த கட்டாயம் அரசியலில் பங்கேற்க வேண்டும். நான் அரசியலில் ஈடுபட இந்த உள்வாங்கல் ஒரு காரணமாக இருந்ததுடன் குடும்பச் சூழலும் குறிப்பிடத்தக்க பங்கையாற்றியது. எனது சகோதரர் கட்சி வேலைகளில் ஈடுபட்டமை எனக்கு ஒரு உந்துசக்தியாக அமைந்தது. அதேபோல் எனது கணவர் ஒரு சமவுடமைவாதி என்ற வகையிலும் எனக்கு அரசியல் நீரோட்டத்தில் கலக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

**நீங்கள் தற்போது கம்பஹா மாவட்ட ஜே.வி.பி கட்சியின் மாகாண சபை உறுப்பினர். அதேபோல் நேரடி அரசியலில் பங்கேற்கும் முதல் முஸ்லிம் பெண். இது பற்றி நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

முஸ்லிம் பெண் என்று கூறுவதைவிட பெண் என்ற அடிப்படையில் நான் கட்சி வேலைகளில் மற்றும் நேரடி அரசியலில் கொண்டிருந்த ஆர்வத்தையே இங்கு குறிப்பிட விரும்புகிறேன். பாடசாலையில் கல்வி கற்கும் காலம் தொடக்கம் சமவுடமை கருத்துக்களினால் ஈர்க்கப்பட்டு அரசியலில் ஈடுபடும் ஆர்வமும் ஏற்பட்டது. முஸ்லிம் சமூகத்தில் குறிப்பாக பெண்களிடையே அரசியல் ஆர்வம் மிக்க குறைவு எனலாம். அத்துடன் முஸ்லிம் பெண்கள் அரசியலில் ஈடுபடாத தன்மையை அவர்களின் தனிப்பட்ட பலவீனமாகக் கொள்வதா இல்லையா என்பது பற்றி எனக்கு சந்தேகம் உண்டு. அதேநேரம் தமது பிரச்சினைகளை முன்வைக்க ஒரு பெண் இருக்கின்றாள் என்ற ஆர்வம் எங்கள் சமூகப் பெண்களிடையே இப்பொழுது காணக் கிடைக்கின்றது. இதனால் பெண்கள் மத்தியில் பெரும் வரவேற்புக் காணப்படுகின்றது.

**உங்களது அரசியல் பிரவேசம் முஸ்லிம் சமூகத்தில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியது எனக் கூறமுடியுமா?**

நான் போட்டியிட்டு வெற்றி பெற்றதன் தாக்கம் இங்கு மட்டுமன்றி காத்தான்குடி, அம்பாறை போன்ற முஸ்லிம் பிரதேசங்களிலும் பேசப்படும் விடயமாகியது. அமைச்சர் அஷ்ரஃப் அவர்கள் கூட இது பற்றிக் குறிப்பிட்டிருந்தார் என அறிய முடிந்தது. முஸ்லிம் பெண்களுக்கு பல தரப்பட பிரச்சினைகள் உள்ளன. மரபுரீதியானவை. கலாசார ரீதியானவை என இவற்றை வகைப்படுத்தலாம். இப்பிரச்சினைகளை வெளிக் கொணரக் கூடிய, அரசியல் மயப்படுத்தக் கூடிய வழிவகைகளையே அவர்கள் எதிர்பார்த்துள்ளனர். அண்மையில் திருகோணமலைக்குச் சென்ற போது முஸ்லிம் பெண்கள் மத்தியில் பெரும் வரவேற்பு எனக்குக் கிடைத்தது. என்னை அணுகிப் பல பிரச்சினைகளை அவர்கள் கூறுகின்றனர். அவர்கள் திறந்த மனத்துடன் பிரச்சினைகள் பற்றி உரையாடுவதும் குறிப்பிடத்தக்க ஒரு தாக்கம் தான் எனலாம்.

**இலங்கையில் பல கட்சிகள் உள்ளபோதிலும் நீங்கள் ஜே.வி.பி கட்சியை தெரிவு செய்து போட்டியிட்டதற்கு ஏதும் விசேட காரணங்களுண்டா?**

இலங்கையில் பல கட்சிகள் உள்ளன என்பதை நானும் ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால் இவற்றில் எந்தக் கட்சிக்கு பெண்களை அரசியல் ரீதியாக உள்வாங்கிக் கொள்ளும் உண்மையான தேவையுள்ளது என்ற கேள்வி எழாமல் இல்லை. சில கட்சிகள் பெண்களை கைநீட்டி வரவேற்கின்றன. ஆனால் இந்தப் போலியான ஆதரவு எல்லாம் அரசியல் இலாபம் கருதியே முன்வைக்கப்படுகின்றது. பெண்களைக் காட்டி பெண்களின் வாக்குவங்கியை பலப்படுத்த அவை திட்டமிடுகின்றன. ஆனால் இந்தக் கட்சிகளுக்கும் ஜே.வி.பி க்குமிடையில் வேறுபாடுகள் உண்டு. தலைமைத்துவ ரீதியில், பரந்துபட்ட அரசியல் நோக்கு, கட்சி ஒற்றுமை தன்மை என்பனவற்றில் இந்த வேறுபாடுகளை அனுமானிக்கலாம். என்னைப் பொறுத்த வரையில் சமவுடைமைக் கொள்கைகள் மீது நான் பூரண நம்பிக்கை கொண்டிருப்பதே ஜே.வி.பியில் இணையக் காரணம் எனலாம். பெண் விடுதலை, பெண் சுதந்திரம், பெண் உரிமைகள் பற்றி அவர்கள் கொண்டிருக்கும் கருத்துக்கள், செயற்பாடுகள் என்பனவும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவையெனலாம்.

**நீங்கள் கூறுவதன்படி ஜே.வி.பி கட்சியில் பெண்கள் பிரதிநிதித்துவம் சிறப்பாக உள்ளது எனக் கருத முடியுமா?**

ஆம். கட்சிக்குள் சோசலிச மகளிர் அமைப்பு என்ற பெண்கள் பிரிவொன்று சிறப்பாக செயற்படுகின்றது. அதேபோல் அமைப்பில் இருக்கும் பெண்களும் கட்சி நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபடுகின்றனர். அணி திரண்ட ஒரு சக்தியாக அவர்கள் செயற்படுகின்றனர். எல்லா வகையிலும் பெண்கள் என்ற வகையில் அவர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. நானும் அச்சங்கத்தில் பங்குபெறுபவள் என்ற வகையில் மாதத்திற்கு இரு முறை அவர்களை சந்திக்கின்றேன். கலந்துரையாடல்களையும், விவாதங்களையும் மேற்கொண்டு வருகின்றோம்.

**நீங்கள் கட்சியின் பெண்கள் அமைப்பின் செயற்பாடுகளை நன்கு அறிந்தவர் என்ற வகையில் அவ்வமைப்பின் திட்டங்கள் செயற்பாடுகள் பற்றி விளக்கமாகக் கூற முடியுமா?**

பிரதானமாக பெண்களை அரசியல் ரீதியாக வழி நடத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். அதேநேரம் சோசலிஸ மகளிர் சங்கம் பெண்களுக்கான பல திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. பொதுவாகப் பெண்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். இந்தப் பிரச்சினைகளுக்கு யார் காரணம்? இவ்வாறான சூழ்நிலையில் நாம் எவ்வாறான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்ற கேள்வி எழும்புகின்றது.

மார்ச் மாதம் 8ம் திகதி, பெண்கள் பிரச்சினைகள் மீது ஈடுபாடு கொண்ட பெண்களை உள்ளடக்கி ஆர்ப்பாட்டங்கள், கருத்தரங்குகள் என்பனவற்றை முன்னெடுத்துச் செல்கின்றோம். இவற்றில் ஆர்வம் காட்டும் பெண்களை அமைப்பு ரீதியான நடவடிக்கைகளுக்குள் உள்வாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம். தனியே இது பற்றி விழிப்பூட்டுவதற்கான பத்திரிகை ஒன்றும் வெளியிடப்படுகின்றது. அப்பத்திரிகையை வெளியிடுவது தொடக்கம் விற்பனை செய்வது வரை சகல வேலைத் திட்டங்களையும் பெண்கள் முன்னெடுக்கின்றனர். குறிப்பாக ஓவியக் கண்காட்சிகள் போன்ற கலாநிகழ்வுகளையும் மேற்கொள்கின்றார்கள்.

பொதுவான வேலைத்திட்டமாக அரசியல் தலைமைத்துவம் கட்டியெழுப்பபட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இந்த தலைமைத்துவத்தின் கீழ் பிரதேசவாரியாக, மாவட்ட வாரியாக இருக்கும் பெண்கள் பிரச்சினைகள் இனம் கண்டு தொழிற்பாடுகள மேற்கொள்ளப்படுகின்றது. பிற அமைப்புகளுடன் இணைந்து செயற்படல், கட்சி அரசியல் வேலைகள், வெகுஜன அமைப்புகள் வேலை என்பனவற்றில் பங்குபற்றல் என்பனவற்றைக் குறிப்பிடலாம். கட்சிக்குள் அரசியல் மட்ட வேலைகளில் அதிகமாக பெண்கள் பங்குபற்றல் உள்ளது. ஜே.வி.பி. யின் சோசலிச மகளிர் சங்கத்திற்கு பெண்கள் பிரச்சினைகளுக்கு சோசலிச அடிப்படையில் தான் தீர்வு காண முடியும் என்ற வலுவான நம்பிக்கை உள்ளது எனலாம். அதற்கான வேலைத்திட்டங்கள் பல மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**நீங்கள் கூறுவதன்படி பார்த்தால் ஜே.வி.பி ஆட்சிக்கு வந்தால் பெண்களின் நிலைமை சிறப்படையும் என்று கூறமுடியுமா?**

கட்டாயமாக சிறந்த நிலைமை ஏற்படும். பல்வேறு துறைகளிலும் பெண்களுக்கு சமத்துவம் ஏற்படும். சம உரிமை வலியுறுத்தப்படும்.

**இலங்கை அரசியலில் பெண்களின் பங்களிப்பு குறைவாக இருப்பதற்கான காரணங்கள் எவையென நீங்கள் இனம் காண்கின்றீர்கள்?**

பொதுவாக பெண்கள் அரசியலில் ஈடுபடாமையை துரதிருஸ்டம் என்றே கூற வேண்டும். குறிப்பாக முஸ்லிம் பெண்களை எடுத்துக் கொண்டால், இஸ்லாம் மதத்திலேயே கூறப்பட்டிருக்கின்றது ''அரசியல் ஆண்களுக்குரியது, பெண்களுக்குரியதல்ல' என்று. அதேநேரம் அரசியலில் நிலவும் வன்முறைகளைக் கூட ஒரு காரணமாக கொள்ளலாம். அரசியலில் ஈடுபட பெண்கள் துணிவு கொண்டு தாமாக முன்வரவேண்டும். ஆனால் பெண்களை துணிவற்றவர்களாகவே சமூகச் சூழலும், குடும்பச் சூழலும் மாற்றி விடுகின்றன. இதனால் அரசியலில் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி வருமே என்ற நெருடல் பெண்களுக்குள் ஏற்படுகின்றது. அதேநேரம் நேரடி அரசியலில் பங்கேற்கும் போது கட்சி மட்டங்களில் பெண்களை கருத்திலெடுக்காத போக்கும், அவர்களை அடிமையாக வைத்திருக்கும் போக்கும் பரவலாகக் காணப்படுகின்றது. எவ்வளவு தான் கல்வி கற்ற பண்டிதராக இருந்தபோதிலும் பெண்களுக்கு ஏன் அரசியல் என்று பிற்போக்குத்தனமாக எண்ணும் தலைமைத்துவங்களும் கட்சிக்குள் இல்லாமல் இல்லை. இந்த வகையில் ஜே.வி.பி பெண்களுடன் இணைந்து செயற்படுவதினால் பெண்கள் அரசியலில் ஈடுபட வேண்டிய தேவையை நன்கு உணர்ந்துள்ளது. பெண்களும் அரசியலில் பரவலாக ஈடுபட வேண்டிய தேவையை இக்கட்சி பிறருக்கு உணர்த்தி நிற்கின்றது.

**ஜே.வி.பி கட்சி மாகாண சபையை கொள்கை ரீதியாக எதிர்த்து வருகின்ற போதிலும் நீங்கள் ஒரு மாகாண சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்—டுள்ளீர்கள். இந்த வகையில் உங்கள் தொகுதியின் வேலைத் திட்டத்தைப் பற்றி கூறுவதாயின்?**

நாங்கள் மக்களுடன் இணைந்து பணியாற்றுகின்றோம். அவர்களின் பிரச்சினைகளை நேரடியாக அறிந்து வரச் செல்கின்றோம். அவர்களுடன் நெருக்கமான தொடர்பை பேணுகின்றோம். மக்களும் அவர்களது பிரச்சினைகளை தெளிவாக எடுத்துக் கூறுகின்றார்கள். வீடற்ற பிரச்சினை, தொழிற்பிரச்சினை என இவை பலவகைப்படுகின்றது. தாம் எத்தனையோ பிரச்சினைகளைத் தீர்த்து விட்டதாகப் பிற கட்சி செயற்பாட்டாளர்களினால் கூறப்படுகின்றது. ஆனால் பிரச்சினைகள் தாம் தீர்ந்தபாடில்லை. அதேநேரம் மேல்மாகாண சபை முறை மூலம் இப்பிரச்சினைகள் யாவற்றையும் தீர்த்து விடலாம் என்றுமில்லை.

**நீங்கள் நேரடி அரசியலில் தற்போது பங்குபற்றிக் கொண்டிருக்கின்றீர்கள். பெண்களை எங்ஙனம் பரந்துபட்ட அரசியலில் ஈடுபடுத்தலாம் என நினைக்கின்றீர்கள்?**

பெண்கள் அரசியலில் ஈடுபடாததற்கு காரணம் நிலவும் இந்த முதலாளித்துவ அரசாங்கங்கள் தாம். பெண்கள் தாம் பரவலாக அரசியலில் ஈடுபடும் தேவையை வெளிப்படுத்த வேண்டும். வீதியில் இறங்கி தமது அரசியல் தேவைகளை வெளிப்படுத்த வேண்டும். எங்களுக்கு கட்சியில் இவ்வளவு இடங்கள் வேண்டும் என கட்டாயப்படுத்த வேண்டும். சமூக கட்டமைப்பு பொதுவாக பெண்களைப் பாலியல் பண்டமாகக் கருதுகின்றது. இவற்றைப் புதிதாக சொல்லித் தெரிய வேண்டியதில்லை. நாமும் அரசியலில் பங்கேற்பதால் எமக்கு சார்பான சட்டங்கள் ஏற்படுத்தப்படலாம். டயர் விற்பனைக்கு பெண்களைப் பயன்படுத்தும் விளம்பரங்களுக்கு தடை கொண்டு வரப்படலாம். சகல துறைகளிலும் ஆணுக்குச் சமமான எண்ணிக்கையில் பெண்களை வேலைக்கு அமர்த்துங்கள் என சட்டம் கொண்டு வரப்படலாம். சுவீடனைப் போன்று போதுமான பெண்கள் பிரதிநிதித்துவ முறை இல்லாவிட்டால் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் சூழ்நிலை ஏற்படலாம். இதன்படி எவ்வளவு தான் தடைகள் இருந்தாலும் தனது அரசியல் ஆர்வத்தை பெண்கள் வெளிப்படுத்த வேண்டும். இதன்படி பெண்கள் தான் இருக்கும் தடைகளைக் களைந்து தேவைய்யை உணர்ந்து அரசியலில் ஈடுபட வேண்டும்.

***நேர்காணல்:ரத்னா***

நன்றி - நூலகத்திட்டம்



**யாழ். பல்கலைக்கழகம் ஆரம்பித்து 25 வருடங்கள் பூர்த்தியானதை — யொட்டி சரிநிகரின் யாழ் செய்தியாளர். யாழ் பல்கலைக்கழக துணை — வேந்தர். மற்றும் விரிவுரையாளர்கள். புத்திஜீவிகள் உரையாடியதன் சில பகுதிகளை இங்கு தருகிறோம்.**

**ஆ—ர்.**

# வரவேற்பும் எதிர்ப்பும்

**யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை —**

1974ம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழக வளாகமாக யாழ் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. யாழ் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட போது ஒரு புறம் வரவேற்புடனும் மறுபுறம் எதிர்ப்புகளுடனும் ஆரம்பிக்கப்பட்டது. ஒரு புறம் தமிழ் மக்களுக்கு ஒரு பல்கலைக்கழகம் கிடைக்கிறது என்ற சந்தோஷம். மறுபுறம் யாழ்ப்பாணத்தின் பிரபல பாடசாலைகளில் ஒன்றான பாரம்பரிய மிக்க பரமேஸ்வராக் கல்லூரி இல்லாமல் போகிறதே என்ற கவலையும் மக்களிடையே இருந்தது.

ஆரம்பத்தில் இரு பீடங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட யாழ் பல்கலைக்கழகம் இப்போது தனியான பல்கலைக்கழகமாக மிளிர்ந்து வவுனியா வளாகத்தையும் கொண்டு இயங்கி வருகிறது. எட்டு பீடங்களில் ஆறு பீடங்கள் திருநெல்வேலியிலும், இரு பீடங்கள் வவுனியாவிலும் செயல்பட்டு வருகின்றன. யுத்தம் காரணமாக கிளிநொச்சியில் இயங்கி வந்த விவசாய பீடம் தற்போது திருநெல்வேலியில் இயங்கி வருகிறது. இவை தவிர இராமநாதன் நுண்கலைப் பிரிவு, சித்த மருத்துவத்துறை என்பன பீடங்களாக இல்லாவிட்டாலும் பீடங்களுக்கு நிகரான நிலைக்கு வளர்ச்சியடைந்துள்ளன. இவற்றை விட உடற்கல்வி மீன்பிடித்துறை போன்ற கற்கை நெறிகளை சுயநிதி மூலம் நடத்தி வருகிறோம்.

எமது பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட போது தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களில் கடமையாற்றி வந்த, வெளிநாடுகளில் கல்வியை முடித்துக் கொண்ட பல புலமையாளர்கள் எம்முடன் இணைந்து கொண்டனர். இதனால் எமக்கு பிரச்சினை ஏற்படவில்லை. பொறியியல் பீடம் ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு கொள்கையளவில் அங்கீகாரம் அளித்திருந்தும் இது வரை கைகூடாமலிருப்பது கவலைக்குரிய விடயம். யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து இதுவரை பதினோராயிரம் பட்டதாரிகள் பட்டம் பெற்று வெளியேறியுள்ளனர். தற்போது பல்கலைக்கழகத்திற்கு நிலவசதி போதாமல் உள்ளது. இது தான் இன்றுள்ள பெரும் குறையாகும்.

# அரசு ஒரு துண்டு நிலம் கூட கொடுக்கவில்லை

**சி. உதயகுமார். பொறியியலாளர்.**

**சமூக ஆய்வாளர் —**

இராமநாதன் என்ற ஒரு தனிநபர் கொடுத்த காணியில் தான் இன்று யாழ் பல்கலைக்கழகம் முழுவதும் இயங்குகிறது. திருநெல்வேலியிலாக இருந்தாலென்ன 'மருதனாமடம் நுண்கலைப்பீடமாக இருந்தாலென்ன கிளிநொச்சி விவசாயபீடமாக இருந்தாலென்ன எல்லாம் இராமநாதனுடைய காணி தான். ஸ்ரீலங்கா அரசாங்கம் யாழ் பல்கலைக்கழகத்திற்கென ஒரு துண்டுக்காணியைக் கூட வழங்கவில்லை.

இராமநாதனின் காணி இல்லாவிட்டால் பல்கலைக்கழகம் சாத்தியமில்லை.

பல்கலைக்கழகத்தில் பட்டம் கொடுத்துவிடலாம். பிரச்சினையில்லை. ஆனால் பல்கலைக்கழக மாணவர்களிடையே அறிவு வளர்ச்சி ஆராயுந்தன்மை என்பன எவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்திருக்கின்றன என்று பார்த்தால் நிச்சயம் பூச்சியம் தான் பதில். அத்துடன் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று வெளியேறி ஆசிரியர் சேவை நிர்வாக சேவை போன்றவற்றில் ஈடுபடும் மாணவர்களுக்கு திட்டமிடும் முடிவெடுக்கும் திறன் இல்லை. இது யாழ் பல்கலைக்கழகத்திற்கு மட்டுமல்ல இலங்கையிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் காணப்படும் நிலை. விஞ்ஞானபூர்வமாக ஆராயும் திறன் மாணவர்களிடம் வளர்க்கப்படுவதில்லை. குறிப்புகளை பாடமாக்கி திருப்பி எழுதுகிறார்கள். விரிவுரையாளர் மாணவர்களிடம் ஆய்வுக் கட்டுரை எழுதும் போது சொல்லுவார், ஏற்கெனவே மாணவர்கள் எழுதியவற்றை வாசியுங்கள் வாசித்து விட்டு எழுதுங்கள் என்று. சுருக்கமாகச் சொல்லப் போனால் கிளிப்பிள்ளைகளையே யாழ் பல்கலைக்கழகம் உற்பத்தி செய்து வருகிறது. யாழ் பல்கலைக்கழகம் வருடாந்தம் 240 மில்லியன் ரூபாய்களைச் செலவு செய்து சமூக முன்னேற்றத்திற்கு எதுவிதத்திலும் பங்களிப்புச் செய்யாத ஒரு கிளிப்பிள்ளைக் கூட்டத்தை உருவாக்குகிறது என்பதே உண்மையான நிலைப்பாடு.

# பணவீக்கம் போல பட்ட வீக்கமும் பயன்தராது

**சாந்தன். எழுத்தாளர் —**

இந்தத் தீவையே ரணகளமாக்கி விட்டிருப்பதில் இலங்கையின் கல்விக் கொள்கைக்கும் பெரும் பங்குண்டு அரசியலையே முன்னிலைப்படுத்த முயன்ற இக்கொள்கை சமூகத்திற்கும் கல்விக்கும் ஏன் அறிவுக்கும் கல்விக்கும் கூட சம்பந்தமில்லாமலாக்கி விட்டமை ஆச்சரியமன்று. இன்னமும் காலனித்துவ மனப்பாங்கையே அடிமனதிற்கொண்டு பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களுக்கும் செல்வந்த நாடுகளுக்கும் மூளை வளத்தை 'சப்ளை' செய்வதையே நோக்கமாகக் கொண்டது அது.

சுயசிந்தனை சமூக உணர்வு அறிவுத்தேடல் இவற்றை மழுங்கடித்து படிப்பென்பது வெறும் பட்டமாய் பாடத் திட்டத்திற்கு வெளியே பார்க்க வக்கில்லாததாய் ஆக்கி விட்டமை துரதிருஷ்டமே. பணவீக்கம் போல பட்டம் பதவி வீக்கமும் பலன் தராது.


இப்படியான ஒரு சூழ்நிலையில் மேற்சொன்ன பலவீனங்கள் இங்கு நிலவுகிற போர்ச் சூழல்களாலும் யாழ்ப்பாணத்திற்கேயுரிய வரட்டுக் காரியார்த்த மனப்பான்மைகளாலும் இன்னும் கூர்மை பெற்றிருத்தல் சாத்தியமே. எனினும் இவற்றை மீறி மேலெழ வேண்டிய தேவையும் கடமையும் யாழ் பல்கலைக்கழகத்துக்குண்டு. எத்தனை எத்தனையோ போராட்டங்களின் பயனாய் வராது போல வந்த மாமணி அது. இருபத்தைந்து ஆண்டுகள் இருந்ததே சாதனை என்று திருப்திப்பட்டு விட முடியாது.

பல்கலைக்கழகமென்பது வெறுமனே பட்டதாரிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையன்று. இந்த 25 ஆண்டு காலத்தில் பெயர் சொல்ல வைக்கும் எவரை, எதனை உருவாக்கினோம் என்பதை எண்ணினால் ஏமாற்றமே. இந்நிலை மாற வேண்டும். சமூகப் பொருத்தப்பாடற்ற சிந்தனைகள், பாடங்கள், நெறிகள் பற்றிப் பிகு பண்ணிக் கொள்வதை விடுத்து காலத்தின் தேவை கருதிச் செயற்படுவது அவசியம்.

உயர் கல்விக் கலாசாரம் பற்றிய பிரக்ஞையைக் கட்டியெழுப்ப முயல்வது, பல்கலைக்கழகச் சுவர்களுக்கப்பாலும் கல்வி வசதிகளை முன்னெடுப்பது இவை சாதனைகளே.

வெறும் பல்கலைக்கழகம் என்றதற்கப்பாலும் இம்மண்ணையும் மக்களையும் செம்மையும் செழுமையும் படுத்த வேண்டிய கடமை அதற்குண்டு. சீரழிந்து கொண்டுள்ள யாழ் சமூகத்தின் பலமாயும் சொத்தாயும் தன்னை மாற்றிக் கொள்வது அவசியம். செயலூக்கம் வாய்ந்த ஒரு வழிநடத்தலின் கீழ் இது சாத்தியமே.

## யாழ். பல்கலைக்கழகம் - 25 ஆண்டு நிறைவு



# பல்கலைக்கழகம் 25 ஆண்டுகள் வாழ்ந்ததே சாதனை

**பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு புத்திஜீவி —**

யாழ் பல்கலைக்கழகம் என்பது ஒரு High level Tutory. பல்கலைக்கழகம் தொடங்கிய போது இருந்த வீச்சு பின்னர் பேணப்படவில்லை. தேய்பிறை நிலைதான். யாழ் பல்கலைக்கழகம் டாக்டர் குணானந்தனுக்கு பேராசிரியர் பதவி கொடுக்கவில்லை இதனால் அவர் வெளியேறினார். அதே போல் முகாமைத்துவத்துறை விரிவுரையாளரான ஜெயராமனுக்கும் உரிய இடம் கொடுக்கப்படவில்லை. அதனால் அவரும் அவுஸ்திரேலியா சென்று விட்டார். ஜெயராமன் இருந்திருந்தால் முகாமைத்துவ கல்வி நெறியை ஆங்கிலத்திலும் நடத்தியிருப்பார்.

பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட போது பல்கலைக்கழகத்தை ஆரம்பித்தவர்களுக்கு ஒரு Vision இருந்தது. பின் வந்தோர் அதை வளர்க்கத் தவறி விட்டனர். பல்கலைக்கழகத்திற்கு உள்ளே இருக்க வேண்டிய பலர் வெளியே இருக்கிறார்கள். வெளியே இருக்க வேண்டியவர்கள் உள்ளே இருக்கிறார்கள். பொறியியல் பீடம் ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அனுமதி வழங்கியிருந்தும் இது வரை பொறியியல் பீடம் ஆரம்பிப்பதற்கான எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சட்ட பீடம் உருவாக்குகிறார்கள். இப்போது கறுப்புச் சட்டைக்காரர்களா நமது நாட்டுக்கு உடனடித் தேவை.

பல்கலைக்கழக பீடங்கள் இரண்டாகப் பிரிந்துள்ளன. துணைவேந்தர் தனக்குச் சார்பாக கையை உயர்த்தக் கூடியவர்களுக்கு மட்டும் பட்டம் பதவிகளை வழங்கி வருகிறார். கிராம சபைத் தேர்தல் மாதிரி. மருத்துவபீடம் மட்டும் சர்வதேச அங்கீகாரம் பெற்றுள்ளது. டாக்டர் சிவசூரியா, டாக்டர் தயா சோமசுந்தரம் போன்றோர் அங்கு கடமையாற்றுகின்றனர். சுருக்கமாகச் சொல்லப் போனால் யாழ் பல்கலைக்கழகம் வெள்ளி விழாக் கொண்டாடுவதற்கு எதுவுமேயில்லை. இந்திய இராணுவ காலம் போன்று பல்வேறு நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்து 25 ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறது அது தான் சாதனை.

**பேராசிரியர் இரா. சிவச்சந்திரன். புவியியற்றுறை. யாழ் பல்கலைக்கழகம்**

பல்கலைக்கழகத்தின் பணி இரண்டு விதமானது. ஒன்று கற்றல் மற்றையது கற்பித்தல். கற்றலால் தான் ஆய்வுப்பணி மேலோங்குகிறது. எமது பல்கலைக்கழக மகுட வாசகம் 'மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்பது. பல்கலைக்கழக ஆசிரியர் பரந்த அறிவுள்ளவராக இருக்க வேண்டும். கடந்த 25 ஆண்டுகளில் யாழ் பல்கலைக்கழகம் பல்துறை விற்பன்னர்கள் பலரை உருவாக்கியுள்ளது. ஆரம்பத்தில் புலமை வாய்ந்த பலர் யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்தனர். நாட்டின் பிரச்சினை காரணமாக பலர் வெளியேறி விட்டனர். 1995ம் ஆண்டிற்குப் பின்னர் பௌதிக ரீதியான இழப்பும் பெருமளவு ஏற்பட்டுள்ளது. அரசாங்கமும் பெரிதாக உதவி வழங்குவதில்லை. யாழ்ப்பாணம் இயல்பு நிலைக்கு திரும்பி விட்டது என்பதைக் காட்டுவதற்காக பெயரளவில் தான் உதவிகளை வழங்குகிறது.

கற்றல் கற்பித்தல் இரண்டும் ஒன்றாக இணைந்த ஆசிரிய வளம் இருந்தால் தான் மாணவர் வளமாயிருக்க முடியும். பலர் இங்கு மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் தரமில்லையெனக் கூறுகின்றனர். ஏனைய பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடும் போது ஏனைய பல்கலைக் கழகங்களில் காணப்படும் வாய்ப்புகள் வசதிகள் எமக்கு இல்லை. இது ஆய்வுப் பணியை குறைக்கிறது. சர்வதேச மட்டத்தில் இல்லா விட்டாலும் பிரதேச மட்டத்தில் நாம் பல ஆய்வுப் பணிகளை மேற்கொண்டுள்ளோம். வசதிகளுக்காக ஏங்கவில்லை. முன்னாள் துணைவேந்தர் துரைராஜா கடல்வளம் புவியியல் போன்றவற்றில் பல ஆய்வுகளை மேற்கொண்டார்.


நாங்கள், மாணவர்கள் ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடும் போது மாணவர்களுக்கு பிரதேசம் பற்றிய தலைப்புகளையே ஆய்வுக்கு வழங்குகிறோம். விவசாயம் கைத்தொழில், உல்லாசப் பிரயாண வளம் போன்ற பல விடயங்களில் ஏற்கனவே ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் இந்த ஆய்வுகள் பிரசுரமாகவில்லை யாராவது தனியார் நிறுவனங்கள் விரும்பினால் இவற்றைப் பிரசுரிக்கலாம். கல்விசார்துணைச் சாதனங்கள் கட்புல செவிப்புல சாதனங்களும் எம்மிடம் குறைவாகவே காணப்படுகிறது. கடந்த 7 வருட காலத்தில் பல்கலைக்கழகம் சமூகத்துடன் இணைய வேண்டுமென்பதில் யாழ் பல்கலைக்கழகம் ஏனைய பல்கலைக்கழகங்களை விட மேலோங்கி நிற்கிறது. தொழிலாளர் கற்கை நெறி புறநிலைப் படிப்புகள் என்பவற்றின் மூலம் பாமரர்களும் பல்கலைக்கழகக் கல்வியைப் பெறும் வாய்ப்புக் கிட்டுகிறது. இது பெரிய சாதனை என்று நான் சொல்ல வரவில்லை. பொதுவாகப் பார்க்கும் போது பல்வேறு பிரச்சனைகளுக்கு மத்தியிலும் யாழ் பல்கலைக்கழகம் குறைந்த வளங்களுடன் நிறைந்த சேவையாற்றி வருகிறது என்றே சொல்ல வேண்டும்.

நன்றி - நூலகத்திட்டம்



## ஏ. இக்பால் எழுதிய 'புதுமை'

ஈழத்து முஸ்லிம், தமிழ் எழுத்தாளர்களுள், கவிதை விமர்சனம், சிறுகதை ஆகிய பல்துறைகளிலும் தன் திறமையைப் பதிய வைத்துள்ள முதிர்ந்த எழுத்தாளர் ஏ. இக்பால் என்றால் மிகையாகாது. அவர் அண்மையில் வெளியிட்ட கவிதைத் தொகுதி 'புதுமை' என்ற தலைப்புடையது. இந்தக் கவிதைத் தொகுதியின் வித்தியாசமான இன்னொரு அம்சம், தமிழில் எழுதப்பட்ட இந்தக் கவிதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பையும் இந்தத் தொகுதியில் இணைத்து வெளியிட்டுள்ளமையே. ஒவ்வொரு தமிழ்க் கவிதையின் அருகிலேயே அதன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளது. 'புதுமை' என்ற கவிதைத் தொகுப்பின் தலைப்பு The New என்று ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.




'புதுமை' என்று ஆசிரியரால் எழுதப்பட்ட கவிதை, தொகுப்பின் முன்னட்டையிலும், பொருளடக்கத்தினுள் சேர்க்கப்படாது முகப்புப் பகுதியிலும் வெளியிடப்பட்டுள்ளது. இக்பால் அவர்களால் எழுதப்பட்ட இந்தக் கவிதை தமிழ் நாட்டில் வெளிவந்த 'நடை' என்ற காலாண்டுச் சஞ்சிகையில் 1969ல் வெளியிடப்பட்டுள்ளதென்பதை ஆசிரியரின் 'திறப்புரை' மூலம் அறிகின்றோம். மேலும் இக்கவிதை வல்லிக்கண்ணன் எழுதிய 'புதுக் கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற நூலிலும் சிலாகித்துச் சொல்லப்பட்டுள்ளதோடு இந்தக் கவிதையைப் படித்த காலஞ்சென்ற கவிஞர் தருமு சிவராமு, இதை ஆங்கிலத்தில் "The New" என்ற தலைப்பிட்டு மொழிபெயர்த்து ஆசிரியருக்கு அனுப்பியுள்ளார். அத்தனை பெருமை இந்தக் கவிதைக்கு உண்டு. அத்தோடு இன்னொரு விஷயமும் சொல்ல வேண்டும். 'புதுமை' தொகுப்பில் இடம்பெறும் ஆங்கில மொழிபெயர்ப்புகளைச் செய்தவர் எம். எஸ். ஜாபீர் ஆவார். ஆனால், 'புதுமை' என்ற கவிதைத் தொகுப்பின் ஆங்கில மொழிபெயர்ப்பாக இடம்பெறும் "The New" என்ற பெயர், தருமு சிவராமுவின் மொழிபெயர்ப்பிலிருந்தே பெறப்படுகின்றது.

ஆங்கில மொழிபெயர்ப்போடு தமிழ்க் கவிதைகளைத் தருவது ஒரு புதுமையான முயற்சியே. மேற்குலகில் இவ்வாறு மூலமும், மொழிபெயர்ப்பும் சேர்த்து வெளியிடப்பட்ட தொகுதிகள் உள்ளன. இதன் மூலம் தமிழ் இலக்கிய ஆற்றல், வேற்று மொழிபேசுவோரையும் சென்றடைய வாய்ப்பு ஏற்படுகிறது.

2

இந்தத் தொகுப்பில் இடம்பெறும் 'வாழ்வின் ஆத்மா', 'எண்ணமே வாழ்வு', 'வாழ்வில் காணும்', 'பாம்பாட்டி', 'தியாகிகள்', 'சமபாடு', 'சாவின் பலன்', 'பொருள் முதல் வாதம்' ஆகிய கவிதைகள் ஆசிரியரின் கவிதை ஓட்டத்தின் வித்தியாசமான தன்மையைக் காட்டுவனவாய் உள்ளன. அந்த வித்தியாசமான தன்மை, இவர் தனது கவிதைகளில் புகுத்தும் தத்துவவிசாரத்தால் ஏற்படுவதாகவே 'நான் கருதுகின்றேன். றூமி, ஜிப்ரான் போன்ற சூபிஸத் தத்துவ நோக்குடைய கவிஞர்களின் ஆற்றல் கவிஞர் இக்பாலிடமும் தெறித்துச் செல்வதைக் காண்கின்றேன். தருமு சிவராமு அழகாக மொழிபெயர்த்துள்ள 'புதுமை' என்ற முகப்புக் கவிதையே எனது நோக்கிற்கு வலிவு கூட்டும். அந்தக் கவிதையில் வரும்,

" எதற்கும் ஆதியொன்றிருந்து
தொடர்ந்தால் புதுமையில்லை
எதற்கும் அழிவேயற்றுத் தூர்ந்து
போனால் புதுமையில்லை "

என்னும் வரிகள் எனது கூற்றுக்கு உதாரணம். இன்னும் "வாழ்வில் காணும்" கவிதையில் வரும்,

"ஞானத்தின் ரிஷிமூலம்
மோனமல்ல
நான் யார்? எங்கிருக்கின்றேன்?
வினாக்களே விஞ்ஞானம் ? "

என்னும் வரிகள் மற்றொரு உதாரணம். இவ்வாறே 'பாம்பாட்டி', 'தியாகிகள்', 'சம்பாடு' ஆகிய கவிதைகளிலும் இன்னும் ஏனைய எல்லாக் கவிதைகளிலும் இந்தத் தன்மை தலைகாட்டுவதைக் காணலாம்.

இன்னொரு முக்கிய அம்சம் இந்தக் கவிதைகளின் மொழிபெயர்ப்புப் பற்றியதாகும். மொழிபெயர்ப்பு சிலவேளைகளில் மூலக் கவிதைகளில் இருந்து விலகிப் போய் தழுவல் நிலைக்குள் விழுவனவாகவும் தெரிகின்றன.

உதாரணமாக ' சீ ! இவர் மனிதர்!' என்ற மூலக்கவிதையின் ஆரம்ப வரிகளில் காணப்படும் 'இருண்மை'யான நடையின் தெளிவாக "An Adamson Son" என்ற மொழிபெயர்ப்பு அமைந்துள்ளது. இதே வேளை 'சமபாடு' என்ற கவிதை மொழிபெயர்ப்பென்று இல்லாமல் தழுவல் போலவே காணப்படுகிறது.


"எங்களுக்கு நன்மை தரும் என்று
தான்
உங்களுக்குத் தீமை செய்தோம்" என்ற
வரிகள்

" TO TURN THE SCALE IN OUR FAVOUR WE PUSHED YOU IN DEEP WATER" என்று மொழிபெயர்க்கப்பட்ட வரிகள் மூலத்தை விட கவித்துவமுடையனவாகத் தெரிகின்றன. காரணம் இது மொழிபெயர்ப்பிலிருந்து விலகிய நிலையில் இருப்பதனாலேயே. ஆனால், இந்தக் கவிதையின் முடிவு மூலத்தில்

'நப்பாசை சாகும் போது
இருவரும் சாவோம்"

என்று வருகிறது. ஆனால், இந்தக் கருத்து மொழிபெயர்ப்பில் "LET US DIE TOGETHER, A HOPE I FONDLY CHERISH AS A TOKEN OF LOVE" என்று இடம் பெறும்போது வேறாகவே தெரிகின்றது. ஆயினும், இவை யாவற்றையும் மீறி மூலமும், மொழிபெயர்ப்பும் ஒன்றுக்கொன்று ஏதோவிதத்தில் ஈடுசெய்வனவாய் உள்ளன. இவ்வாறு மேலும் பல கவிதை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் தமிழ் கூறும் நல்லுலகு உலகெங்கும் விரியும்.

- மு. பொ. -



## இனங்களுக்கிடையே நீதிக்கும் சமாதானத்துக்குமான இயக்கம் 20 ஆண்டுகள் நிறைவு

மேர்ஜ் (இனங்களுக்கிடையே நீதிக்கும் சமாதானத்துக்குமான இயக்கம்) அமைப்புப் பற்றி நான் முதன் முதல் 1979 அல்லது 80ம் ஆண்டில் தான் கவனம் செலுத்தினேன். பம்பலப்பிட்டி திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் கலாசார விழாவொன்று இடம்பெற்றது. அது களியாட்ட நிகழ்வை ஒத்ததாக இருந்தது. கலாசாரம் இந்நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தக் கூடிய பிரபலமான காரணி என்பதனை நான் அவ்விழாவில் தான் உணர்ந்து கொண்டேன்.

## எமது போராட்டம் முழுச் சமூகத்திற்குள்ளும் பரவியுள்ளது!

**- மேர்ஜ் தலைவி சுனிலா அபேசேகரா**

அன்று நாம் யுத்தத்தை உணரவில்லை. இன்று போல் சிங்கள அடிப்படைவாதி அரசியல் சக்திகளும் இருக்கவில்லை. நான் அவதானித்த வகையில் சமூக அரசியல் பொருளாதார - கலாசார செயற்பாடுகளில் இனங்களிடையே சமாதானத்திற்காக வேலை செய்தல் ஒரு நடவடிக்கையாக மட்டுமே காணப்பட்டது.

இதன் கருத்து மேர்ஜ் அமைப்பு வெவ்வேறு தளங்களில் செயற்பட்டதாயினும் இனப்பிரச்சினை அதன் ஒரு பகுதியாகும் என்பதாகும்.

இன்று இனப்பிரச்சினை நாட்டின் மொத்தப் பிரச்சினையாக மாறிவிட்டுள்ளது. இனப்பிரச்சினையில் தான் எண்ணும் தீர்வு எது என்ற விடயத்தின் அடிப்படையிலேயே சமூக நீதியை கருத்திற்கொண்டு செயற்படும் அனைவரின் வேலைத்திட்டங்களும் தீர்மானிக்கப்பட்டுள்ளன. அரசியலமைப்பு, தேர்தல், கலாசாரம், சூழல் சட்டத் திருத்தம் ஆகிய எந்த விடயத்தைப் பற்றிக் கதைக்கும் சந்தர்ப்பத்திலும் கூட அவை அனைத்தின் மீதும் ஓடிச் செல்லும் பிரதான இயல்பாக இனப்பிரச்சினை இவற்றுடன் தொடர்பு கொள்கின்றது. தமிழ் மக்களின் குரலை பிரதிநிதித்துவம் செய்வது புலிகளா இல்லையா என்பது பற்றி தெற்கில் உள்ள நாம் விவாதிக்கலாம். எனினும், 20 வருட பூர்த்தியையடைந்த மேர்ஜ் அமைப்பு இனப்பிரச்சினைக்கான தீர்வினை தீர்மானிக்கும் உரிமை தமிழருக்குரித்தென ஏற்றுக் கொள்கின்றது.

இதனால் சிங்கள பெரும்பான்மையோர் மத்தியில் தொழிற்படும் அமைப்பாக மேர்ஜ் அமைப்பு கடந்த காலத்தில் அவதானத்தை செலுத்தியதும், இன்று அதிக அவதானத்தை செலுத்த வேண்டி இருப்பதும் தென்னிலங்கை மக்கள் மத்தியில் கருத்தியலொன்றை கட்டியெழுப்புவது தொடர்பாகவாகும். அதாவது அதிகாரத்தை பரவலாக்குவதும், சிறுபான்மையினருடன் அரசியல் பொருளாதார, அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளல், ஏற்றுக் கொள்ளக் கூடிய்வாறான கருத்தியலை கட்டியெழுப்புவது தொடர்பாகவாகும். மேர்ஜ் அமைப்பின் முன்னால் உள்ள பாரிய சவாலும் இதுவே. இந்நடவடிக்கையை மறுபுறம் கட்டியெழுப்பப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழர் விரோதத்தன்மையை எதிர்த்தே மேற்கொள்ள வேண்டும்.

"புலிகளுடன் கொடுக்கல் வாங்கல் வேண்டாம்", "யுத்தத்தின் மூலம் பிரச்சினையைத் தீருங்கள்" என கோஷமிடும் பயங்கரவாத எதிர்ப்பு இயக்கம் போன்ற அமைப்புகளுக்கு எதிராக "புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்", "அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும்", "அரசியல் தீர்வினை வழங்க வேண்டும்" போன்ற யோசனைகளை முன்வைக்க வேண்டிய நிலைமை அமைப்புக்கு ஏற்பட்டுள்ளது.

சிங்கள, தமிழ், முஸ்லிம் இனமக்களின் ஒற்றுமையினால் நாடு முழுவதும், ஒரே முறையில் தீர்க்கக்கூடிய பிரச்சினையாக ஆரம்பத்தில் மேர்ஜ் அமைப்பு இனப்பிரச்சினையை விளங்கிக்கொண்டிருந்தது. ஆனால், இன்று அது ஒரே சமன்பாட்டின் கீழ் தீர்க்கக்கூடிய ஒன்றல்ல என்பதை விளங்கிக் கொண்டுள்ளது. வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினையை விட முற்றிலும் வேறுபட்ட முறையில் வன்னி பிரதேச பிரச்சினையில் தலையிட வேண்டும். யாழ்ப்பாணத்திலிருந்து வந்த முஸ்லிம் மக்களின் பிரச்சினையை வேறு முறையில் கலந்துரையாட வேண்டும். மலையக மக்களின் பிரச்சினைகளை வேறு முறையில் கலந்துரையாட வேண்டும்.

பிரச்சார இயக்கம், ஆர்ப்பாட்டம், கூட்டம், கலந்துரையாடல், வெளியீடு, துண்டுப் பிரசுரங்கள் போன்ற பல்வேறு முறையில் மேற்கூறப்பட்ட கருத்தியலை கட்டியெழுப்பும் முகமாக மேர்ஜ் அமைப்பு சமூகத்திற்கு அழுத்தம் கொடுக்கக் கூடியவாறான வேலைத் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. குறிப்பாக "யுக்திய" மற்றும் "சரிநிகர்" ஆகிய சிங்கள, தமிழ்ப் பத்திரிகைகள் இரண்டும் இந்நாட்டில் தீர்மானம் எடுக்கும் மற்றும் அழுத்தம் கொடுக்கக்கூடிய சிங்கள - தமிழ் பகுதியினர் மத்தியில் கருத்துருவாக்கத்திற்கு விசேடமான பங்களிப்பைச் செலுத்தியுள்ளது. இவற்றைத் தவிர, சுதந்திர தொடர்பூடக இயக்கம், சுதந்திர மற்றும் நீதியான தேர்தல் இயக்கம், வன்முறைக்கெதிரான கூட்டிணைவு, எல்லைக்கிராம குழு போன்ற இயக்கங்களுக்குள் தலையிட்டு அழுத்தம் கொடுக்கும் தீர்மானகரமான பாத்திரம் மேர்ஜினால் மேற்கொள்ளப்பட்டது. சட்டக்கல்விக்கும் உதவிக்குமான பிரிவு இதுவரை 42 பாடசாலைகளில் மனித உரிமைகள் வலயங்களை ஸ்தாபித்துள்ளது. மனித உரிமைகள் வினாவிடைப் போட்டி நிகழ்ச்சி எதிர்கால சிறுவர்களுக்கிடையில் மனித உரிமைகள் மற்றும் மனித கௌரவம் தொடர்பான அறிவூட்டலை மேற்கொள்ளும் பாரிய முயற்சியைக் கொண்டுள்ளது.


மேர்ஜ் தலையீட்டினால் அனைத்து இனப்பிரிவினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் யாப்பின் வரைவுப்பிரதியானது பொ.ஐ.மு. அரசாங்கம் யாப்பு வரைவுப் பிரதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டது. எம்மால் தயாரிக்கப்பட்ட யாப்பின் பிரிவுகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பொ.ஐ.மு வரைவுப்பிரதியை அரசாங்கம் செயற்படுத்தாவிட்டாலும் இதன் மூலம் எமது போராட்டங்கள், சமூக அரசியல் துறைகளுக்கு பரவியுள்ளது எனத் தெரியவருகின்றது. குறிப்பாக பொ.ஐ.மு. நிகழ்ச்சி நிரலில் எமது சிறந்த விடயங்கள் அவர்களுக்கு தேவையான விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேர்ஜ் அமைப்பும், பொ.ஐ.முவை ஆட்சிபீடமேற்ற முக்கியமான பாத்திரத்தை வகித்தது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. அதேபோல் அதிகாரத்திற்கு வரும் அரசாங்கங்கள் செயற்படும் முறை தொடர்பான சிறந்த பாடமொன்றை கற்றுக் கொள்ளவும் எம்மால் இப்பொழுது முடிந்துள்ளது. இதனால் தமது அடையாளத்தை காப்பாற்றிக் கொண்டு செயற்படுவது தொடர்பாக எண்ண வேண்டிய தேவை மேர்ஜ் அமைப்புக்கு ஏற்பட்டுள்ளது.

சமாதானத்திற்காகச் செயற்படும் எவருடனும் செயற்பாடுகளில் ஒன்றிணைந்தாலும், எமது அடையாளம் மற்றும் அவர்களின் அடையாளம் என்பவற்றின் எல்லையை நாம் விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது.

அடிக்கடி மாற்றத்தைக் காணும் இனப்பிரச்சினையின் இயல்பின்படி மேர்ஜ் அமைப்பும் அதற்கு ஏற்ற வகையில் செயற்பட்டமையை ஏற்றுக் கொள்ள வேண்டும். நடைபெறும் விடயங்களுக்கு விளக்கமளிப்புகளையல்ல நாம் செய்ய வேண்டியது. உண்மையான தேவைகளை விளங்கிக் கொண்டு எமது யோசனைகளை முன்வைத்து அதற்கேற்ற வகையில் அழுத்தம் கொடுத்தலையே செய்ய வேண்டியுள்ளது.

நன்றி - நூலகத்திட்டம்





கடல் வெள்ளைக் கரை போட்ட நீலச்சாரி உடுத்த என் தாய். கடல் ஆத்திரக்காரனுக்கும், அவசரக்காரனுக்கும், பெருமைபிடித்தவனுக்கும் ஒன்றும் கொடுத்ததில்லை. கொடுத்ததெல்லாம் என்னவோ குறைவு தான். கடல் பொறுமைக்காரனுக்குத் தான் கிள்ளிக் கேட்க அள்ளிக் கொடுத்தது. கடல் என்பது நீலம். நீலம் பொறுமையின் சின்னம். ஏன் எனக்கும் கடல் அள்ளித் தான் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. உள்ளே போனால் பணம், வெளியே வந்தால் பிணம். இதுதான் எனக்கு கடல் சொன்ன மந்திரம். இந்தக் கடலில் தான் என்னையும் இன்னொருவனையும் 'ஒசன்பேட்' சுமந்து கொண்டு ஆடி ஆடி சென்று கொண்டி-ருக்கின்றது.

இன்னும் ஐநூறு மீற்றர் போனதும், படகு நிறுத்தப்படும். வயிற்றில் 16 இறாத்தல் இரும்பும் முதுகில் இரு சிலிண்டர்களும் கட்டப்படும் கண்ணுக்கு கவரும் காலுக்கு துடுப்பும், கத்தியும், பிஸ்டலும் இடுப்பிலுள்ள சிறு வளையத்திற்கூடாக நைலோன் கயிறும் மாட்டப்பட்டு முதுக்குப்பக்கமாக நீருக்குள் விழுந்து மூச்சை அடக்கி கடலடிக்குப் போய் கூடக்கொண்டு போகும் உரப்பைக்குள் கடல் அட்டையை நிரப்பிக் கட்டினால் கை தானாக மேலே வரும். அதை படகிலிருப்பவன் சேகரித்து படகுக்குள் போடுவான். ஏதாவது ஆபத்து என்றால் இடுப்பு வளையத்திலுள்ள கயிற்றை நான்கு, ஐந்து தடவை விரைவாக அசைக்க படகிலிருப்பவன் ஆபத்தென்று உணர்ந்து கயிற்றை வேகமாக மேலே தூக்கி என்னை ஆபத்திலிருந்து மீட்பான். கறுப்பு அட்டையை படகுச் சொந்தக்கார முதலாளிக்கு ஒரு விலைக்கு விற்க, அவன் அதனுடன் இருபது, முப்பது ரூபாய் வைத்து வேறு வியாபாரிகளுக்கு விற்பான். வெள்ளை அட்டை என்றால், எங்களுக்குச் சந்தோசம். நூற்றுக்கணக்கில் விலை போகும். எப்படியோ கூட்டிக் கழித்துப் பார்த்தாலும் மாதம் பதினைந்தாயிரத்திற்கு மேல் மிஞ்சும். உள்ளே போனால் பணம். வெளியே வந்தால் பிணம் என்பது உண்மை தான். கடல் என்னும் வள்ளல்கார அம்மா பொறுமைக்காரர்களுக்கும் வீரர்களுக்கும் தான் அள்ளிக் கொடுப்பது வழக்கம். கடல் அன்னை வீரத்தின் உறைவிடம். எவ்வளவோ வீரக் கதைகளை தன் நெஞ்சினிலே புதைத்து வைத்திருக்கிறாள் அவள்.

இப்போது 'ஒசன்பேட்' குறித்த இடத்தை அடைந்து விட்டது. எனது பத்தாவது வயதில் பராக்கிரம சமுத்திரத்தின் வலது கரையின் நீர்ப் பெருக்கம். அணைக்கட்டில் உயரத்தில் நான் புதினம் பார்த்துக் கொண்டிருந்த போது பக்கத்துக் கடையில் வேலை செய்யும் காமினி என்னை நீருக்குள் தள்ளி விட்டான். நீருக்குள் போன நான் மேலுக்கு வராதபோது தான் எனக்கு நீச்சல் தெரியாது என்பதைத் தெரிந்து, பாய்ந்து என்னை மீட்டு அன்றிலிருந்து நீச்சல் ஆசானானான். பின்பக்கம், முன்பக்கம், நீந்துவது, சுழியோடுவது, நீருக்குள் எறிகிற கற்களைப் பொறுக்கி வருவது என்று நிறையவற்றைக் கற்றுத் தந்தான். பதினெட்டு வயதில் ஊர் திரும்பிய போது என் அட்டை பிடிக்கும் நண்பனொருவன் இடுப்பில் இரும்பைக் கட்டி கடலுக்குள் கொண்டு போனான். எனது கடற்தாயின் அழகைக் கண்டு வியந்து போனேன். அவன் எனக்கு நிறைய நுட்பங்களைக் கற்றுத் தந்தான். முதல் நாளே நான் எனது முகத்தையும், கண்ணாடியையும் தாக்க வந்த சுறாவை பிஸ்டலால் சுட்டுக் கொன்றேன். தாயின் சேலையில் சிவப்புக் கறை.

அப்போது தான் இந்தத் தொழில் எவ்வளவு அபாயம் என்பது புரிந்தது. அமிழ்வதும், மேலே வருவதும், உடனே செய்ய முடியாது. ஒவ்வொரு குறிப்பிட்ட ஆழத்திலும் குறிப்பிட்ட நேரத்தைக் கடத்திவிட்டுத் தான் மேலேயோ அல்லது கீழேயோ வரலாம். இப்படித்தான் புறாமலைக்கு அருகில் அட்டை பிடித்துக்-கொண்டிருந்த மன்னார் சகோதரர்களுக்கு பெண்ட் (நைட்ரஜன் நார்க்கோசிஸ்) வந்து கை கால் மடக்க முடியாமல் நீருக்குள்ளே இறந்து போனார்கள். அவர்களின் உடலை நீரோட்டம் அடித்துச் சென்று விட்டது. ஒரு முறை கல்முனைப் பகுதியைச் சேர்ந்த இருவர் கூட அதே பகுதியில் சிலிண்டர் அடைபட்டு செத்துப் போனார்கள். அவர்களின் உடலுக்கும் இதுதான் நடந்தது.

ஒசன்பேட்டிலிருந்து நங்கூரத்தை எறிந்துவிட்டு கடலைப் பார்க்கிறேன். கடல் அமைதியாகவிருந்தது. இந்தப் பெண்தானா சீறி எழுந்து உயிர்களைத் துவம்சம் செய்கிறாள். நம்பமுடியவில்லை. அமைதியில் தான் ஆழமும் இருக்கின்றது. அபாயமும் இருக்கின்றது. படகுகூட ஒரு பக்கம் இழுபடுவது மாதிரி எனக்குத் தோன்றுகிறது. இது நீரோட்டத்தினாலோ, அல்லது பிரமையினாலோ என்னவோ, ஆனால், கடல் அன்னைக்கு வீரனைத்தான் பிடிக்கும். ஆனால், என் மனைவிக்கோ இந்தத் தொழில் பிடிக்கவில்லை. என் எட்டு வயது மகளுக்கும், என் ஆறு மாத ஆண் பிள்ளைக்கும் நினைவு தெரிந்திருந்தால் பிடித்திருக்காமல் தான் இருந்திருக்கும்.

காலில் துடுப்பை மாட்டி ஒக்சிசன் சிலிண்டர் இரண்டையும் முதுகுக்குப் பின்னால் மாட்டி முகத்திற்கும், மூக்கிற்கும் கண்ணாடி மாட்டி விட்டேன். இன்னும் சுவாசக் குழாயை வாய்க்குள் திணிப்பதும், முதுகுப் பக்கமாக கடலில் விழுந்து மூழ்குவதும் தான் பாக்கியிருந்தது. இரவு நடந்ததை நினைத்துக் கொள்கின்றேன். இந்தக் கடலட்டைகளுக்காக கடலில் மூழ்குவதை விட்டு விடுங்கள் என்ற எனது மனைவியின் வழமையான நச்சரிப்பு ஞாபகம் வருகின்றது. பிள்ளைகளை வளர்க்க, பிள்ளைகள் விரும்பியதை வாங்கிக் கொடுக்க அவர்களுக்கு நல்ல வாழ்க்கைத் தரத்தைப் பெற்றுக் கொடுக்கப் பணம் தேவை. இது இந்தத் தொழிலில் தான் கிடைக்கின்றது. இதைவிட்டு உடனே செய்யக்கூடிய வகையில் வேறு தொழிலும் தெரியாது. பிள்ளைகள் வளர்ந்த பின் விட்டு விடுவேன் என்று தான் சொல்லுவது வழக்கம். அவளும் வேண்டா வெறுப்பாக ஏற்றுக் கொள்வாள். கடந்த இரவும் இதுதான் நடந்தது. எனது எட்டு வயது மகள் கட்டிலிலே படுத்துக் கிடந்தாள். எனது ஆறு மாத மகனும் அவளுக்கருகில் தூங்கிக்-கொண்டிருந்தான். அவனின் கழுத்தைப் பார்க்கிறேன். அவனின் கழுத்து வெறுமை-யாக இருந்தது. புதிய ஒக்சிசன் சிலிண்டர் வாங்க அதை ஈடுவைக்க வேண்டி ஏற்பட்டது. அந்த மாலையை எப்படியோ மீட்டு மீண்டும் அவனுக்குப் போட வேண்டும். மகளும் அடிக்கடி சிவத்த கலர் சைக்கிள் வாங்கித் தரச் சொல்லிக் கேட்கிறாள். அவளுக்கும் எப்படியோ அந்தச் சைக்கிளை வாங்கிக் கொடுக்க வேண்டும். 'ஒசன்பேட்' அலையில் ஆட சிந்தனை கலைய வாய்க்குள் குழாயைத் திணித்து கடலில் மூழ்கி விடுகின்றேன்.

கீழே போகின்றேன். போகப் போக திடீரென கணப்பொழுதில் நீரின் வெப்ப நிலை மாறுகின்றது. ஏதோ விபரீதம் நிகழப்-போகின்றது என்பதை உணருவதற்கிடையில் இன்னும் கீழே எனது சக்திக்கு மீறிச் சென்று விட்டேன். நீரோட்டத்தில் மாட்டிக் கொண்டதை உணர்கின்றேன். மேலே வர முயற்சி செய்கிறேன். முடியவில்லை. வழமையாக நீரோட்டத்தில் மாட்டிக் கொண்டால் நீரோட்டத்துடன் சென்று ஒரு நிலையில் நீரோட்டத்தின் வேகம் பூரணமாகக் குறைந்தவுடன் அதிலிருந்து நாம் விடுபட்டுக் கொள்ளலாம். கையைக் காலை ஆட்டாமல் நானும் நீரோட்டத்துடன் செல்கிறேன். நீரோட்டம் என்னை அடித்துக் கொண்டே செல்கின்றது. மலைகள் அதிகம் உள்ள பகுதி என்பதால் நீரோட்டம் மலையில் மோதி நீரோட்டத்தின் வேகம் கூடிக் கொண்டே இருந்தது. நான் கைகளைத் தலைக்கு முன்னால் நீட்டி மலைகளில் முட்டாதவாறு என்னைப் பாதுகாக்கின்றேன்.

ஒருவேளை இதுதான் என் கடைசி நேரமோ என்னவோ? எவ்வளவு நேரத்திற்கு இந்த நீரோட்டம் அடித்துச் செல்லும்? எப்போது விடும்? இரண்டு சிலிண்டர் ஒட்சிசன் முடிந்தால் என் நிலை என்ன? என்றெல்லாம் சிந்திக்கிறேன். ஒரு வேளை என்று நினைக்கின்றேன். மனைவியையும், மகளையும், மகனையும் நினைக்கின்றேன். அந்த மகளுக்கு வாங்கித்தருவதாக வாக்களித்திருந்த சைக்கிளினதும், மகனின் ஈடுமீளவேண்டிய தங்கச் சங்கிலியும் ஞாபகம் வருகின்றன. என் மனைவிக்கோ நான் வேண்டும். இதற்காகவேனும் நான் உயிர்பிழைக்க வேண்டும். வேண்டும். கடவுளே என்னை உயிர் தப்ப வை என்று வேண்டிக் கொள்கின்றேன். நீரோட்டத்தின் வேகம் குறைவதை உணர்ந்தேன். எனக்கு உள்ளூர சந்தோசம் வருகின்றது. கடவுளே உனக்கு எனது நன்றிகள். நீ பெரியவன். இப்போது நீரோட்டத்தின் வேகம் , அதிலிருந்து நான் நீங்கி மேலே வருவதற்குப் போதுமானளவு குறைந்து விட்டது. இப்போதும் மனைவியும் மகளும், மகனும் அந்தச் சிவத்த நிற சின்னச் சைக்கிளும், மாலையும் ஞாபகத்திற்கு வருகின்றன. நீர் மட்டத்திற்கு வந்து விட்டேன். மீண்டும் இப்போது தான் உயிர் பிறந்தது. ஒக்சிசன் சிலிண்டர்கள், துடுப்பு, இரும்பு எல்லாவற்றையும் உடம்பிலிருந்து கழற்றிவிட்டேன்.

மணிக்கட்டைப் பார்க்கின்றேன். இரண்டு மணித்தியாலத்திற்கு மேலாக இழுத்துச் செல்லப்பட்டிருப்பதை உணர்கிறேன். சூரியனை வைத்துக் கரையைத் தேடுகின்றேன். அலைகள் கரையை மறைக்கின்றன. கரை கறுப்புக் கோடடித்த விளிம்பு மாதிரித் தெரிகின்றது. கரையை நோக்கி நீந்துகின்றேன். ஏற்கெனவே களைத்துப் போயிருந்த எனக்கு களைப்புப் பற்றி பிரக்ஞை கரையைக் கண்டதால் உணர்வு ரீதியாக அற்றுப் போயிற்று. நீந்துகிறேன். நீந்து கிறேன். கையைக் காலை ஆட்டி அடித்து நீந்து கிறேன். மனைவி, மகள், மகன், சைக்கிள், மாலை இவைகளை நினைக்க நினைக்கப் புதுத் தெம்புவர நீந்துகிறேன். இப்போது நீந்த வலது காலை எடுக்கின்றேன். காலை நிமிர்த்தவே முடியவில்லை. தசை பிடித்துக் கொண்டதை உணர்கின்றேன். பெரியதசைநார்கள் சின்னத் தசைநார்களுக்குள் வழுக்க முடியாமல் பொறுத்துக் கொள்வதால் தான் தசைப்பிடிப்பு வருவது வழக்கம். நிலத்திலே தசைப்பிடிப்பு வந்தால் ஓய்வெடுத்துக் கொண்டு காலை அழுத்திவிடுவதால் தசைபிடிப்பிலிருந்து தப்பலாம். ஆனால், நீரில் அப்படிச் செய்ய முடியாது. கால் இயங்காமல் விட்டால் மூழ்கி இறப்பது திண்ணம். பல்லைக் கடித்து அலறிக் கொண்டு அப்படி அலறுகையில் வாய்க்குள் கடல் நீர் போகிறது. காலை நிமிர்த்துகின்றேன். கத்தியால் அரியும் வேதனையுடன் கால் பழைய நிலைக்கு வருகின்றது. உண்மையாக இந்தக் காலுக்குள் நிறையத் தசைகள் பிய்த்திருக்கும். இவை மீளப்பெற இரண்டு வாரத்திற்கு மேல் எடுக்கும். அதுவரை வேதனை தான். இப்போது கரையைப் பாக்கிறேன். கரை தெளிவாகத் தெரிகின்றது. கரை என்னிலிருந்து எப்படியும் ஒரு மைல் இருக்கும் போல் இருக்கின்றது. கரையை இடமிருந்து வலமாக நோக்குகின்றேன்.

நன்றி - நூலகத்திட்டம்



சின்னச் சின்னதாக மரங்கள். அவை பனை மரங்களாகத்தான் இருக்க வேண்டும். அதற்குச் சற்று அப்பால் வெள்ளையாய் அந்தக் கட்டிடம் தெரிகின்றது. அது நிச்சயமாக அந்த ஜெர்மன்காரன் வருசத்தில் ஒரு தடவை வந்து தங்குவதற்காகக் கட்டிய ஜென்னா ஹோட்டல். இப்போது எந்தப் பகுதிக்கு என்னை நீரோட்டம் இழுத்து வந்திருக்கின்றது என்பதை உணர்கின்றேன். கரைக்கு இன்னும் அறுநூறு மீற்றர் தான் இருக்கும் போல. உற்சாகத்துடன் மனைவிக்காக, மகளுக்காக, மகனுக்காக, சைக்கிளுக்காக, மாலைக்காக நீந்திக் கரையை அடைகிறேன். மிகவும் களைத்து மயங்கிய நிலை. அலை அடித்து மீண்டும் கடலுக்குள் போகாதிருக்க கொஞ்சம் மணலுக்குள் ஏற வேண்டும். அதற்குக் கூட உடம்பில் பலமில்லை. உடம்பு இயங்க மறுக்கிறது. மனம் மட்டும் இயங்கிக் கொண்டிருக்கிறது. மணலுக்குள் ஏறித் தலையைத் தூக்கிப் பார்க்கிறேன். முள்ளுக் கம்பி வேலிகளும் மணல் மூடைகளும் கொஞ்ச தூரத்தில் தெரிகின்றன. இந்தக் கடற்கரை போகரை என்பதை உணர்கையில் மயங்கிப் போகிறேன்.

சூரியனின் கதிர்பட்டு கண்விழித்துப் பார்க்கிறேன். உச்சிவெயில்... அந்த இராணுவ முகாம் தெரிகின்றது. இதே சூரியனின் கதிர் தான் அந்த இராணுவ முகாமை முட்கம்பி வேலிகளுக்கூடாக ஊடறுத்து, ஜன்னலுக்கூடாக சென்று கட்டிலிலே படுத்துக் கிடந்த ராஜபக்ச-வினதும், பாயிலே படுத்துக் கிடந்த சேவபக்சவினதும் முகத்திலே பட்டு, அவர்களை இன்று காலையில் துயிலெழுப்பியது. வழமையான காலைகள் போல் இந்தக் காலையிலும் அவர்கள் 'தறு' (நட்சத்திரம்) க்களைப் பற்றிச் சிந்திக்-கிறார்கள். பதவியுயர்வு பெற்று மாற்றலாகி அந்த முகாமிலிருந்து நகரப்பகுதிக்கோ, அல்லது தலை நகருக்கோ அல்லது பயங்கரவாதப் பிரச்சினைகள் குறைந்த பகுதிக்கோ செல்வதற்கு ஆளுக்கொரு தறு தேவைப்பட்ட நிலையில் தான் இன்று உச்சிவெயில் பகலில் என்னை மயக்கத்தி-லிருந்து எழுப்பிய சூரியக் கதிர் அவர்கள் இருவரையும் காலையில் உறக்கத்திலிருந்து எழுப்பியது.

மயக்கம் தீர்ந்தாலும் பசியும், தாகமும், களைப்பும் என்னை வாட்டியது. நான் போகரை இராணுவ முகாமுக்கு முன்னால் கரையொதுங்கியதை உணர முடிந்தது. மரத்தால் விழுந்தவனை மாடு முட்டுமா? இல்லாவிட்டால் தோணி கவிழ்ந்தவனுக்கு மரக்கட்டையா? விதி எழுதியபடிதான் எல்லாம் நடக்கும் என்று நினைக்கிறேன். கொஞ்ச நேரத்தில் நான்கு பேர் வந்தனர். என்னை உடம்பு பூராகத் தடவிவிட்டு முகாமுக்குள் இழுத்துக் கொண்டு போனார்கள். மிகுந்த சக்தியை வரவழைத்துக் கொண்டு மிக்க பிரயாசைப்பட்டு அவர்கள் மொழியில் தண்ணீர் கேட்டேன். எப்படியோ அதைப் புரிந்து தண்ணீரை வாய்க்குள் ஊற்றினார்கள். இப்போது மனதுக்கு மட்டும் தெம்பு வந்தது. உடல் பலவீமடைந்து இருந்தது. கேட்ட கேள்விக்கெல்லாம் மனைவியையும், மக்களையும் நினைத்துக் கொண்டு பதில் சொன்னேன்.

இப்போது ராஜபக்சவும் சேவகபக்சவும் வருகிறார்கள். அந்த நான்கு பேரும் அணி வகுத்து சல்யூட் பண்ணி அவர்களுக்கு மரியாதை செய்கிறார்கள். இருவரிடமும் என்னைப் பற்றிச் சொல்கிறார்கள். இருவரும் கேட்டுவிட்டு என்னமோ கதைக்கிறார்கள். அது எனக்கு ஓரளவு விளங்குகிறது. அலற வேண்டும் போல் இருக்கின்றது. ஆனால், முடியவில்லை. மனம் மட்டும் இயங்கிக் கொண்டிருக்கிறது. அவர்களின் காலைப்பிடித்து கையெடுத்துக் கும்பிட்டு யாசிக்க வேண்டும் போல் இருக்கிறது. யாசிப்பது இழிவு தான் என்றாலும் என் மனைவிக்காகவும், என் மகளுக்காகவும், என் மகனுக்காகவும் அந்த சைக்கிள்களுக்காகவும், மாலைக்காகவும் செய்ய நினைக்கிறேன். முடியவில்லை. அழுகிறேன். கதறுகிறேன். ஆனால், வெளியே சத்தம் வரவில்லை. என் உடலும் அசையவேயில்லை. பலவீனம் என் உடலை இயங்கச் செய்யவிடவில்லை.

அந்த நான்கு பேரும் என்னை இழுத்துக் கொண்டு என்னைப் பொறுக்கிய இடத்தில் போட்டு விட்டு வந்தார்கள். இப்போதும் அந்தச் சூரியக் கதிர் என் முகத்தில் படுகிறது. ஆனால், சுடவில்லை. என் கதை முடியப்போகிறது என்பதை உணர்கிறேன். என்னை நோக்கி ராஜபக்சவும் சேவபக்சவும் ஆளுக்கொரு துப்பாக்கியுடன் வருவதைக் காணகிறேன். என்னைச் சுட்டுக் கொல்லப் போகிறார்கள் என்பதை உணர்கிறேன். ஒரு வேளை இருவருக்கும் ஒரு மகனும், மகளும் இருக்கலாம். சைக்கிளும், மாலையும் வாங்கித் தருவதாக வாக்களித்தும் இருக்கலாம். என் கதையை முடிக்கப் போவதால் அவர்களின் சந்துகளில் ஏறப் போகிற 'தறு'க்கள், அவர்களுக்கு பதவியுயர்வுகளையும், மாற்றல்களையும் கொடுத்து நகரப் பகுதிக்கோ அல்லது தலைநகர்ப்பகுதிக்கோ அல்லது பயங்கரவாதப் பிரச்சினைகள் குறைந்த பகுதிக்கோ அனுப்பி வைக்கும். எனது மகளினதும், எனது மகனினதும் வாழ்க்கை-யையும், சைக்கிளையும், மாலையையும் அழித்து அவர்களின் மகளுக்கும், மகனுக்கும், சைக்கிளும், மாலையும் கொடுக்கப்போகிறார்கள். ஒன்று 'பட்டால்' உண்டு வாழ்வு என்பது இதுதானாக்கும். சாம்பல் மேட்டில் கட்டிடம் கட்டி அவர்களது மக்களுக்குக் கொடுக்கப் போகிறார்களாக்கும்.

இப்போது இருவரும் என்னை நெருங்கி விட்டார்கள். முதலில் சேவபக்ச துப்பாக்கியை நீட்டி என் வயிற்றிலே சுடுகிறான். ஏதோ திரவமாக மெல்ல மெல்ல உடலிலிருந்து கசிவதை உணர்கிறேன். அதைப்பார்க்கக்கூட எனக்குத் திராணி இல்லை. இப்போது ராஜபக்சவின் முறை. எனது நெஞ்சிலே மூன்று முறை சுடுகிறான். இப்போது என் நெஞ்சிலிருந்தும் திரவம் கசிந்து கொண்டிருக்கின்றது. நான். சாகப் போகிறேன் போல. வேறெங்கோ தேடுதலில் கிடைத்த அல்லது பதிவேட்டில் பதியப்படாத உருண்டையான குண்டோ அல்லது நீளமான துப்பாக்கியோ அதிசயமாய் தான் தோன்றியாய் எனதருகில் உதிக்க தலைநகருக்கு செய்தி பறக்கும். உடனே ஆராய்ந்து பார்க்காது போட்டி போட்டுக் கொண்டு நாளை காலை குளக்கரை, தின வார வீர ஏடுகள் 'கடற்கரும் ...என்று தொடங்கி இந்த நாட்டில் இல்லாத அந்த வீரமான மிருகம் - பலி' எனக் கொட்டை எழுத்துக்களில் போடும். இப்போது எனது வலது கண்ணில் எனது மனைவியும், என் இரண்டாம் வகுப்பு படிக்கும் என் ஆறுமாத மகனும், என் இடது கண்ணில் மகளுக்கு வாங்கித் தருவதாக வாக்களித்த சைக்கிளும், ஒக்சிசன் சிலிண்டர் வாங்குவதற்காக ஈடுவைத்த மகளின் மாலையும் கடலின் நீலமும் ராஜபக்சவினதும் சேவபக்சவினதும் சந்துகளை அலங்கரிக்கப் போகின்ற அந்த பச்சையும் நீலமும் கலந்த தறுக்கள் மாதிரி மின்னி மின்னித் தெரிகின்ற போது என் காலிலிருந்து உயிர் நெஞ்சுக்கூடாக தொண்டைக்குள் வந்து எனது இறுதி மூச்சோடு கலந்து இரு கண்களுக்கூடாகவும் வெளியேறத் தயாராகி நின்றது.

**– அம்ரிதா ஏயெம**

---

எனது தம்பியின் வயதொத்தவர்கள்.

புரொளொளிர்வைத் தாண்டி
இரவின் இருட்கறுப்புள் புதைந்து வானில் நின்றும்
மீள்கிறது மென்பந்து.

வாகனங்களை விலத்தியோடி
தெருவின் ஊடு பாய்ந்து பிடியெடுக்க ஓடுகிறான் பிள்ளை.
பிடி தவற
மிகும் ஆவேசத்தில் பந்தை எறிந்து வீச, எகிறிக்
குதித்துக் குதித்துப் பின் நிலத்தோடே தவழ்ந்து உருள்கிறது
பந்து.

நாங்கள் இரவு உணவு கொள்ள
நகரின் தெருக்களில் நடக்கிறோம்.

தூரம்

சிறார்களின் சீழ்க்கையொலியைத் தணிக்கிறது.
கரவொலி தேய்ந்து எப்போ காற்றில் வெளி சூழ்ந்ததோ□
பிறகு,
சிங்களப் பாடல்,
கொத்துரொட்டிக் கல்லின் ஒவ்வாமைமிக்க ஓசை.

நாங்கள்
சேய்மையை அண்மிக்கிறோம்.

அடைத்துப் போயுள்ள உணவு வழி இப்போதைக்குத்
திறபடாது என்பது தெளிவாகத் தெரிகிறது.
நிறைய நீர்குடிக்கிறோம்.
குடல்களின் ஊடு நீர் இறங்குவதை
இடையில் ஒரு கணம் உணர்கிறோம்.
கடமைக்காகப் பீங்கானை அழைந்துவிட்டு,
திரும்ப நடக்கிறோம்,
கடுமையாகப் பசிக்கிறதா- தெரியவில்லை.

இப்போது,
சிங்களப்பாடல், ரொட்டிக் கல்லில் கொத்தும் சத்தம் தேய
வெளியை
கரவொலி சூழ்கிறது.
சீழ்க்கை எழும்புகிறது.

இவர்களுக்கும் என் தம்பியின் வயதுதானிருக்கும்

நாங்கள் வார்த்தைகளை இழந்திருந்தோம்.
மூச்சுப் பேச்சற்று நடக்கிறோம்...
ஊரிலிருந்து கடைசியாய் கிடைத்த
தொலைபேசிச் செய்தி தொடர்பாய் யாரும் பேச
விழைந்திலோம்.

'ஊர்ல கடும் தொவுக்கு வெடிலாம்'

புரொளொளிர்வைத் தாண்டி
இரவின் இருட்கறுப்புள் புதைந்து வானில் நின்றும்
மீள்கிறது மென்பந்து,
வாகனங்களை விலத்தியோடி
தெருவின் ஊடு பாய்ந்து பிடியெடுக்க ஓடுகிறான் பிள்ளை.
இந்தத் தடவை பிடி எடுத்தும் விடுகிறான்.

கரவோசம், சீழ்க்கையொலி,
வெற்றி களிக்கும் தழுவல்கள், கைலாகு
ஆளை ஆள் தூக்கியபடி ஆட்டம்,
அவர்களின் உலகை வெற்றி கொண்ட கூப்பாடு....

ஊரில்
எனது தம்பிக்கும் இவர்களது வயது தான் இருக்கும்

**றஷ்மி**

19991107இரவு 10.45மணி

நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கை முஸ்லிம்களின் பிரத்தியேகச் சட்டமும் பெண்களின் உரிமை பற்றிய கருத்தாடலும்

சுல்பிகா ஆதம்

இலங்கையில் முஸ்லிம்களின் தனிநபர் சட்டம் பற்றி நான் கலந்துரையாடுவதற்கு முன்னர் நான் "முஸ்லிம் சட்டம்" பற்றி விளக்குவது முக்கியமாகும். இதையே நான் இக்கட்டுரையில் "இஸ்லாமிய சட்டம்" என்பதற்குப் பதிலாக பாவிக்கிறேன்.

எனது கட்டுரையில் "முஸ்லிம் சட்டம்" என்பதை இஸ்லாம் சமயத்தைப் பின்பற்றும் மக்கள் கூட்டத்தினாரால் உண்டாக்கப்பட்ட எல்லாவிதமான சட்டங்களையும் உள்ளடக்கும் விதத்திலேயே பாவிக்கின்றேன். ஆகவே இச்சட்டங்களானவை இக்குறிப்பிட்ட சமூகத்தின் மதக்கருத்துக்கள், கலாசாரம், வழமை, மரபு செயற்பாடுகள் ஆகியவற்றின் சில அம்சங்களைக் கொண்டவையாகவும் அச்சமூகத்தின் ஆதிக்க சக்திகளால் ஒரு குறிப்பிட்ட காலம்வரை ஏற்றுக்கொள்ளப்பட்டவையாகவும் உள்ளன.

இன்னொரு புறமாகப் பார்த்தால் என்னைப் பொறுத்தவரை "இஸ்லாமிய சட்டம்" என்ற பதம் திருக்குரானில் கூறப்பட்டுள்ள அல்லாஹ்வின் கட்டளைகளை மாத்திரமே குறிப்பதாகவே படும். 'இஸ்லாமியச் சட்டம்' என்ற பதம் திருக்குரானின் சட்டத்தின் இன்னொரு பெயராகவே கருதப்படும். ஆகவே எனது வலுவான நம்பிக்கை என்னவெனில், முஸ்லிம் உலகில், 'இஸ்லாமிய சட்டம்' என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்படும் எல்லாச் சட்டங்களும், 'இஸ்லாமிய சட்டங்கள் என்று அழைப்பதற்குப்பதில் 'முஸ்லிம் சட்டங்கள்' என்றே அழைக்கப்பட வேண்டும் என்பதே.

இலங்கையில் குடும்ப உறவை இரண்டு விதமான சட்டமுறைகள் ஆளுகின்றன. முதலாவது எல்லா நபர்களுக்கும், உரிய பொதுவான சட்டம். இதில் தத்தமது சமூக, சமய வழமைக்குரிய பிரத்தியேகச் சட்டங்களால் ஆளப்படுவோரைத் தவிர்ந்த ஏனேயோர் அடங்குவர். இலங்கையில் மூன்று விதமான பிரத்தியேகச் சட்டங்கள் உள்ளன. இதில் முஸ்லிம்களின் பிரத்தியேகச் சட்டம். அல்லது முஸ்லிம்களின் திருமண - திருமணவிலக்கு சட்டவாக்கம் (1956) என்பது இஸ்லாத்தை தமது மதமாகப் பின்பற்றுவோருக்கு மட்டுமே உரியதாகும்.

முஸ்லிம்களின் பிரத்தியேகச் சட்டம் அல்லது திருமண திருமண விலக்கு சட்டம் குடும்ப உறவு சம்பந்தப்பட்ட பின்வரும் பிரச்சினைகளை தன் பார்வைக்கு படுத்துகிறது.

*1. திருமணம்*

அ. திருமணத்தின்போது இருக்கும் வயது.

ஆ. பாதுகாவலர் / பாதுகாப்பு

இ. பாதுகாவலரின் அனுமதி.

ஈ. திருமண சம்பந்தமாக தவிர்க்கப்பட்ட விஷயங்கள்.

1. எண்ணிக்கை
2. வயது
3. தடைசெய்யப்பட்ட தரங்கள்
4. மற்றவை.

உ. திருமணப்பதிவு.

ஊ. திருமண அறிவிப்பு (நொத்தீஸ்)

எ. பதிவுசெய்யப்பட்ட பத்திரத்தில் கையெழுத்திடுவோரும் அதன் உள்ளடக்கமும்.

*2. திருமண விலக்கல்*

அ. திருமண விலக்கலுக்கான காரணங்கள்

ஆ. திருமண விலக்கலின் வகைகள்

இ. திருமண விலக்கலுக்கான மேற்கொள்ளும் முறை


ஈ. திருமண விலக்கலின் தீர்வும் திருமணத்தை இல்லாமல் செய்தலும்.

*3. பராமரிப்பு*

அ. மனைவிக்குரிய பராமரிப்பு தொகை

ஆ. பிள்ளைகளுக்குரிய பராமரிப்பு

இ. திருமண விலக்கலுக்கான பராமரிப்பு



ஈ. பிள்ளைகளைப் பாதுகாத்தலும் பாதுகாப்பும்

*4. மரபுரிமைப்பேறு*

அ. உரிமைப் பேற்றுக்கான வழிவகை

ஆ. உரிமைபேறாக வரும் சொத்தில் ஆண்/பெண் ஆகியோாரின் பங்கு.

இந்த அட்டவணையிலிருந்து முஸ்லிம் திருமண - திருமண விலக்குபற்றிய சரத்துகள் எவ்வாறு மேற்காணும் விஷயங்களோடு சம்பந்தமுற்று இருக்கின்றன என்பதோடு பொதுச்சட்டத்தில் உள்ளவற்றோடும் இது ஒப்பிட்டுப் பார்க்க உதவுவதாய் உள்ளது.

அட்டவணை பொதுச்சட்டத்தோடும் முஸ்லிம் திருமண/ திருமண விலக்கல் சட்டவாக்கத்தோடு தொடர்புடைய சட்டங்களின் சுருக்கம்.

*முஸ்லீம் திருமண; திருமண விலக்கல் சரத்துக்கள் மீதான கருத்தாடல்*

*திருமணம்*

இலங்கயில் ஒருவர் பெரும்பான்மை Major ஆகும், வயதுச்சட்டப்படி பதினெட்டு வயது, எல்லாப்பிரஜைகளுக்கும், இப்பெரும்பான்மையை வழங்குகிறது. எவ்வாறாயினும், முஸ்லிம் சட்டமானது இன்னும் இரண்டு பெரும்பான்மைக்கான வயதெல்லைகளை விவாகத்திற்குரியதாகத் தருகிறது. ஒன்று பூப்படையும் வயது. அடுத்தது எதையும் தான் தீர்வுக்கெடுக்கும் பக்குவம் தரும் வயது.

பொதுச்சட்ம் போலல்லாது முஸ்லிம் சட்டத்தில் திருமணம் ஒரு சிறுபான்மை வயதுடையவருக்கு பெரும்பான்மை வயதை தருவதில்லை. இச்சட்டம் பெண்ணுக்கு திருமணத்திற்குரிய ஆகக்குறைந்த வயதெல்லையாக பன்னிரண்டாவது வயதைக் குறிக்கிறது. இன்னும் குவாஸி (Quazi) சட்டத்தின் அனுமதியோடு 12வயதிற்குட்பட்ட ஒரு பெண்பிள்ளையும் திருமத்திற்குத் தகுதி பெறுகிறாள், இது பால்ய வயதுத் திருமணம் சம்பந்தமான பல்வகைக் கருத்தாடல்களுக்கு அடிகோலியுள்ளது. இத்தகைய முஸ்லிம் பால்யத் திருமணங்கள் பற்றிய நிகழ்வுகள் இலங்கையில் குறைவாகவே இருந்த போதும், இச்சட்டத்தின் மறைப்பில் இதைச் துஷ்பிரயோகம் செய்வோர்களுக்கு இச்சரத்து அனுமதி வழங்குகிறது.

இச்சரத்துக்குச் சார்பாக முன்வைக்கும் கருத்துக்கள் நம்பகமானவையல்ல. காரணம் திருக்குரானின் கூற்றுப்படி "திருமணத்திற்கு உகந்த பக்குவமான வயதை" அது குறிக்கிறதேயொழிய ஒரு குறிப்பிட்ட வயதை அது குறிக்கவில்லை. திருமணத்திற்கான பக்குவத்தை உடல்ரீதியான, மனரீதியன, சமூக ரீதியான பக்குவங்கள் என்று வியாக்கியானப்படுத்தி குடும்பம் என்னும் ஸ்தாபனத்தில் இருக்கும் பொறுப்புகளை கையாளும் தன்மை பற்றி பேசலாம்.

*அனுமதி:*

முஸ்லிம் பிரத்தியேகச் சட்டப்படி ஒரு முஸ்லிம் பெண்ணானவள் திருமணத்திற்கு முன்னர் தனது பாதுகாலரின் அனுமதியைப் பெற வேண்டும். இங்கே பெரும்பான்மை அடைதல் என்னும் கருத்து பொருந்தாதகிறது. பாதுகாவலரின் அனுமதியின்றி திருமணம் செல்லுபடியற்றதாகவும் சட்டத்திற்கு முரணானதாகவுமாகிறது. மேலும் இதற்குப் பொறுப்பாக எந்த வயதுடைய ஆணொருவரையும் பாதுகாவலராக நியமிக்கலாம். அதனால் திருமணமாக எந்த வயதுடைய முஸ்லிம் பெண்ணும் அவருடைய பாதுகாவலருக்கு கீழ்பட்டவராகவே கருதப்படுகிறார். அதாவது அப்பாதுகாவலர் ஆணாக இருக்கின்ற ஒரே காரணத்தால் மணப்பெண்ணிலும் பார்க்க வயது குறைந்திருந்தாலும் மணப்பெண்ணின் சமூக, பொருளாதார அந்தஸ்தில் தங்கியிருந்தாலும் அவர் பாதுகாவலர் அந்தஸ்தைப்பெறுகிறார். முஸ்லிம் பெண்களில் ஷர்ப்பி (Shafie) பிரிவினரைப் பின்பற்றுவோர் திருமண, சமூக விஷயங்களில் எந்த வயதுக்குரியோராக இருந்தாலும், பாதுகாவலரின் அனுமதியைப் பெற வேண்டும். ஆனால், ஹனஃபி (Hanafi) பிரிவைச் சேர்ந்த திருமணமாகாத பெண்ணும் சரி, திருமணமான பெண்ணுஞ் சரி இத்தகைய கட்டுப்பாடுகளுக்கு கீழ்ப்படியத் தேவையில்லை. ஆனால், துரதிஷ்டவசமாக முஸ்லிம் சட்டவாக்கம் எந்தப் பிரிவினருக்கு பாதுகாவலரின் அனுமதி தேவை என்பதைக் கூறவில்லை.

*பலதார மணம் பற்றிய நிலவரம்*

ஆணொருவனுக்கு ஏக காலத்தில் நான்கு மனைவியரைக் கொண்டிருக்க சட்டம் அனுமதிக்கிறது. ஐந்தாவது கலியாணத்தை மேற்கொள்வது ஒழுங்கற்றதாகக் கணிக்கப்பட்ட போதும், அதை இல்லாமல் செய்வதாகாது. இதற்குரிய ஒரே கட்டுப்பாடு என்னவெனில், ஆணொருவன் மீண்டும் திருமணம் செய்ய விரும்பினால் அது பற்றி அவனது மனைவிமார் வாழும் காதி (Quazi) கோட்டில் அறிவித்தல் செய்ய வேண்டும். அத்தோடு இத்திருமணத்திற்கு தற்போது இருக்கும் மனைவியர் அனுமதி வழங்க வேண்டும். இது வாய் மூலமாகவும் இருக்கலாம். ஆனால், இத்தகைய திருமணத்தின்போது தற்போதுள்ள மனைவியரின் அனுமதியை கணவன் பெறாத பட்சத்திலும் அவனது இத்திருமணத்தைச் செல்லுபடியற்றதாக்க சட்டத்தில் இடமில்லை. ஆகவே நடைமுறையில் மனைவியரின் அனுமதி பெறல் என்பதும் காதி கோட்டில் அறிவுறுத்தல் செய்ய வேண்டும் என்பதும் முக்கியமற்றவையாக இருப்பதோடு இவை செய்யத்தவறும் பட்சத்தில் இதற்கான தண்டனை எதுவும் கொடுபடுவதில்லை. ஆனால், திருக்குரானின் சட்டப்படி, ஆணொருவன் இது சம்பந்தமாக மிக நியாயமாகவும், நேர்மையாகவும் நடந்து கொள்ளும் தனது தகுதியை நிரூபிக்க வேண்டும். ஆனால், இலங்கையிலுள்ள முஸ்லிம் சட்டம் இது பற்றி மௌனமே சாதிக்கிறது.

*மனைவியரின் அனுமதி*

சட்டவாக்கம் திருமண வைபவத்திற்கு முன்னரே மனைவியரின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்று சொல்கிறது. ஆனால், முஸ்லிம் திருமண/ திருமண விலக்கல் சட்டத்தின்படி பதிவு செய்யும் திருமணங்களில் மனைவியின் அனுமதியை உறுதிப்படுத்தும் கையெழுத்து அவசியமானதாக இல்லை. துரதிருஷ்டவசமாக மனைவியரின் அனுமதியைக் கையெழுத்தை முக்கியமற்றதாகவும் ஆணொருவனின் கையெழுத்தே முக்கியமானதாகவும் சட்டவாக்கம் கருதுகிறது.

*திருமண விலக்கல்*

மேலோட்டமாகப் பார்க்கும்போது முஸ்லிம் பெண்ணொருவள் திருமண விலக்கல் மேற்கொள்வதற்கு வாய்ப்புடையவளாகவே தெரிகிறாள். ஆனால், நடைமுறையில் திருமண விலக்கலை மேற்கொள்ள முயற்சிக்கும் முஸ்லிம் பெண் பலவித இடையூறுக்குள்ளாகிறாள். திருமண விலக்கலுக்குத் தேவையான தவறான (கணவனின்) விஷயங்களை அவள் நிரூபிக்க வேண்டும். ஆனால், அதேவேளை ஒரு முஸ்லிம் ஆண் திருமண விலக்கலுக்காக இத்தகைய காரணங்கள் எதனையும் காட்டத் தேவயில்லை. மேலும் ஒரு முஸ்லிம் பெண் தான் கொணரும் குற்றச்சாட்டுகளை நிருப்பிப்பதற்கு தனியான சாட்சிகள் இருவரைக் கொண்டு வரவேண்டும். ஆனால், கணவன் இக்குற்றச்சாட்டுகளுக்கு எதிராகத் தான் தாக்கல் செய்ய விரும்பினால் எந்த வித சாட்சிகளையும் கொண்டு வரத்தேவையில்லை. அவனது தீர்மானம்

நன்றி - நூலகத்திட்டம்



ஒற்றைத் தன்மையானது அதே-வேளை கணவனானவன் திருமண விலக்கலை மேற்கொள்ளும்போது மனைவிக்கு இதை மறுதலித்து தாக்கல் செய்ய மாற்றுப்பரிகாரமும் இல்லை.

### பராமரிப்பு

ஏனைய சட்டவாக்கலில் இருப்பது போல, காதி நீதி மன்றம் மனைவிமார், பிள்ளைகள் ஆகியோர் பராமரிக்கப்பட வேண்-டியது பற்றியோ அவர்களுக்கான



சொத்துக்களின் பாகப்பிரிவு பற்றியோ சொல்ல வேண்டும் என்பது பற்றி முஸ்லிம் திருமண/திருமண விலக்கல் சட்டவாக்கம் எதுவும் கூறவில்லை. ஆகவே முஸ்லிம் பெண்கள் காதி நீதிமன்றத்தின் கருணையிலும், விருப்பத்திலும் இவற்றுக்கான நிவாரணத்தைத் தேட வேண்டி-யுள்ளது. காதி நீதிமன்றம் இவை பற்றிப் பேசாதுவிடும் பட்சத்தில் பெண்கள் இதற்கெதிராக மேன்-முறையீடு செய்யலாம். எனினும் இது பெரும் நீண்ட இழுத்-தடிப்புக்கும் சிக்கலுக்குமுரியதாக இருப்பதால் அவர்கள் இம்முயற்-சியைக் கைவிடுகின்றனர்.

முஸ்லிம் திருமண/திருமண விலக்கல் சட்டவாக்கப்படி, ஒரு முஸ்லிம் பெண் கணவனால் திருமண விலக்கல் பதிவு செய்வதற்கு முன் தான் கணவனோடு வாழாத காலத்துக்கான பராமரிப்பு தொகையைக் கோர உரிமையுடைய-வளாகிறார். அத்தோடு திருமண விலக்கலுக்குப்பின் பிறந்த குழந்தைக்கான செலவு இன்னும் 'இடா' என்னும் கர்ப்பம் உற்றிருக்கும் பட்சத்தில் குழந்தை பிறக்கும் வரையுமான காலத்திற்குரிய செலவையும் கோரலாம். இச்சட்டவாக்கம் திருமண விலக்கல் செய்யப்பட்ட பெண்ணுக்கு பராமரிப்பு பணம் கட்ட வேண்டும் என்று கூறாவிட்டாலும், மணப்-பெண்ணுக்கு மணமகனுக்கு கொடுபட வேண்டிய 'மஹர்' என்னும் அன்பளிப்பை மீளப் பெறுவதற்கான சரத்தைக் கொண்-டுள்ளது. 'மஹர்' என்பது பற்றிய வரைவு சட்டவாக்கத்தில் குறிப்-பிடப்படவில்லை. நடைமுறையில் மணப்பெண்ணுக்கு மணமகன் கொடுக்கும் அன்பளிப்பையே இது குறிக்கிறது. திருக்குரான் சட்டப்படி திருமணத்திற்கு முன்னர் மணப்-பெண்ணால் மணமகளிடமிருந்து கோரப்பட்டு மணமகனால் திரு-மணத்தை முன்னிட்டு ஒப்புக்-கொள்ளப்பட்ட சொத்துக்களும், சேவையுமே 'மஹர்' என்பதாகும். நடைமுறையில் 'மஹர்' என்பது மணமகளால் தீர்மானிக்கப்-படுவதாகும். ஆனால், உண்மையில் அது ஒருவரைப் பராமரிக்க போதுமானதல்ல.

### முடிவுரை

ஒருவர் முஸ்லிம் பிரத்தியேக சட்டம் அல்லது முஸ்லிம் திருமண/திருமண விலக்கல் சட்டம் என்னும் சட்டவாக்கத்தை ஆய்வுக்கெடுக்கையில் பெண்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் மூன்றுவிதமான தீங்கான போக்கைக் காணலாம்.

1. பெண்கள் பிரச்சினையை கையாளுவதற்குரிய நியாய-மான சரத்துக்கள் எதுவும் அதில் இல்லை.
2. சில சரத்துக்கள் இவை பற்றிக் கூறிய போதும் அவற்றில் தெளிவில்லை. மேலும் அவற்றை கட்டாயம் படுத்தும் நடைமுறையோ ஒழுங்கானநடைமுறையோ இல்லை.
3. சில சரத்துக்கள் பூரணமாகவே பெண்களுக்குப் பாரபட்ச-மானவையாக உள்ளன. இவை திருக்குரானின் சட்டத்துக்கு முரணானதாகவும் உள்ளன.

ஏனைய முஸ்லிம் நாடுகளின் அனுபவ ஒளியிலிருந்து ம் சட்டவாக்க சரத்துக்களி-லிருந்தும் பார்க்கும் போது, அங்கே திரக்குரானின் சட்டத்திற்கு அமைய பெண்கள் விடயத்தில் நியாயம் வழங்குவதற்கான பல்வேறு சட்டக்கூறுகள் உள்ளன.

பெண்களுக்கு நியாயம் வழங்-குவதற்கு உடனடியாகப் பின்வருவன பற்றிக் கவனம் எடுக்க வேண்டும்.

1. திருமணத்திற்கான வயது மாறற்றம்.
2. திருமண விலக்கலுக்கு நியாயமான ஆதாரங்களும் அவற்றுக்கான சாட்சிகள்கொணரலும்.
3. பெண்கள் காதி நீதிமன்றம் நியமித்தல். (Female Quazis)
4. பலதார மணத்தைக் கட்டுப்படுத்துதல்.
5. பராமரிப்புத் தொகையை கண்டிப்பாக நடைமுறைப்-படுத்துவதற்கான மேலும் பல சரத்துக்களைச் சேர்த்தல் .
6. மணப்பெண்ணுக்குச் சேர வேண்டிய மஹர் அன்பளிப்புப் பற்றிய வரைவை விரிவு படுத்துவதோடு அதைச் செலுத்துவதற்காகக் கட்டாயப்-படுத்துதல்.
7. மணப்பெண்ணின் எழுத்து மூலமான அனுமதி ஒப்புதல்.
8. தக்ககாரணம் இன்றி திருமண விலக்கல் செய்யப்படும் பெண்ணுக்கு நஷ்டஈடு கணவனால் கொடுக்கப்பட வேண்டும்.

# பொதுவான சட்டத்திற்கும் முஸ்லிம் சட்டத்திற்கும் இடையே உள்ள இடைவெளிகள்

| விபரிப்பு | பொது | முஸ்லிம் |
|---|---|---|
| திருமணம்<br>1. திருமணத்தின் போது வயது | ஆண்: 18<br>பெண்: 18<br>பறங்கியர் ஐரோப்பியர் வழிவந்தவரான பெண் 14 | ஆண்: வயதெல்லை வரைவுபடுத்தப்படவில்லை.<br>பெண்: பூப்படைதல். பன்னிரண்டு வயதுக்குக் கீழ்ப்பட்டால் காதி நீதிமன்ற அனுமதி தேவை. |
| 2. பாதுகாவலரின் அனுமதி: | இரண்டு பகுதியினரும் 21 வயதுடையவராதல் வேண்டும். ஒரு பகுதியினர் 21 வயதுக்குக் குறைந்தால் பாதுகாவலரின் அனுமதி தேவை. | ஆணுக்கு அனுமதி தேவையில்லை. பெண்ணுக்கு எல்லா வயதிலும் அனுமதி தேவை. காதி நீதிமன்றம் தேவையின் நிமித்தம் இல்லாமல் செய்யலாம். வேறு பிரிவைச் சேர்ந்தவராக பெண் இருக்கும் பட்சத்திலும் இது நடைபெறலாம். |
| 3. பாதுகாவலர் | தந்தை (தாயில்லாத போது) இருவரும் இல்லாத போது நீதிமன்றம் | சட்டத்தில் குறிக்கப்படவில்லை. நீதிமன்றம் மேலான பாதுகாவலராக இருக்கும். |
| தடை<br>1. எண்ணிக்கை | ஒரு முறை விவாகம் மாத்திரமே. | ஆண் ஒன்றுக்கு மேற்பட்ட விவாகம் ஒரே முறையில். தானும் மனைவியும் எங்கு வசிக்கிறார்கள் என்னும் விபரம் தரத்தேவையில்லை. |
| 2. தரத் தகுதி | அ. இரு பகுதியினரும் ஒரே பகுதியினரின் நேரடி வாரிசு | |
| | ஆ. உடன் பிறப்பு சகோதர சகோதரிகள் அல்லது ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகளின் வாரிசு. | |
| | இ. முதல் திருமணத்தின் மூலம் வந்த முதல் தாரத்தின் பிள்ளை. | |
| | ஈ. பாட்டனார் மூலம் வளர்க்கப்பட்ட கைம்பெண்ணின் பிள்ளை, அல்லது பேரப்பிள்ளை | |
| | உ. பெற்றாரின் உடன் பிறப்பு சகோதர சகோதரிகள் ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகள். | |
| | ஊ. தாரத்தின் பெற்றார், பாட்டனார். | |
| | எ. மனைவியின் சகோதரி. | |
| | ஏ. பெண்கள் அனேக தாயாராக பாட்டிகளாக | |
| 3. வயது | சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட திருமண வயது. | பொருத்தமற்றது. |
| 4. ஏனையவை | | 'இடா' காத்திருக்கும் காலம். கைம்பெண் - 4 மாதமும் 10 நாட்களும் விவாகரத்து செய்யப்பட்ட பெண் 3 மாதங்கள் 'இடா' பதிவு செய்தல் தவிர்க்கப்பட்டதாகும். |
| 5. பதிவு செய்தல் | பதிவு கட்டாயம் | இங்கும் அவ்வாறே. வெவ்வேறு பிரிவினருக்கிடையே இடம் பெறும் 'நிக்கா' விவாகம் பற்றி இதில் பேசப்படவில்லை. |
| 6. பதிவாளர்கள் | இதற்கென பிரத்தியேகமாக நியமிக்கப்பட்ட பதிவாளர். | பிரத்தியேக ஆண் முஸ்லிம் பதிவாளர் |
| 7. அறிவித்தல் (நொத்தீஸ்) | மாவட்டப் பதிவாளருக்கு திருமணத்திற்கு குறைந்தது 10 நாட்களுக்கு முன்னர் | இவ்வாறே இங்கும் பதிவாளருக்கு 'நிக்கா' வைபவத்திற்கு முன்னர் அறிவிக்க வேண்டும். |
| 8. பதிவுக்கான கையொப்பம் | திருமணத்திற்கு சமூகமளித்திருக்கும் இரு பகுதியினரும் இரு சாட்சிகளும் கையெழுத்திடல் | மணமகன், மணப்பெண்ணின் பாதுகாவலர், நிக்கா வைபவத்தை நடத்துபவர், இரண்டு சாட்சிகளோடு பதிவாளரும் கையொப்பமிடல் |
| திருமண விலக்கல் | | கணவனுக்கு எதிராக |
| திருமண விலக்கலுக்கான ஆதாரம் | 1. திருமணத்திற்கு பின்னர் வேறொருவருடன் உறவு | 1. கொடுமையாக நடத்தப்படல் |
| | 2.தீய நோக்கோடு கைவிடப்படல் | 2. எந்தப் பிரிவுக்கு உரியவரோ அப்பிரிவின் விதிப்படி நடத்தை தவறாகக் கருதப்பட்டால் |
| | 3. திருமணத்தின் போது குணப்படுத்த முடியாத பாலியற் பலவீனம் | 3. அவரது பிரிவின் விதிகளின் படி வேறு ஆதாரங்கள் |
| | 4. சட்டரீதியாக 7 வருடங்களுக்கு மேலாக பிரிந்திருத்தல் | மனைவிக்கு எதிராக:- எந்த வித ஆதாரமும் தேவையில்லை. |
| நடவடிக்கை முறை | மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் எதிராளிக்கு அறிவிக்கப்பட வேண்டும். | காதி கோட்டுக்கு முறையீடு |
| | இரு விதமான வழக்கு விசாரணை:<br>சுமாரான/ தீர்க்கமான<br>கட்டளையின் வகை: சம்பந்தப்பட்டவரை காவலில் வைத்தல், பணம், அறவிடல், சொத்தைப் பங்கிடல் | பெண்கள்: எதிராளிக்கு அறிவித்தல் காதி நீதிமன்றத்தினரும், முஸ்லிம் தகமையுடையோரும் இணக்கப்படுத்த முயலுதல்<br>பெண்: தனது ஆதாரத்தை நிரூபிக்க இரண்டு சாட்சிகளைக் கொண்டிருக்க வேண்டும்.<br>ஆண்: தனது மனைவி வசிக்குமிடத்திலுள்ள காதி நீதிமன்றத்திற்கு அறிவிக்க வேண்டும். ஆணின் முறையீட்டுக்கு எதிராக வாதிடுதல் இல்லை. ஏற்கெனவே பதியப்பட்ட திருமண விலக்குகள், பிழை திருத்தங்கள் அனுமதிக்கப்பட்டவை. |
| தாரத்தை பராமரித்தல் | பராமரித்தலுக்கான கட்டளை | |
| | மனைவி தன்னைத் தானே பராமரிக்கும் வசதியிருந்தாலும், நீதிமன்றச் சட்டப்படி மனைவிக்கான பராமரிப்பை கணவன் செய்ய வேண்டும். துர்நடத்தையில் ஈடுபட்டும், கணவனிடமிருந்து விலகியிருக்கும் மனைவி, சரியான காரணங்களின்றி பராமரிப்பை கோர முடியாது. விவாகரத்து விதிகள் கணவனின் மனைவிக்கான கடப்பாட்டை முடிவுக்கு கொண்டு வருகிறது. நிரந்தரப் பராமரிப்புகோரப்படும் பட்சத்தில் அதற்கென தனியான விவாகரத்தின் இன்னொரு பகுதியாக கட்டளை பெறப்பட வேண்டும். கணவன் மனைவி இருசாரரும் நிரந்தர பராமரிப்பை பெறலாம். தனக்கென தனியான வருமானம் உள்ள மனைவி கணவனுக்கு இயலாத நிலையில் பராமரிப்பை செய்ய வேண்டிய கடப்பாடு உடையவளாகிறாள். | பதிவாளர் திருமண விலக்கலுக்குப் பின்னர் செலுத்த வேண்டிய பணத்தை கட்டும்படி கட்டளை இடுதல். மனைவிக்கு மட்டுமே இந்தக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். நஷ்ட ஈடு இரு பகுதியினருக்கும் பொது.<br>காதி நீதிமன்றத்திற்கு மனைவி தாக்கல் செய்யலாம். மனைவி, தான் கணவனோடு வாழாத காலம் அவ்வளவு காலத்திற்கும் பராமரிப்புக் கோரத் தகுதியுடையவள்.<br>திருமண விலக்கல் செய்யப்பட்ட பெண் பின் வருவனவற்றைக் கோரலாம்:<br>'இடா'க்காலம் கர்ப்பம் தரித்திருக்கும் காலத்திலிருந்து குழந்தை பிறக்கும் காலம்வரைக்குமான பராமரிப்பைக் கோரலாம்.<br>திருமண விலக்கல் செய்யப்பட்ட பெண்ணுக்கு பராமரிப்பு என்பது இல்லை. ஆனால், அவளுக்குரிய 'மஹர்'ஐ மீளப் பெறலாம். |
| | | 1. திருமண விலக்கலுக்குப் பின் குழந்தை பிறந்தால் அதற்கேற்பட்ட செலவுகளைக் கோரலாம். |
| | நிரந்தர பராமரிப்பு கோரப்படும் பட்சத்தில் அதற்கென தனியான விவாகரத்தின் இன்னொரு பகுதியாக கட்டளைபெறப்பட வேண்டும்.<br>கணவன் மனைவி இருசாரருமே நிரந்தர பராமரிப்பை பெறலாம்.<br>தனக்கென தனியான வருமானம் உள்ள மனைவி கணவனுக்கு இயலாத நிலையில் பராமரிப்பை செய்ய வேண்டிய கடப்பாடு உடையவளாகிறாள். | 'இடா'க்காலம் கர்ப்பம் தரித்திருக்கும் காலத்திலிருந்து குழந்தை பிறக்கும் காலம் வரைக்குமான பராமரிப்பைக் கோரலாம்.<br>திருமண விலக்கல் செய்யப்பட்ட பெண்ணுக்கு பராமரிப்பு என்பது இல்லை. ஆனால், அவளுக்குரிய 'மாஹர்'ஐ மீளப் பெறலாம். |
| பிள்ளைகள் பராமரிப்பு | 1. 21 வயது வரை கணவன் பிள்ளைகளைப் பராமரிக்க வேண்டும். அதற்கான வருவாய் அவனுக்கிருக்க வேண்டும். | 1. தனது சட்டரீதியான அல்லாத பிள்ளைகளுக்குரிய பராமரிப்பு கடப்பாடுடையவர். பிள்ளையின் பெற்றார் தாம் அல்ல என்ற பட்சத்தில் பிரச்சினை ஏற்படுகிறது. இது சம்பந்தமாக காதி நீதிமன்றம், விசாரணை மேற்கொள்ளும். |
| | 2. தனிப்பட்ட சொத்து வருமானம் உள்ள திருமணமான பெண் தன் பிள்ளைகளைப் பராமரிக்கிறாள். ஆனால், அதற்காக இது சம்பந்தமான கணவனின் கடப்பாடு புறந்தள்ளப்பட மாட்டாது | 2. பெண்கள் பராமரிப்பு பற்றி குறிக்கப்படவில்லை.<br>தந்தையாரின் பராமரிப்பு பிள்ளைக்கு எந்த வயதில் முடிவுறுகிறது என்பது பற்றிய பிரஸ்தாபம் இல்லை. |
| | 3. பெற்றாரின் திருமண விலக்கல், பிள்ளைகளின் பராமரிப்பை பாதிக்காது. | |
| | 4. தத்தெடுத்து வளர்ப்பவரும், பிள்ளைகள் பராமரிப்பு விஷயத்தில் முறையான பிள்ளைக்குரிய விதத்திலேயே ஒழுக வேண்டும். | |
| சட்டரீதியான பிள்ளைகளின் பாதுகாப்பு | தந்தையே, சட்டரீதியான சிறுபான்மை வயதுடைய குழந்தைகளுக்குரிய இயற்கையான பாதுகாவலர். | முஸ்லிம் பிள்ளைகள் பாதுகாப்பு பற்றிய பிரஸ்தாபம் இல்லை. இது பற்றிய பாரம்பரிய முஸ்லிம் சட்ட வியாக்கியானங்கள் உண்டு. |
| | புறநடை: நீதிமன்றமே மேலான பாதுகாவலராக உள்ளது. பிள்ளையின் பாதுகாப்பை தந்தை தாய்க்கு அளிக்கும் பட்சத்தில் தந்தை இறக்கும் பட்சத்தில் தந்தையின் உறுதியில் கூறப்பட்டுள்ள பெயரை உடையவர் பாதுகாவலராகிறார். தந்தை இல்லாதபோதும் அவரால் யாரும் நியமிக்கப்படாத போதும் தாய் பாதுகாவலராகிறார். | |
| சட்டரீதியற்ற பிள்ளைகளின் பாதுகாப்பு | தாயே சட்டரீதியற்ற பிள்ளைகளின் இயல்பான பாதுகாவலர் | அவ்வாறே இங்கும். |
| விவாகம் ரத்தாகும் போது சொத்துக்கள் பிரிவு | விவாகம் ரத்தாகும் போது ஒவ்வொருவரும் தமக்குரித்தானவற்றைப் பெறுகின்றனர். அண்மைக் காலத்தில் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்புகளில் இருந்து, மனைவி சொத்து தேட்டத்திற்கு உதவியவையும் கணக்கிலெடுக்கப்பட்டுள்ளன. | 1. 'மஹர்' கொடுப்பனவை மனைவி விவாகம் முற்றுப் பெறும்போது தனக்குரியவளாக்கிறாள். சொத்துக்கள் விவாகம் விலக்கப்பட்டு 3 வருடத்திற்குள் பெறப்படவேண்டும். பெண் தனது 'மஹர்'ரை எந்தக் காலத்திலும் பெற்றுக் கொள்ளலாம் (கலியாணத்தின் போதும்) விவாகரத்துக் காலத்தில் மீளப் பெறுவது பற்றிய வழக்கு விசாரணை பற்றி சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. |
| பாரம்பரிய சொத்துரிமை மனைவியால் பெற்றுக் கொள்ளல் | அரைவாசி சொத்துக்கள் | 2. 'கைக் கூலி' எனப்படும் சீதன விஷயம் பற்றி கோரப்படும் போது தான் காதி நீதிமன்றம் அது பற்றி விசாரிக்கும். ஒருவர் விவாகரத்துக்கு மனுப் பண்ணும் போது மனைவி வாழும் இடத்தில் உள்ள காதி நீதிமன்றம் அவரால் வைப்பிடப்படும். பணத்தை மனைவியின் பேரில் மீளப் பெற்றுத் தரும். |
| சட்டரீதியான பிள்ளைகள் | எல்லாப் பிள்ளைகளும் சரிசமமாக பெறுகின்றனர். மனைவி இல்லாவிட்டால் முழுச் சொத்தையும் பிள்ளைகள் பெறுகின்றனர். மனைவி இருந்தால் பிள்ளைகள் அரைவாசி பெறுகின்றனர். | தாரமிழந்தவர் பெறுவதில் அரைவாசியையே கைம்பெண் பெறுகிறாள். பாரம்பரிய சொத்துரிமையை கைம்பெண் பெறாதிருக்க செய்ய முடியாது.<br>குடும்பத்தில் ஆண் பிள்ளைகள் இல்லாவிட்டால் பெண் பிள்ளைகள் அதிகாரம் கூடுதலாகிறது. ஒரு பெண்ணுடைய பேரப் பிள்ளைகள் வேறு யாரும் இல்லாத பட்சத்தில் தம் பாட்டனாரின் சொத்துக்களைப் பெறுகின்றனர் |

நன்றி - நூலகத்திட்டம்



# வரவு




## சிறு சஞ்சிகை

யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு வருடத்திற்கு மேலாக வெளிவந்து கொண்டிருக்கிறது "ஆத்மா" - (மனிதத்தின் இருப்பைத் தேடி) எனும் சிறு சஞ்சிகை.

இன்றைய யாழ்ப்பாணத்தின் முகம் ஒரு திறந்த வெளி சிறையாகவும் அதில் மந்தைகளைப் போன்று நம்மக்கள் மேய்க்கப் படுவதும் ஒவ்வொரு சிப்பாயும் யமனின் துாதர்களாகி விட்ட நிலையில் யுத்தம் அது எமக்களித்த சீரழிவுகளும், அவலங்களும் என நினைத்து வாழ்ந்து கொண்டி-ருக்கும் மக்களுடன் இருந்து அவர்களின் குரலாக வெளிவந்து கொண்டிருக்கிறது ஆத்மா.

யுத்தத்தின் கோரப்பிடிக்குள் நசிந்து நசிந்து நைய்ந்தே போன முகங்களுக்குள் இன்னும் மனித முகம் அழியாது இருப்பதை தன்னோடு சொல்லிச் செல்கிறது இச்சிறுசஞ்சிகை.

இன்றைய வாழ்வியலின் அவலங்களையும், சீரழிகளையும் வெளிக்கொணர்வதோடு மட்டும் நின்றுவிடாமல் பெண்ணியம், கலை, கலாசாரம் என்னும் பலவிடயங்கள் பற்றிய தரமான ஆக்கங்களை தன்னோடு கொணர்ந்து பேசவைக்கின்றது.

ஆத்மா இதழில் வெளிவந்த கவிதை ஒன்று.

அகழ்வுகளின் பின்னால்

அங்கீகரிக்கப்படாத
புதைகுழிகளில்
சான்றிதழ்கள்
அற்ற
'மௌன மரணங்களின்'
உண்மைகள்
ஊமையாக
இருக்கும் வரை
மண்வெட்டிகளின்
அலகுகள்
புதைந்து போன
மனிதத்தை
பிரசவித்துக்கொண்டே
இருக்கும்
அந்த
ஒவ்வொரு
எதிர்பாராத
அகழ்வின்
பின்னாலும்
துார்ந்துபோய்
கிடப்பது
மனித எலும்புகளுக்கான
எச்சங்களும்
ஆடை
அணிகலன்களின்
மிச்ச சொச்சங்களும்
மட்டுமல்ல,
தார்மீக
ஜனநாயகத்தின்
மனிதாபிமானத்துக்குள்
அரங்கேறும்
கபட
நாடகங்களும் தான்

– செல்வன்

திறந்த மயான வெளியில் இருந்து கொண்டு மனிதத்தின் உயிர்வாழ்தலுக்காய் முயன்று ஆத்மா.

"........................

........................


நாம் இன்னும்

நம்பிக்கையை மட்டும் இழக்கிலோம்."

என்ற சேரனின் கவிதை வரிகளையொட்டி நம்பிக்கையில் மனிதத்தின் வாழ்தலுக்காய் முயன்று கொண்டிருக்கிறது இச்சிறுசஞ்சிகை.

துயரங்களோடாயினும் எமது வாழ்வை வாழ்ந்தே முடிப்போம் என்று சிதைந்து போன மனிதர்-களுக்கு நம்பிக்கையை ஆத்மா ஊட்டுவது இன்றைய தேவையே-யாயினும், அதனது கடமையும் அதுவே. ஆத்மா தொடர்ந்து வெளிவரவேண்டும் என்பதோடு இன்னும் பல நல்ல ஆக்கங்களை தன்னோடு சேர்த்துக் கொள்வதும் தொடர்ந்து அம்மக்களையே பேச வைப்பதும் அவசியமானது.

- ரதி



## கவிதைத் தொகுதி

அக்கரைப்பற்றைச் சேர்ந்த சாஹிர் ஹுஸைன் என்பரால் எழுதப்பட்ட கவிதைகள் அவரது மறைவிற்குப் பின்னர் அவரது நண்பர்களால் கவிதைத் தொகுதி-யாக வெளியிடப்பட்டுள்ளது. மாணவரான இவர் 99.03.01 அன்று நண்பர்களுடன் கடலில் குளிக்கச் சென்ற போது காணாமல் போனார்.

கலை இலக்கிய ஆர்வலரான இவர் நல்ல படைப்பாளியும் கூட. வளர்ந்து வரும் இக்கவிஞனின் மறைவு துயரத்திற்குரியது.

ஒரு தனி மனிதனின் மறைவோடு அவனின் வாழ்தலின் போதான பிரக்ஞை உணர்வும் மறக்கடிக்கப்படாமல் அம்-மனிதனின் உணர்வின் வெளிப்-பாடாக வந்த அவரின் கவிதைகளை அவரது நண்பர்கள் தொகுப்பாக வெளியிட்டது பாராட்டப்பட வேண்டிய விடயம்.

சாஹிர் ஹுஸைனின் கவிதை-கள் அம்மனிதனின் துயரத்தை சொல்லிச் செல்வது போல் இருந்தாலும், அந்தத் துயர வரிகள் எங்களுடையதும் தான்.

"மீண்டும் மீண்டும் உறக்கமற்ற இரவு" என்று தலைப்பிடப்பட்ட அவரது கவிதை ஒன்றில்,

கவ்விக் கொண்ட துயர நாள்

காற்றோடு வெடிச்சத்த ஓசை

ஓடிப்போவோம் என்கிறான்
ஒருத்தன்

குப்புறக்க உறங்கு என்றான்
மற்றையவன்

அண்ணன் விடும் தீபாவளி வெடி
இல்லையது

இரவு நாய்களின் சத்தம்

நேற்றுக் கொண்ட துாக்கம்
இல்லையே!

இன்றோடு தொடங்குகின்றது
அலைச்சல்

நானும் நீயும் இனி இரவில் துாங்க
முடியாது

வா வாசலை மூடுவோம் என்றவன்
திரும்பி விட்டான்

இரைச்சல் இரைச்சலாய்
கத்துகிறது நவீன நாய்கள்

இன்னும் சில வினாடிகளில் விடியும்
வானத்தில்

யாரோ சூரியனை மறைத்து
விட்டார்கள்

மீண்டும் கத்துகிறது அந்த நாய்

————

————

————

என்ற கவிதை யுத்த சூழலில் ஒரு மனிதனின் உணர்வை சொல்லிச் செல்கின்றது. எல்லாக் கவிதைகளும் சிறந்த கவிதைகள் என்றில்லாவிட்டாலும் கூட தனது வாழ்வின் பிரக்ஞை உணர்வை அவர் ஓரளவிற்கு பதிவு செய்-துள்ளார்.

"பரிதாபம்" என்று தலைப்பிட்ட கவிதையில்,

————

————

எட்டி வைக்கும் ஒவ்வொரு
எட்டிற்கும்

சதைகள் குலுங்கும் சத்தம்

வெட்டி வீசிய சாட்டையில்
பறந்தது

முதுமை பாய்ந்த கால்கள்

கேட்கும் சப்தங்கள் ஒவ்வொன்றும்
சாவுமணியென

எதிரொலிக்கிறது அறிந்தும்

எஜமானே

வரைகிறான் பல நவீன
ஓவியங்கள்

என் முதுகில்

————

————

என்ற வரிகள் ஒரு வளர்ந்து வரும் கவிஞனின் அழகான படிமங்கள்.

ஒரு நல்ல கலைஞன் மறைந்து-விட்டாலும் அவனது இருப்பை உறுதிப்படுத்துவதாக இருக்கிறது இக்கவிதைத் தொகுதி.

- ரதி

### நெருப்பு ஊர்வலங்கள்

பெனி

கவிதைத்தொகுதி

வெளியீடு:
ஜெஸ்கொம் வெளியீடு
மட்டக்களப்பு

விலை: 50.00







### விமர்சனக் கட்டுரைகள்

முகமது சமீம்

வெளியீடு:
நிசானா பப்ளிஷர்ஸ்
20/14, சிமென்ட்ஸ் ரோட்,
கொழும்பு - 10


விலை: 70.00

### வரலாற்றில் தமிழும் - தமிழரும்

ஆய்வுக் கட்டுரைகள்

திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்

வெளியீடு:
கொண்கோப்
9, பெர்ணாண்டோ லேன்,
மட்டக்களப்பு





### முத்தத்தைத் தவிர


ஸாலி இப்னுநபீஸா

கவிதைத்தொகுதி

வெளியீடு:
முஸ்லீம் லீக் வாலிபர் முன்னணி
அம்பாறை மாவட்ட சம்மேளனம்

*இந்தியத் தமிழ்* இலக்கிய உலகில் மறக்கப்பட முடியாதவரான வெங்கட் சாமிநாதன் அவர்கள் அவ்வப்போது எழுதிய விமர்சனங்கள், கட்டுரைகளின் தொகுப்பாக வெளிவந்துள்ளது "வெசாஏ" எனும் சஞ்சிகை. தனி ஒரு மனிதரின் எழுத்துக்களை மட்டுமே கொண்டு தமிழில் வெளிவந்த முதல் சஞ்சிகையாக இதனைக் கருதலாம். வெ.சா.வின் எழுத்துக்கள் மீதான ஆர்வலர்-களுக்கும், விமர்சகர்களுக்கும் இத்தொகுதி ஒரு வரப்பிரசாதமே.

இது ஒரு தனி எழுத்துக் கலைஞனின் வெளியீட்டுத்தளம். ஒரு எழுத்தாளனின் கடிதம் ஒரு முழு பத்திரிகை இதழில் வெளிவரும் புதுமையும் எளிமை-யும் ஆழமும் இதன் சிறப்பு என்கிறார் இவ்விதழின் நிர்வாகி "வெசாஏ".




வெளியீடு:
ஆசிரியர் "வெசாஏ"
243, வித்யாவிஹார்,
பிதம்புரா அவுட்டர் ரிங் ரோடு,
டெல்லி.

நன்றி - நூலகத்திட்டம்



# கண்ணாடியும் கல்லும் பெண்கள் அமைப்புக்களும்!




சரிநிகரில் தொடரும் இவ்விவாதம் இன்னும் சில கற்களை என்னை நோக்கி எறிந்துள்ளது. கூட்டு ஆசிரியர்களாக அவர்கள் மூவரும் முன்வைத்த கருத்துக்களுக்கு சில விளக்கங்களுண்டு. அவற்றை நான் மறுப்புக்கள் என்று கூறுவதிலும் பார்க்க விளக்கங்கள் என்றே கூற விரும்புகிறேன்.

ஓரினச் சேர்க்கை ஒரு பெண்ணினால் தெரிந்தெடுத்த தேர்வாக வரும் பொழுது அது பெண்கள் பிரச்சினையாகக் கொள்ளப்படும். ஆணுக்கும் பெண்ணுக்கும் இயல்பாகவே அந்த பாலியல் உணர்ச்சி சம்பந்தமாக அவர்களது உடல் உளப்பாங்கின் பாற்பட்டு ஏற்படுவதுமுண்டு. இது காலங்காலமாக ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரு பிரச்சினையாக இருந்திருக்கலாம் அல்லது இலை மறைகாயாக இருந்த இந்த உறவு நியதிகள் கண்டும் காணாமலும் விடப்பட்டிருக்கலாம். ஆனால், இது இயற்கைக்கு மாறானது என்று சமூகப் பெரும் போக்கும், அரசும் சமயங்களும் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. இவ்வுறவுகள் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும் இது காலங்காலமாக இருந்து கொண்டே வந்தன. அவர்களது இந்த உறவு நிலைகள் ஓரங்கட்டப்பட்டு இழிவாகக் கருதப்படத் தொடங்கிய காலத்திலேயே இது அரசியல் மயப்படுத்தப்பட்டு இதற்கு உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோஷம் எழுந்தது. இது மனித உரிமைத் தத்துவத்தில் அடக்கப்பட்டது. அலிகள் என்று கூறப்படுவோரின் பிரச்சினையும் இதற்குள் அடக்கப்பட வேண்டும் என்ற குரலும் சமகாலத்தில் எழுந்துள்ளது. ஆகவே இவற்றை ஒன்றிணைத்துப் பாலியல் உரிமை என்ற ரீதியிலே பார்க்கப்பட வேண்டும் என்பது எனது கருத்து. தனிக்கோஷங்கள் பிரச்சினைகளைப் பிரித்து வேறுபடுத்தி விட்டால் அவை பலவீனமடைந்துவிடும்.

இரண்டாவது: எனது கருத்து இன்னும் முக்கியமானது. பெண் ஓரினச்சேர்க்கையாளர் எல்லோரும் பெண்நிலைவாதிகள் அல்லர். பெண்நிலைவாதத்தை ஏற்றுக்கொண்டோருமல்ல. வர்க்க நிலையில் சாதி நிலையில் உயர்ந்திருக்கும் இத்தகைய பெண்களுக்குப் பிரச்சினைகளும் பெரிதாக இருப்பதில்லை. தங்கள் வாழ்க்கையை அவர்கள் சலனமின்றிக் கொண்டு செல்கிறார்கள். சமுதாயத்திலும் கூட அவர்கள் அரசின் "அப்படி" என்பதுடன் அவர்களது பிரச்சினை முடிந்து விடுகிறது. ஆனால், இவர்கள் அமைப்பு நிறுவி எங்களுக்கும் பிரச்சினைகள் உண்டு. எங்களது கதைகளையும் கேளுங்கள் என்று பகிரங்கமாக இப்பிரச்சினையை அரச, சமூக, சமய மறுப்புக்களிலிருந்து எங்களை மீளுங்கள் என்ற பொழுது தான் பெண்கள் அமைப்புகள் ஒன்று சேர்ந்து அவர்களுக்கு ஆதரவாகப் பகிரங்கமாகக் குரல் கொடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அதை அவர்கள் ஒருங்கிணைந்து செய்தார்கள். காலங்கடந்து அது செய்யப்படவில்லை.

தனிப்பட்ட ரீதியில் பல பெண்கள் எங்களிடம் வந்து தங்களது இப்பாலியற் பிரச்சினைகளைக் கதைத்து தீர்வு காண வருவார்கள். அவர்களைப் புரிந்து பயம் நீக்கி, குற்ற உணர்வு களைந்து எங்களால் ஆவன செய்து அனுப்புவோம். சமூகம், அக்கம் பக்கம், சுற்றம், குடும்பம் என்ற கட்டமைப்புகளிலிருந்து கொண்டு அவற்றை உடைத்தெறியும் திண்ணம் இல்லாதவர்களே பெரும்பாலான பெண்கள். அவர்களது அந்த வட்டத்திற்குள்ளே நின்று தான் நாமும் இயங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்பட்டுள்ளோம். அவர்கள் தங்கள் அந்தரங்கங்களை வெளியிடாதீர்கள் என்ற கோரிக்கைக்கு அவர்கள் நன்மை கருதி நாம் இணங்கவேண்டியுள்ளது. 1982ம் ஆண்டு என்று நினைக்கிறேன். இரு பெண்களில் ஒருவர் தாயின் நச்சரிப்புக்களும், தொந்தரவும் தாங்காமல் தன் உறவை முறித்து அதனால் விரக்தி உண்டாகித் தற்கொலை செய்து கொண்டதாகப் பத்திரிகையில் செய்தி வெளிவந்தது. பெண்ணின் குரல் அமைப்பிலிருந்து நானும் ஹேமா குணத்திலகா, குமாரி ஜெயவர்த்தனா, பேர்ணடீன் சில்வா போன்றோரும் அவர்கள் வசித்த அக்குக்கிராமத்துள் அந்த மற்றப் பெண்ணைத் தேட எடுத்த முயற்சியில் அவர் தான் விரக்தியிலிருந்து மீண்டு தன் வாழ்க்கையை தனிவழி கொண்டு செல்ல முடிவெடுத்திருப்பதாகவும் தனக்கு எங்களது உதவி தேவைப்பட்டால் தொடர்பு கொள்வதாகவும் கூறினார். இதுவே எம் முதல் முயற்சி. இவற்றை நாம் கூறுவதற்கான காரணம் ஒரு பிரச்சினைக்கு பல அணுகுமுறைகள் உள்ளன. சந்தர்ப்பத்துக்கும் அவரவர் கொள்கைக்கும் ஏற்ப அவர்களால் முயன்ற அளவு அவர்கள் அதைச் செய்யலாம். அவர்களைப் பார்த்து நீங்கள் ஏன் அதைச் செய்யவில்லை. இப்படிச் செய்யலாம் என்று மற்றோர் கூறுவது ஒரு அதிகார நிலைப்பட்ட செயல், களத்தில் இருந்து வேலை செய்வோரின் பிரச்சினைகளைப் பூரணமாக அறியாமல் குற்றங்குறை கூறுவது எவ்வளவுக்குச் சரி என்பது ஒரு தார்மீகக் கேள்வி.

மூன்றாவது: பெண்கள் உரிமைகள் மனித உரிமைகளே என்று முற்போக்குச் சமூகம், அரசு, ஐக்கிய நாடுகள் சாசனங்களும், நிறுவனங்களும், மனித உரிமைக் கழகங்களும் நிறுவனங்களும் பெரும்போக்கில் ஏற்றுக் கொண்டு பல வருடங்களாகி விட்டன. உலகளாவிய ரீதியில் தென்னாசியச் சஞ்சிகைகள் இதற்குப் பெரும் உதாரணம். சமூக முன்னேற்றம் பேசுவோர் அனைவரும் பெண்கள் பிரச்சினை பற்றி எழுதி வருகிறார்கள். (Front line, India Today, Economic & Political Weekly, Communalism Combat) பல சஞ்சிகைகளும், பத்திரிகைகளும், சமூகவியல் கருத்தரங்குகளும், பெண் பிரச்சினை, பெண்ணிலைவாத தத்துவவாத நிலை பற்றி எழுதுகிறார்கள். அவர்கள் எல்லோரும் பெண்நிலைவாதிகள் அல்ல. பெண் அமைப்பாளர்களும் அல்ல. சமூகப் பிரக்ஞை கொண்ட அறிவாளர்கள் பத்திரிகையாளர்கள். இவர்களில் அநேகம் பேர் பாலியல், பாலியல் தேர்வு போன்ற விடயங்களையும் ஆணித்தரமான விவாதங்களுடன் முன்வைத்துள்ளார்கள். ஆகவே சமூகப் பிரக்ஞை கொண்டவர்கள் எழுத வேண்டும் என்று சொல்வது விதண்டாவாதம் அல்ல. ஒரு நல்ல வாதம் ஏற்றுக் கொள்ளப்பட்ட வேண்டும். ஏன் எம் நாட்டில் மட்டும் பெண்களை ஒரு சில நிறுவனங்களுக்குள் அடக்குகிறோம். இதில் வேண்டிய தெரிவு எமக்கில்லைப் போலும். பெண்கள் பற்றி எழுதும் பழம் பெரும் சஞ்சிகையின் ஆசிரியர் மதுகிலுவார், தான் ஒரு பெண்நிலைவாதி அல்ல. (ஒரு நிறுவனமும் அவருக்குண்டு) (I am not a Feminist) என்று ஆணித்தரமாக பகிரங்கமாகப் பல முறை கூறியுள்ளார். இதிலிருந்து பெறப்படும் எனது வாதம் யாரும் எழுதலாம் யாரும் விவாதிக்கலாம் என்பதே.

பெண்நிலைவாதிகள் பெண் அமைப்பாளர்கள் எல்லோரும் ஓரினச்சேர்க்கையை ஏற்றுக் கொள்பவர்களல்ல. Free Love ஐ ஏற்றுக் கொள்பவர்களல்ல. அதனால் அவர்கள் பெண்நிலைவாதிகள் அல்ல என்று ஒருவராலும் கூற முடியாது. பெண்நிலைவாதங்கள் பல. அதில் சில பெண்நிலைவாதிகள் சில பல கோட்பாடுகளை ஏற்றுக்கொள்வார்கள். சிலதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இது தான் பெண்நிலைவாதம் என்ற ஒரு பூரண கோட்பாட்டுத் தளம். பெண் நிலைவாதத்திற்கில்லை. வரலாற்று ரீதியில் வளர்ந்து வரும் வாதப் பிரதி வாதங்களை அடக்கிய ஒரு பெரும் வாதம் அது. பெண்ணிலைவாத அமைப்பில் நீ இருக்கிறாய். நீ ஏன் அதைக் கூறவில்லை. இதை விவாதிக்கவில்லை என்று கேட்பது யானையைப் பார்த்த குருடர்களாகப் போய்விடும்.

நான்காவது: சரவணன், சூரியகுமாரி, தேவகௌரி அவர்களுக்கு நான் கூறவேண்டிய முக்கியமான விடயம் இது என்று நினைக்கிறேன்.

பெண்கள் அமைப்புக்கள் வேறு. இயக்கம் வேறு. பெண்கள் அமைப்புக்களுக்கென்று சில குறிப்பிட்ட திட்டவட்டமான குறிக்கோள்கள் உண்டு. பணிப்பாளர் சபை, சட்ட வரையறைகள், கணக்காளர் மதிப்பீடுகள் (Auditor Report), சமூகசேவை திணைக்களம் (Social Service Department) போன்றவற்றில் பதியப்படவேண்டிய கட்டாயம் என்று பல கட்டுப்பாடுகள் உண்டு. உதாரணமாக இவை யாவும் நான் இயங்கும் பெண்கள் கல்வி ஆய்வு நிலையத்திற்கு உண்டு. எங்களது குறிக்கோள்கள் எழுத்தில் வடிக்கப்பட்டு அச்சிட்டு எமது சஞ்சிகைகளில் வெளிவந்து கொண்டே இருக்கின்றன. இக்குறிக்கோள்களில் சிலவற்றை எமது சக்திக்கும் அபிலாஷைகளுக்குமேற்ப நாம் முதன்மைப்படுத்தி இயங்குகிறோம். எம்மில் பல அங்கத்தவர் எமது நிறுவன ரீதியாகச் சில விடயங்களை நாம் முன்னெடுக்கக் கூடாது என்று தீர்மானம் எடுத்தால் அந்தத் தீர்மானத்தை நாம் மீற முடியாது. ஆனால், இயக்கம் வேறு, பெண்நிலைவாதிகள் என்று தங்களை இனங்காணுவோர் அனைவரும் ஒன்றிணைந்து சில பல விடயங்களில் முன்நின்று உழைப்பார்கள். இந்த இயக்கத்திற்கு கட்டுப்பாடுகள் இல்லை. தனிப்பட்ட முறையில் யாரும் எதையும் எழுதலாம். முறையிடலாம். கண்டிக்கலாம். கிருஷாந்தி பாலியல் வன்முறை கொலை சம்பந்தமாக நடத்தப்பட்ட கூட்டங்கள் இயக்கரீதியிலும் நடந்தன. அதற்கு சமூகமளித்திருந்த தமிழ்ப் பெண்களின் தொகை எமது இயக்கத்தின் பரிதாப நிலையைக் காட்டியது. இயக்கம் வேறு நிறுவனம் வேறு. நிறுவனங்களும் தனிமனிதர்களும் இயக்கமாகலாம். இவ்விரு பகுதியினரும் சுயாதீன அங்கத்தவர்கள் பெண்கள் இயக்கங்களுக்கு அதிகம் பங்குண்டு. ஆகவே இயக்கங்களிலிருப்போர் யாரும் எழுதலாம். இதனால் சூரியகுமாரி, தேவகௌரி தாங்கள் பெண்கள் இயக்கத்திலில்லை. ஏனென்றால் நாங்கள் பெண் அமைப்புக்கள் என்று வாதிக்கிறார்களா? பெண்கள் அமைப்பு நிறுவனங்கள் போன்றன சில விடயங்களில் கொள்கை ரீதியில் ஒரு நிலைப்பாடே எடுக்கும் உரிமையைக் கொண்டிருக்கும். அதை ஏனையோர் மதிக்க வேண்டும்.

ஆசிரியர்கள் மூவரும் என்னைத் தனிப்பட்ட ரீதியில் ரூபவாஹினியுடன் இணைத்து எதையோ கூறுகிறார்கள். ரூபவாஹினியில் நான் பணிப்பாளராக இருந்த பொழுது சில பல விடயங்களில் தீவிரமாக செயற்பட்டு அதில் திருப்தியும் அடைந்தேன். செய்யக்கூடிய சாத்தியக் கூறுகளிலிருந்தபடியால் தான் நான் அதில் இணைந்திருந்தேன். முடியாவிட்டால் அப்பதவியைத் துறந்து வெளியே நின்றிருப்பேன். இத்தகைய கல்லெறிகளைச் சரிநிகரில் கண்ட சிலர் என்னுடன் தொடர்பு கொண்டு கலங்குகிறார்கள். ஆனால், நான் கலங்கவில்லை. ஏனெனில் இது சகஜமாக நடப்பது நடந்து வருவது. இது எம்மனதையும் கல்லாக்கி விட்டதனால் கல்லெறிகள் கல்லிற்பட்டால் அவை அதைத் தாக்காது ஒரு வேளை மேலும் புடமிட்டு மேலும் மேலும் நம்மை இயக்கப் பெறச் செய்யும்.

இறுதியாக பெண் அமைப்புக்களில் இருப்போரில் அநேகம் பேர் பல இடுக்கண்ணை எதிர்கொள்கிறார்கள் என்பதையும் அறிவித்தே ஆக வேண்டும். உணவுக்கும் உடைக்கும் வீட்டுக்குமாக ஒரு முழுநேர உத்தியோகம், பின்னேரங்களில் பெண்ணமைப்புக்களில் வேலை களம் சென்று பெண்களைச் சந்தித்தல். பாலியல் தொல்லை, மனக்கோளாறு, கருக்கலைப்பு, கணவனால் அடிபோன்ற பல பிரச்சினைகளுடன் எம்மை நிரந்தரம் அணுகும் பெண்களுடன் கதைத்துக் கேட்டு, வழிவகை சொல்லி நாமும் மனம் புண்பட்டு எத்தனையோ அவலங்களின் மத்தியில் தான் பெண் அமைப்புகளும் செயல்படுகின்றன. ஒவ்வொரு கருத்தரங்கின் பிற்பாடும் சராசரி ஐந்து பெண்களைப் பிரச்சினைகளோடு சந்திக்கும் அனுபவம் எனக்குண்டென்றால் ஏனையோருக்கும் இப்பிரச்சினைகள் பெருமளவில் இருக்குமென்பது எனது முடிபு.

ஆகவே தயவுசெய்து அவர்கள் செய்யும் வேலைகளின் தாற்பரியத்தைப் புரிந்து கொண்டு மெச்சிப் பேச வேண்டாம். ஆனால், அவர்களைத் தாக்கிப் பேசி பிழை காணாதீர்கள்.

"இவ்வமைப்புக்கள் எதுவும் தீவிரமாகச் சிந்திப்பதாகத் தெரியவில்லை. மேம்போக்கான தன்னியல்பான எதனை நோகாமல் செய்ய முடியுமோ அதையே செய்கிறார்கள்"

என்ற வசனங்கள் பெண்கள் அமைப்புக்கள் அத்தனையையும் ஒரு குடைக்கீழ் கொண்டுவந்து அவற்றை நோக்கி எறியப்பட்ட வக்கிரகணைகள். இங்கு ஒரு அதிகாரத் தொனியும் தொக்கி உள்ளதா? யுத்தப் பிரதேசத்தில் வேலை செய்த எம் அமைப்பைச் சேர்ந்த இரு பெண்களுக்கு மனநோய் வைத்தியம் செய்ய வேண்டிய தேவையும் கூட அண்மையில் எங்களுக்கேற்பட்டது. நோகாமல் செய்வது என்பதை யார் செய்கிறார்கள் அவர்களையே இக்கணைகள் சென்றடையும்.

பெண்ணிய வேலைத்திட்டம் பற்றிய தீவிர சிந்தனையைக் கொண்டிருப்போர் அதைப் பெண்ணமைப்புக்கு எடுத்தியம்பினால் அதனால் எல்லோரும் பயன்படுவார்கள் அந்தத் தெளிவுள்ளோர் அதற்கு முன் வருவார்களா?

இலங்கையில் பத்திரிகா தர்மப் பிரதிக்ஞை எடுத்த அத்தனை பத்திரிகைகளும் பத்திரிகையாளர்களும் சமூகப் பிரக்ஞையுடன் எழுதுகிறார்களா? 3500/4000 அரச சார்பற்ற நிறுவனங்களும் ஒரே தளத்தில் ஒரே தன்மைத்தாய் இயங்கவேண்டும் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது. இவை எல்லாவற்றிற்கும் ஒருவர் வக்காலத்து வாங்கவும் முடியாது. இந்தக் கசப்பான உண்மை பல தளங்களுக்குப் பொருந்தும். ஆனால், அதற்காக ஒரு சில பெண் அமைப்புக்களை அவர்களின் பூரணவேலைத்திட்டங்களை, கருத்தியலை, குறிக்கோள்களை விளங்கிக் கொள்ளாமல், அவர்கள் செய்யும் வேலைகளின் கனதியை, பெறுமானத்தை தெரிந்து கொள்ளாமல், அவர்கள் இதைச் செய்யவில்லை. அதைச் செய்யவில்லை என்று அவர்களைக் கொச்சைப்படுத்துவதும் குறைத்து மதிப்பிடுவதும் நாகரிகத்தின் பாற்படாது.

இடதுசாரி இயக்கம், பெண்கள் இயக்கம் மதச்சார்பற்ற சிந்தனைப்போக்கு உள்ளோர் (Secular) ஒன்றுபட்டு ஒரு மாற்று சிந்தனைப் போக்கை உருவாக்க முயலும் இக்கால கட்டத்தில் முட்டையில் மயிர் பிடுங்குவோர் போல மாற்றுச் சிந்தனை உடையோரை, சிறுபிள்ளைத்தனமாக நிந்தித்து பிற்போக்கு விமர்சனம் செய்து மாற்று இயக்கத்தை துண்டாடிப் பிரித்து முதலாளித்துவ பிற்போக்குச் சக்திகள் எங்களை எள்ளி நகையாடி விமர்சிக்க வைப்பதில் இக்கட்டுரையின் ஆசிரியர்களுக்கு என்ன லாபம்? எத்தனையோ சந்திப்புக்கள் எங்களுக்குள் நடந்தனவே. எத்தனையோ பெண்நிலைவாதக் கருத்தரங்கில் இலக்கியக் கருத்தரங்குகளில் சந்தித்தோமே அத்தகைய தருணங்களில் இவ்விவாதம் எடுக்கப்படாமல் பகிரங்கமாக எம்மையும் எமது வேலைத் திட்டங்களையும் எமது கருத்தியலையும் கேள்விக்குள்ளாக்கி எங்கள் மனதைப் புண்படுத்தி இவர்கள் காணும் இலாபம் யாது? கேள்விகள் கேள்விகளாகவே எம்முடன் நிலைத்து நிற்குமா?

**செல்வி திருச்சந்திரன்**

## மட்டக்களப்பு...

உள்ளுக்குக் கொண்டு செல்ல படையினர் அனுமதிக்கவில்லை என்றும் இச்சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர். இதேவேளையில் மாலை ஐந்துமணிக்கு மேல் யாரும் ரெலிகொம்முக்குள் போகவும் இயலாது. வெளியில் வரவும் இயலாது. ஆனால் ரெலிகொம் விடுதியில் இருப்பவர்கள் இந்தப் பாதையையே பாவிக்க வேண்டிய தேவையும் இருக்கின்றது. அந்தளவுக்கு இறுக்கமாக ரெலிக்கொம் பாதுகாப்பை கொண்டு வந்துள்ளார்கள். ரெலிகொம் ஊழியர் ஒருவர் கூறுகையில் பாதுகாப்பு படையினரே சகல அலுவலக வேலைகளையும் கவனித்தார்கள் என்றால் பிரச்சினையில்லாமலும் இருக்கும் அவர்களுக்கும் பாதுகாப்பாகவும் இருக்கும் என்று சலிப்புடன் கூறினார். இங்குள்ள பாதுகாப்பு நிலமைகளை பார்க்கப்போனால் பாதுகாப்பு என்ற போர்வையில் ஒவ்வொரு தமிழரையும் எப்படி புலி என நிறுவலாம் என்றும், எப்படி இவர்களின் இயல்பு வாழ்க்கையை சீர்குலைக்கலாம் என்ற உள் நோக்கோடே செய்யப்படுகின்றது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது.

இதே போன்று களுவாஞ்சிகுடியில் கடந்த 6.11.99 அன்று மீன் பிடிக்கச் சென்ற இருவர் களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பின் புலி எனக் கூறப்பட்டனர். இவர்களில் காசுபதி என்பவர் ஐந்து பிள்ளைகளின் தகப்பன்.

இதுமட்டுமல்லாது இம்மாதம் 10ந் திகதி களுவன்கேணியைச் சேர்ந்த மாணிக்கம் பேரின்பமூர்த்தி(21) என்பவர் துணைப்படையை சேர்ந்த (ராசிக்குழு) சபாரெத்தினம் சவுந்தரம் என்பவனால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் சம்பவ தினம் களுவன்கேணியிலுள்ள தனது வீட்டில் இருந்து தனது மனைவியின் அம்மாவின் வீட்டுக்கு செல்லும் போது கோரளங்கேணி என்னுமிடத்தில் சின்னப்பிள்ளைகளுடன் மாபிள்குண்டுவிளையாடிவிட்டுப் போகும்போது பக்கத்திலுள்ள வளவு ஒன்றிலிருந்து தேவனின் தம்பி போகிறான் என்று ஒருவர் சொல்லிக் கொண்டுவர வேலிக்கு அப்பால் துவக்குடன் நின்ற ஒருவர் மூர்த்தியை சைக்கிளைவிட்டு இறங்கச் சொல்லியிருக்கின்றார். கத்திக்கொண்டு ஓடிவந்தவர் மூர்த்தியின் சாறனை அவிழ்த்துகாட்டச் சொல்லியிருக்கின்றார். சேட்டையும் கழற்றிக் காட்டச் சொல்லிவிட்டு சேட்பொக்கட்டில் என்ன என்று கேட்க மாபிள்குண்டு விளையாடித்து வாறன் என்றுசொல்லி வாய்மூடவும் சவுந்தரத்தின் கையில் இருந்த துப்பாக்கி வாயைப்பிளக்கவும் சரியாக இருந்ததாம். இவ்வளவையும் பார்த்துக் கொண்டு நின்ற மாணவன் விஜயரகு மயக்கம் போட்டு வீழ்ந்திருக்கின்றான். ஆனால் மூர்த்தியோடு சென்று இவ்வளவையும் பார்த்துக் கொண்டு நின்றவர் வாயைத்திறந்தால் இதுதான்கெதியாகும் என்று எதையும் காணாதவர் போல் இருந்திருக்கின்றார்.

மூர்த்தி கடந்த 28.9.99அன்று துணைப்படையைச் சேர்ந்த (ராசிக்குழு) விசு,சவுந்தரம் இவர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட மாணிக்கம் புவனேந்திரனின் (தேவன்) தம்பியும். யோகராணியின் மச்சானும்கூட. இந்த சம்பவங்களைப் பார்க்கும்போது தனிப்பட்ட விரோதங்களை வைத்து புலி என்ற போர்வையில் பழிவாங்கப் படுகின்றார்கள் என்பது மட்டும் தெளிவாகின்றது. இந்நிலமைகள் தொடர்பாக தமிழ்மக்களின் பிரதிநிதிகள் என்று தங்களை சொல்லிக் கொள்கின்றவர்களோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ திரும்பிக் கூடப் பார்ப்பதாக இல்லை. இவர்கள் எல்லோருமே எந்தத் திணைக்களத்தில் வெற்றிடம் இருக்கு அதில் யாரை கொண்டு சேர்க்கலாம். யாருக்கு ஊக்குவிப்பு பணத்தை பெற்றுக் கொடுத்து தங்களின் பெயரை நிலைநாட்டலாம் என்று செயற்படுகிறார்களே ஒழிய தமிழ்மக்களின் உண்மையான பிரச்சினைகளில் பங்கெடுக்க முடியாதவர்களாகவே இருக்கின்றார்கள்.

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a newspaper in Sri Lanka


# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.


## விஷச்சூழலுக்கெதிராக!

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரச்சாரங்கள் தீவிரமாக நடக்கத் தொடங்கி விட்டன.

பிரச்சாரங்கள் மட்டுமல்ல, வழமைபோலத் தேர்தல் கால வன்முறைகளும் தீவிரமடையத் தொடங்கியுள்ளன.

"மக்களுடன் எனது உடன்பாடு" என்ற தலைப்பில் ரணில் விக்ரமசிங்க வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் தான் தெரிவு செய்யப்பட்டால், புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பேன் என்று அறிவித்துள்ளார்.

ஆனால் ஜனாதிபதி சந்திரிகா அவர்கள், பேச்சுவார்த்தை பற்றி மட்டுமல்ல வேறு எதைப் பற்றியுமே சொல்லவில்லை. யுத்தத்தைத் தொடர்வது பற்றியும், தமது மகத்தான தீர்வுப் பொதியை நடைமுறைப்படுத்த எதிர்க் கட்சி ஆதரவு தரவில்லை என்பது பற்றியும் மட்டுமே பிரலாபித்துத் திரிகின்றார்.

ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்கள் - இவர்களில் பலருக்குக் கட்டுப் பணம் மீளக் கிடைப்பது கூடக் கேள்விக்குறியே - யாரும் தாம் ஜனாதிபதியாக வந்தால் செய்யப் போவது என்ன என்பது பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை.

எல்லோரும் ஒருவரை ஒருவர் விமர்சித்துக் கொண்டு தேர்தலில் குதித்துள்ள போதும், இவர்கள் அனைவரும் ஒரு விடயத்தில் மட்டும் ஒத்துப் போகின்றனர்.

ஆம், அதுதான் இந்தத் தேர்தல் நடப்பதை ஏற்றுக் கொள்வது. இவர்களில் யாரும் இந்தத் தேர்தல் ஏன் வைக்கப்படுகின்றது என்று கேள்வி எழுப்பவில்லை.

இவர்களில் யாரும் இது ஒரு நியாயமான தேர்தலாக நடக்காது, நடக்கக் கூடிய சூழ்நிலை இப்போது இல்லை என்று அறிவிக்கவில்லை.

வடக்குக் கிழக்கில் யுத்தம் நடக்கின்றது, மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்து வாழ்கின்றார்கள், அவர்களது சிவில் நிர்வாகம் இராணுவத்தின் கைகளில் வழங்கப்பட்டிருக்கின்றது. வடக்குக் கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் கடந்த ஒன்பது ஆண்டு காலமாக நடத்தப்படவில்லை. அது நடத்தப்படுவதற்கான சூழ்நிலை அங்கு இல்லை என்று சொல்லப்பட்டு வருகின்றது.

ஆயினும், இப்போது ஜனாதிபதித் தேர்தலை நடத்த அம்மையார் முடிவு செய்துள்ளார். அதுவும் அந்தத் தேர்தலுக்கு, இன்னும் ஓராண்டு காலம் இருக்கும் போதே தேர்தல் நடத்தப்படப் போகின்றது.

தமது மகத்தான சாதனையாக அம்மையார் கூறிக் கொள்ளும், சமாதானத் தீர்வுப் பொதியை நடைமுறைக்குக் கொண்டு வர மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பாராளுமன்றத்தில் தர ஐ. தே. க. மறுப்பதால் தான் மக்களிடம் புதிய ஆணையைக் கோரி நிற்பதாக அவர் அறிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் தேவைப்படுபவர் பாராளுமன்றத் தேர்தலை அல்லவா நடத்த வேண்டும்.

இந்தப் பத்தியில் நாம் இதைக் கேள்வியாக முன்பும் எழுப்பியிருந்தோம். சந்திரிகாவின் தனிப்பட்ட அரசியல் இலாபங்களுக்காகவும், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யும் வசதிக்காகவும், திட்டமிட்டு நடத்தப்படுகின்ற இந்தத் தேர்தல் உண்மையில் ஒரு கேலிக் கூத்து மட்டுமல்ல, ஒரு சுத்த மோசடியும் ஆகும்.

சரிநிகர் இந்தத் தேர்தல் நடத்தப்படுவது சட்ட விரோதமானது என்று பிரகடனப் படுத்துமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தாக்கல் செய்துள்ளது. பொய்யான தேர்தல் வாக்குறுதிகள், பொய்யான காரணங்களுக்காகத் தேர்தல்கள், பொய்யான அரசியல் நடவடிக்கைகள் என்று அனைத்தும் பொய்மயமாகி விட்ட விஷச் சூழல் இது.

அரசியல் இலாபத்திற்காக இனவாதம் முதல் சமாதானம் வரை எதையும் வியாபாரமாக்கும் அரசியல் தலைமைகள்.

## காட்டிக் கொடுக்கும் கூட்டணி?

அண்மையில் நீலன் திருச்செல்வம் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டதாகச் சிலர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் தகவல் வெளியிட்டிருந்த இராணுவப் பேச்சாளர் சுனில் தென்னக்கோன் நீலன் திருச்செல்வத்தின் கொலை சம்பந்தமான பூரண தகவல்களை சில நாட்களுக்குள் வெளியிட முடியும் எனத் தெரிவித்தார். அதேவேளை இத்தகவல்களின் அடிப்படையில் தமிழர் விடுதலைக் கூட்டணி உப தலைவர் ஆனந்தசங்கரியின் பெறாமகனான கஜதேவசங்கரியும் கைது செய்யப்பட்டவர்களுள்ஒருவர்.

கஜதேவசங்கரியைப் பொலிசார் கைது செய்யச் சென்ற போது அவருடன் சில நண்பர்களும் இருந்தனர். அவர்களையும் 27-08-99 அன்று பிற்பகல் கைது செய்த பொலிசார் கஜதேவசங்கரியை தனியாகவும் ஏனையவர்கள் அனைவரையும் ஒன்றாகவும் வைத்திருந்தனர். அன்று இரவு கஜதேவசங்கரியுடன் கைது செய்யப்பட்ட அவரது நண்பன் தணிகாசலம் நந்தனன் என்பவரிடம் விசாரணை செய்த பொலிசார் அவரிடம் "பிஸ்டல்" எங்கே என்று கேட்டனர்.

கஜதேவசங்கரியை கைது செய்ய வந்த பொலிசார் தன்னிடம் ஏன் இப்படி கேட்கிறார்கள் என்று நந்தனன் குழப்பமடைய அதேவேளை அங்கு வந்த கஜதேவசங்கரி நந்தனனிடம் கொழும்பு பல்கலைக்கழக மாணவன் ஸ்ரீறங்காவிடம் நீர் பிஸ்டல் கொடுத்ததாகக் கூறினால், மறுநாள் காலை தனது பெரியப்பாவிடம் (ஆனந்தசங்கரி) கூறி வெளியில் எடுத்து விடுகிறேன் என்று கூற, நிலைமையினை புரிந்து கொண்ட நந்தனன் அதாவது தன்னுடன் கதைக்கும் போது பொலிசாரின் விசாரணை தோரணையையும், கஜதேவசங்கரியுடன் நன்மதிப்புடன் பேசுவதையும் அவதானித்துக் கொண்டு கஜதேவசங்கரியின் சொற்படி நடந்தால் தான் விரைவில் விடுதலையாகிவிட முடியும் என்ற நோக்குடன் கஜதேவ சங்கரி சொன்னது போல் ஸ்ரீறங்காவிடம் "பிஸ்டல்" இருப்பதாகக் கூறி அவரது வீட்டிற்கு பொலிசாரைக் கூட்டிச் சென்றார்.

22-08-99 அன்று அதிகாலை சுமார் 2.00 மணியளவில் ஸ்ரீறங்காவின் வீட்டிற்கு பொலிசார் சென்ற போது பொலிசார் சோதனைக்கு வந்திருப்பதாக எண்ணிய அவர்கள் கதவைத் திறந்ததும் உள்ளே சென்ற பொலிசார் றங்காவைச் சூழ்ந்து நின்று சோதனையிட்டதுடன் வீடு முழுவதும் சோதனை செய்தனர். அத்தோடு பிஸ்டல் பற்றி அவரிடம் விசாரணை செய்ய அவர் அது பற்றி தனக்கு எதுவும் தெரியாது எனத் தெரிவித்தார். பின்னர் அவர்கள் கார் ஒன்றினுள் இருந்த நந்தனனிடம் றங்காவை கூட்டிச் சென்ற போது நந்தனன் றங்காவிடம் , "றங்கா தயவு செய்து ஒத்துக் கொள்ளுங்கள். இப்போது ஒரு பிரச்சினையும் இல்லை. வாருங்கள் பொலிசுக்கு போய் பின்னர் எல்லாவற்றையும் பார்க்கலாம். நான் உங்களை வெளியில் எடுப்பேன்" என்றார். இதனை ஏற்றுக் கொள்ள மறுத்த றங்கா, நீயே கைது செய்யப்பட்டு இருக்கின்ற போது என்னை எப்படி வெளியில் எடுப்பாய் என்று கூறி வாக்குவாதப்பட்டார். இவ்வாறு வாக்குவாதப்பட்ட பின்னர் நந்தனன் பொலிசாரிடம் ஏதோ கூற றங்காவை கைது செய்யாமல் விட்டு விட்டுச் சென்று விட்டனர். பொலிசார் வந்து தன்னிடம் விசாரணை நடத்திய செய்தியை றங்கா தனது நண்பர்களுக்குக் கூறியதுடன் கொழும்பு பல்கலைக்கழக மாணவர் சங்கம், பல்கலைக்கழக விரிவுரையாளர்களினூடாக உரியவர்களிற்கு அறிவித்தும் இருந்தார். நந்தனன் விடுதலையான பின்னரே அவர் றங்கா வீட்டிற்கு பொலிசாருடன் சென்றதற்கான காரணம் தெரியவந்தது.

ஒரு வருடத்திற்கு முன்பு தமிழர் விடுதலைக் கூட்டணியினால் "இளைஞர் பேரவை" என்ற ஒரு அமைப்பினை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முன்னர் இளைஞர் பேரவை என்ற ஒரு அமைப்பு இருந்தது என்பது அனைவரும் அறிந்ததே. இந்தப் புதிய இளைஞர் பேரவையினை ஆரம்பிப்பதனை கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் பத்திரிகைகளினூடாக விமர்சித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இருந்த போதிலும் இளைஞர் பேரவைக்கான நிர்வாக உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான கூட்டம் ஒன்றினை கூட்டியிருந்தனர் கூட்டணியினர். இந்தக் கூட்டத்தில் சட்டக்கல்லூரி, கொழும்பு பல்கலைக்கழகம் என்பவற்றிலிருந்தும் 50ற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு பல்வேறு கோணங்களிலும் கேள்விகளைத் தொடுத்தனர். உதாரணமாக முன்னைய பேரவைக்கு நிகழ்ந்தது என்ன, பரராஜசிங்கம் வெளியிட்டுள்ள செய்திகள் போன்றவற்றை உள்ளடக்கி பல்வேறு கேள்விகளையும் தொடுக்க, பேரவை ஆரம்பிக்க முற்பட்டவர்கள் பதில் சொல்ல முடியாமல் திணற, நிலைமையைப் புரிந்துக் கொண்ட கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் இளைஞர் பேரவையை இன்று தெரிவு செய்யவில்லை, மாணவர்களின் கேள்விகளிற்கு இன்னொரு கூட்டத்தில் பதில் விளக்கம் கொடுத்த பின் பேரவையை ஆரம்பிக்கலாம் என்று கூறி நிலைமையைச் சமாளித்து விட்டார். ஆனால் அதன்பின் இன்று வரை பேரவை ஆரம்பிக்கப்படவில்லை. அன்று கூட்டணியைத் திக்கு முக்காடச் செய்யும் கேள்வி கேட்டவர்களில் றங்காவும் ஒருவர்.

கஜதேவசங்கரி விடுதலைக் கூட்டணி சார்பாக அரசியலில் ஈடுபடும்படி நந்தனனைக் கேட்டதாகவும், நந்தனன் மறுத்து விட்டதாகவும் அதனால் தான் அவர் பொலிசில் இருக்க வேண்டியேற்பட்டது என்றும் அவரது தந்தை தணிகாசலம் கூறியிருந்தார். ஆனால் றங்காவிடம் பிஸ்டல் இருப்பதாகக் கூறும்படி கஜதேவசங்கரி தன்னை வற்புறுத்தினார் என்று நந்தனன் பொலிசாரிடம் கூறியுள்ளார். இதனால் தான் பொலிசார் றங்காவை விட்டுவிட்டு சென்றுள்ளனர்.

றங்கா கைது செய்யப்படவில்லை. மாறாக தான் தான் நந்தனனிடம் றங்காவிடம் பிஸ்டல் இருப்பதாக சொல்ல சொன்னதை பொலிசாரிடம் கஜதேவசங்கரி கூறிவிட்டார். இதனால் விடயம் பெரிதாகப் போகின்றது என்பதை உணர்ந்த கஜதேவசங்கரி பிஸ்டல் கணேந்திராவிடம் இருக்கின்றது என்று பொலிசாரை கணேந்திராவின் வீட்டிற்கு கூட்டிச் சென்ற போது, கணேந்திரா அனுமதி பெற்ற பிஸ்டல் வைத்து இருக்கிறார் என்பது பொலிசாரிற்கு தெரியவந்துள்ளது.

பின்னர் கணேந்திரா ஆனந்தசங்கரி ஆகியோரின் முயற்சியினால் கஜதேவசங்கரி பொலிசாரினால் விடுதலை செய்யப்பட்டார். அத்தோடு சிறைச்சாலையினுள் இருக்கும் போது அவர் ஒரு கௌரவ விருந்தினர் போன்றும் நடத்தப்பட்டுள்ளார். ஏனையவர்கள் கைதிகள் போன்று நடத்தப்பட்டுள்ளனர். அத்தோடு ஏனைய அனைவரது மீதும் வழக்கு தொடரப்பட்ட போதும் கஜதேவசங்கரி மீது வழக்குத் தொடரப்படாது அவர் கடைசி நபராக விடுதலை செய்யப்பட்டது போல் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தந்தை செல்வாவின் வழிவந்த ஜனநாயகக் கட்சி, ஆயுதம் ஏந்தாத கட்சி. ஆனபடியால் ஏனைய தமிழ் கட்சிகள் எவற்றுடனும் இணைய மாட்டோம் என்று கூறிய கட்சியினரிடம் இப்போது பிஸ்டல் இருக்கிறது.

நீலன் கொலையுடன் கைது செய்யப்பட்ட கஜதேவசங்கரி இச்சம்பவங்களுடன் தொடர்பற்ற அப்பாவிகளை ஏன் மாட்டிவிட்டார்?

நந்தனனிடம் பிஸ்ரலைக் கொடுத்ததாகவும், நந்தனன் ரங்காவிடம் கொடுத்ததாகவும் ஏன் பொலிஸாருக்குப் பொய் சொல்லச் சொன்னார்?

நீலன் கொலையுடன் கைது-செய்யப்பட்டவருக்கு தடுப்புக்காவலில் ராஜ மரியாதை கிடைத்தது எவ்வாறு?

இவருடன் கைது செய்யப்பட்டவர்கள் அனைவர் மீதும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டவேளை இவர் வழக்கு எதுவுமின்றி விடுதலையானது எப்படி?

கஜதேவசங்கரி, கணேந்திரா போன்றவர்கள் பொலிசாருடன் இணைந்து செயற்படுகிறார்களா?

அதனூடாகத் தமக்குப் பிடிக்காதவர்களையும், தமக்கு பிரச்சினை தருபவர்களையும் பயங்கரவாதிகளாக சித்திரித்து உள்ளே தள்ளி விடுகிறார்களா?

ஆனந்தசங்கரிக்கு இதில் உள்ள தொடர்பு என்ன?

இந்தக் கேள்விகள் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

இவற்றுக்குப் பதில் தான் என்ன? ■

## திட்ட...

தொடர்ந்து அவரது சம்பளம் கிடைக்கக் கூடியதாகவே செய்யப்பட்டுள்ளது.

ஆகவே, இராணுவத் தொழில் பார்ப்பதன் மூலமே ஒரு சமூகம் அதிகமாக இயங்க வைக்கப்பட்டுள்ள நிலையில் இனப் பிரச்சினைத் தீர்வென்பது பல சிக்கல்களை ஏற்படுத்தவே செய்யும். இப்படிப் போரை நம்பி வாழும் சமூகத்தைக் கொண்ட ஒரு நாட்டில் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான ஆதரவு கிடைப்பது அரிதாகவே இருக்கும். இவ்வாறு வருவாய்க்கு இராணுவத் தொழிலை நம்பியிருப்பவர்களைத் திசை திருப்பவேண்டுமானால், அரசு அவர்களுக்குத் தற்போது அவர்கள் பெறும் வருவாயை விடக் கூடுதலான நன்மை தரக் கூடிய வாய்ப்புகளைப் பெற்றுத் தர முயல வேண்டும்.

ஆனால், இத்தகைய யோசனைகள் எவையும் நமது அரசியல் கட்சிகளிடம் இருப்பதாய் இல்லை. இந்த நிலை தொடருமானால், பிரபாகரனால் வெகு சீக்கிரத்தில் நாடு துண்டாடப்பட்டுத் தனிநாடொன்று பிரகடனப்படுத்துவதைத் தடுக்க முடியாது.

இதை இந்தியாவோ, வேறு நாடுகளோ அங்கீகரிக்குமா ? என்பவையெல்லாம் முக்கியமானவையல்ல. இன்றைய அரசினதும், ஏனைய கட்சிகளினதும், குறுகிய போக்குகள், பிரிந்து போவதைத் தவிர வேறு வழியில்லை என்பதையே வழியாகக் கொள்ள வைக்கும்.

- விக்ரர் ஐவன் -

'ராவய' பத்திரிகை ஆசிரியர்.

வெளியிடுபவர்: ச.பாலகிருஷ்ணன், இல.18/02, அலோசாலை, கொழும்பு 03, அச்சுப்பதிவு: பிறின்ற்இன், இல.07, கெகட்டிய இடம், சிறிமல் உயன, இரத்மலானை. 23.11.1999